கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(19.08.2018 - 19 ஆவணி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 190, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

ஞான ஒளி
ඥාන ඔලි
GNANA OLI
ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05



திருவிழாவின் இறுதியில் கர்தினால் ஆண்டகை அன்னையின் திருச்சுரூபத்தினால் அங்கு கூடியிருந்த மக்களுக்கு ஆசீரை வழங்கினார்.

# ஒவ்வொரு குழந்தையும் அக்குடும்பத்திற்கு வரப்பிரசாதமே

## மருதமடு திருவிழா திருப்பலி மறையுரையில் கர்தினால்....

மருதமடு திருத்தலத்தின் வருடாந்த ஆவணி மாத திருவிழா 15.8.2018 அன்று புதன்கிழமை சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய சிறப்பு திருப்பலி கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையுடன், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை மற்றும் குருநாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு ஹரல்ட் அந்தனி பெரேரா ஆண்டகை, அநுராதபுர மறைமாவட்ட ஆயர் மேதகு நோபட் அந்திராடி ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன்ட் விக்கிரமசிங்க ஆண்டகை, கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் J.D. அந்தனி ஆண்டகை இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

அன்றைய திருப்பலியில் பேராயர் அவர்கள் மறையுரையில் ஒவ்வொரு குழந்தையும் ஒரு நாட்டிற்கு வரப்பிரசாதமாகும். ஒரு திருமண தம்பதிகளுக்கு எவ்வளவு சொத்துக்களும்,...

15

# மரண தண்டனை குறித்து இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் செய்தி

இலங்கை கத்தோலிக்கப் பேரவையானது மரண தண்டனையை அனுமதிக்காது, தண்டனைக்கு சார்பாக இருக்காது. நாட்டில் மரண தண்டனையை அமுல்படுத்துவதற்கான செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற இத்தருணத்தில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அங்கத்தவர்களாகிய நாங்கள் இவ்வறிக்கையை முன்வைக்கின்றோம். எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருச்சபையின் கத்தோலிக்க மறைப்போதகத்தில் இலக்கம் 2267ல் புதிய மாற்றங்களை செய்துள்ளார்.

இவ் உலகில் எம் நல்லாயனால் (திருத்தந்தையால்) அறிவிக்கப்பட்ட விடயத்தை நாம் மீண்டும் அறியத் தருகின்றோம். பொதுமக்களின் வாழ்க்கையை பாதுகாப்பதற்காக, தீர்ப்பிற்கேற்ப சட்டத்தின் முன்னிலையில் சட்டமீறல்கள் மற்றும் சட்டப்படி கடுமையாக தண்டிக்கப்பட வேண்டிய குற்றத்திற்கு தண்டனை வழங்கவேண்டிய விதிவிலக்கான சந்தர்ப்பங்களின் போது வேறு மாற்று வழிகள் இல்லாதிருப்பின் மரண தண்டனையை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மேலதிகாரிகளுக்கு இருந்தது.

“அவ்வாறான கடுமையான குற்றங்களை செய்துள்ள குற்றவாளியின் உண்மையான மனிதாபிமானத்திற்கு கேடு விளைவிப்பதற்கு வாய்ப்பு உருவாகுவதில்லை எனும் விழிப்புணர்வுடன் இருக்கின்றதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அத்துடன் சட்டதிட்டங்களை மீறும் போது வழங்கப்படும் தண்டனைகள் குறித்து புதிய எண்ணக்கருக்கள் உருவாகியுள்ளன. மேலும் நாட்டின்...

14

# மருதமடு திருத்தலத்தில் வரவேற்பு மாதாவுக்காக புதிய அமைவிடம்



மடு மாதா திருத்தலத்தில் 13.08.2018 திங்கட்கிழமை மாலையில் வரவேற்பு மாதா சந்தியில் திருத்தியமைக்கப்பட்ட வரவேற்பு மாதாவுக்காக புதிய அமைவிடம் மன்னார் ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை அவர்களால் திறந்த வைக்கப்பட்டது.

# நோயுற்றோரை பராமரிப்பது என்றும் இரு (விண்ணக, மண்ணக) உலகிற்கும் பலனளிக்கும் தர்மச் செயலாகும்

## அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை நீர்கொழும்பு அரச வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவு திறப்பு விழாவின்போது தெரிவித்தார்.

கடந்த தினம் சீதுவை “சுப்புவத் அரண” நடுநிலையத்தின் அருட்பணி டெரல் கூஞ்ஞே அவர்களின் வழிகாட்டலின் கீழ் நீர்கொழும்பு அரச வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவு (9ம் பிரிவு) முழுமையாக புணரமைக்கப்பட்டு, நவீன வித கட்டில்கள் மற்றும் சகல வசதிகளுடன் அமைந்த அவசர சிகிச்சைப் பிரிவை வைத்தியசாலை அதிகாரிகளுக்கு கையளிக்கும் மற்றும் அப்பிரிவை ஆசீர்வதிக்கும், அதனை திறந்துவைக்கும் வைபவத்தில் கலந்துகொண்ட போதே கர்தினால் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# மடுத்திருத்தல யாத்திரர்களுக்காக 300 புதிய தங்குமிட விடுதிகள்



மடுத்திருத்தலத்திற்கு வருகைதரும் யாத்திரர்களின் நலன் கருதி இந்தியாவின் நன்கொடையின் மூலம் மடுத்திருத்தலத்தில் 300 வீடுகள் கட்டுவதற்கான ஒப்பந்தம் கொழும்பு இந்திய மகா கொமிசாரிஸ் காரியாலயத்தில் கைச்சாத்திடப்பட்டது....

15

# 2020ல் திருத்தந்தையின்

## செபக்கருத்துக்களுக்கு ஆலோசனைகள்



2020ம் ஆண்டில் திருத்தந்தை வெளியிடவிருக்கும் மாத செபக்கருத்துக்களுக்கு விசுவாசிகளின் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

ஒவ்வொரு மாதமும் திருத்தந்தை அறிவிக்கும் செபக்கருத்துக்களை ஒருங்கிணைக்கும் இயேசு சபை தலைமை அலுவலகம், 2020ம் ஆண்டு,...

15

# வாழ்த்துகின்றோம்

## ஆயர் திருநிலைப்படுத்தல்



ஆவணி 31 கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தனது ஆயர் திருநிலைப்படுத்தலின் 27வது ஆண்டு நினைவு நாளை கொண்டாடுகின்றார்.



ஆவணி 31 காலி மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்சிலி றேமன்ட் விக்கிரமசிங்க ஆண்டகை தனது ஆயர் திருநிலைப்படுத்தல் நினைவுநாளையும் பெயர் கொண்ட திருநாளையும் கொண்டாடுகின்றார்.

இவர்களை ஞானஒளி இறையாசீருடன் வாழ்த்துகின்றது.

ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள் (தி.பா 34)

# இலங்கையின் கரிடாஸ் நிறுவனத்தின் 50 வது வருட நிறை (பொன்விழா) யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படவுள்ளது.




இலங்கையின் கரிடாஸ் (செடெக்) நிறுவனத்தின் 50 வது வருட நிறைவு பொன்விழாவானது இவ்வருடம் கார்த்திகை மாதம் 29ம் திகதி, "இறைவனின் அன்பு எல்லோருக்கும் உரியது" என்ற கருப்பொருளுக்கு கீழ் கொண்டாடப்படவுள்ளது.

இக்கொண்டாட்டமானது 13 மறைமாவட்ட நடுநிலையங்களை உள்ளடக்கிய பாத யாத்திரையுடன் செடெக்கில் அவரவருக்குரிய ஒழுங்கமைப்புக்களுடன் கொண்டாடப்படும். இதன் முதற் படியாக, கரிடாஸ், யாழ்ப்பாணம் - HUDEC ல் சமாதான பாதயாத்திரையும், கண்காட்சியும், குடும்ப ஒன்றுகூடலும் அம்மறைமாவட்ட இயக்குனரான அருட்பணி. இயூஜின் பிரான்சிஸ் அவர்களின் வழிகாட்டலுடனும், தேசிய நிறுவனத்தின் SEDEC பங்களிப்புனும் நடைபெற்றது. இந்நிகழ்வில் இலங்கையின் காரிடாஸ் SEDEC இயக்குனர் அருட்தந்தை மகேந்திர குணதிலக அடிகளாரும் பங்குகொண்டு சிறப்பித்தார்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து**




கிறிஸ்தவ மத வெளிவிவகார அமைச்சின் இயக்குனராக பணியாற்றிய ஏ.ஆர் குணவர்தன அவர்கள் 38 வருடங்களாக அரச பணி புரிந்து, ஓய்வு பெற்றதையிட்டு அவ் அமைச்சின் சேவையாளர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட நன்றி நவிலும் நிகழ்வானது கொழும்பு புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியக மண்டபத்தில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் அவர் கொழும்பு உயர்மறை-மாவட்டத்திற்கு ஆற்றிய சேவையை பாராட்டியும், அதற்கு நன்றியும் தெரிவித்து கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு மெக்வல்ஸ் சில்வா ஆண்டகை உரையாற்றினார். மேதகு ஆயர் அவர்கள் திரு. குணவர்த்தன அவர்களுக்கு வாழ்த்துக் கூறுவதை படத்தில் காணலாம்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து**

## இரத்தினபுரி பேராலய வருடாந்த விழாவன்று நடைபெற்ற விசேட நிகழ்வு





இரத்தினபுரி புனித இராயப்பர் சின்னப்பர் பேராலய வருடாந்த விழாவுக்கான கொடியேற்றம் 22 ஆடி மாதம் ஆரம்பிக்கப்பட்டு, தினமும் நவநாளும் திருப்பலியும் நடைபெற்றது. 28ந் திகதி மாலை ஆராதனை இடம்பெற்றது. 29 ஞாயிறன்று திருவிழா திருப்பலியை இரத்தினபுரி ஆயர் மேதகு கிளிட்டஸ் பெரேரா ஆண்டகையும், அருட்பணி. சவேரியார் அடிகளாரும் கார்மேல் சபை தலைவர் (இந்திய நாட்டைச் சேர்ந்தவர்) பங்கு அருட்பணி. எனஸ்லி சுரங்க அடிகளாரும் இணைந்து ஒப்புக்கொடுத்தனர். திருப்பலியை ஆரம்பிக்க முன் விசேட நிகழ்வாக மூத்தோர் சபையைச் சேர்ந்தவர்கள் ஆலய முன் முற்றத்தில் புதிய கெபி..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## மன்னார் மறைமாவட்டத்தில் வெள்ளிவிழா காணும் அருட்தந்தை ச.மரியதாசன் சீமான்



அருட்தந்தை ச.மரியதாசன் சீமான் அவர்கள் மன்னார் மறைமாவட்டம் முருங்கன் மறைகோட்டத்திலுள்ள அளவக்கை பங்கு மாவிலங்கேணி எனும் கிராமத்தில் காலம் சென்றவர்களான செபமாலை சவிரி, அந்தோனியா (நல்லம்மா) விற்கும் மகனாக 1962ஆம் ஆண்டு மார்கழி மாதம் 02ஆம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்ப கல்வியை மன்.்மாவிலங்கேணி றோ.ம.க.த.க வித்தியாலயத்திலும், இடைநிலை கல்வியை முருங்கன் மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் கற்றார். குருத்துவ பயிற்சியை மன்னார் முதல் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் அனுமதியுடன் யாழ் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவ கல்லூரியில் கற்று 1992ஆம் ஆண்டு மன்னார் முதல் ஆயரால் மடு திருப்பதியில் திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்டார். மன்னார் இரண்டாவது ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களால் முதல் குருவாக 1993.08.12ஆம் திகதி மடுவில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவரே மாவிலங்கேணி கிராமத்தின் முதல் குருவும் ஆவார். இவர் மன்னார் பேராலயத்தின் உதவிப்பங்குத்தந்தை-யாகவும், தேவன்பிட்டி, அரிப்பு, சிலாவத்துறை, மடு, முருங்கன், பேசாலை, கீளியன் குடியிருப்பு, ஆட்காட்டிவெளி, கற்கிடந்தகுளம், மாந்தை ஆகிய பங்குகளில் பணியாற்றி தற்போது பள்ளிமுனை பங்கின் பங்குத்தந்தையாக பணியாற்றி வருகின்றார். சிறப்பாக கீளியன்குடியிருப்பு, மாந்தை பங்குகளின் ஆரம்ப பங்குத்தந்தையாக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. அத்துடன் மறைமாவட்டத்தின் பல புதிய ஆலயங்களை ஆரம்பித்து அவ்விடங்களில் மக்கள் ஒன்றுகூடி செபிப்பதற்கு வழிவகுத்துள்ளார்.

பங்குப் பணியோடு 10 ஆண்டுகளுக்கு மேலாக மன்னார் மறைமாவட்ட காணிகளுக்கு பொறுப்பாக இருந்து மறைமாவட்ட காணிகளை இனங்கண்டு அவற்றை பாதுகாத்து காணி ஆவணங்களை ஒழுங்கு படுத்தி காணிகளை நல்லமுறையில் பயன்படுத்தி மறைமாவட்டத்திற்கும் மக்களுக்கும் பலன் அளிக்கும் வகையில் சில திட்டங்களை வகுத்து செயற்படுத்தும் ஆர்வம் உடையவர். குறிப்பாக மன்னார் மறைமாவட்-டத்திற்கு சொந்தமாக இருக்கும் மடுமாதா எரிபொருள் நிரப்பும் நிலையத்தை ஆயர் மற்றும் குருமுதல்வரின் அனுமதியோடு கட்டிமுடித்து அது நல்லமுறையில் இயங்க இன்றும் அதற்கு பொறுப்பாக இருந்துவருகின்றார். எமது புதிய ஆயர் அவர்களும் இந்த நிறுவனத்தை தொடர்ந்து பொறுப்புடன் நடத்த இவரை பணித்துள்ளார். இவர் தனது குருத்துவ வெள்ளி விழா நன்றித் திருப்பலியை தனது சொந்த கிராமமாகிய மாவிலங்கேணி புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இம்மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஒப்புக்கொடுப்பார்.

**தகவல் : சிந்தியா**

# இரத்தினபுரி மறைமாவட்டத்தில் இலங்கை கரித்தாஸ் நிறுவனத்தின் யூபிலி விழா









கரித்தாஸ் நிறுவனத்தின் யூபிலி விழாவினை இரத்தினபுரி செத்மினி நிறுவனம் சமாதான பாதயாத்திரை, கண்காட்சி, குடும்ப தினம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஆவணி 10ந் திகதி கொண்டாடியது. விழாவுக்கு பிரதம அதிதியாக இரத்தினபுரி ஆயர் மேதகு கிளிட்டஸ் சந்திரசிறி பெரேரா (OSB) ஆண்டகையும்...

15



வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலய திருவிழாவை முன்னிட்டு மாலை ஆராதனை 11.08.2018 அன்று மாலை 6.30 மணிக்கு அருட்பணி. சிசில் ஜோய் பெரேரா அடிகளாரின் தலைமையில் (இயக்குனர் "தஹம் செவன" இடைநிலை குருமடம், களுத்துறை) நடைபெற்றது. திருவிழாத் சிறப்புத் திருப்பலி 12.08.2018 அன்று காலை 8.00 மணிக்கு அருட்பணி. கிஹான் நிலுஷ பர்னாந்து, அருட்பணி. அமில மதுரங்க பெரேரா, மற்றும் அருட்பணி. நாகரட்ணம் மனோகுமாரன் (பங்குத்தந்தை), ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். அருட்பணி. புத்திக்க, ஜுட் கிரிஷாந்த மற்றும் குருக்கள் ஆகியோரும் இணைந்துகொண்டனர். 11.08.2018 அன்று முதல்நன்மை பெற்றுக்கொண்ட மாணவர்களையும், திருவிழா மாலை ஆராதனை, மற்றும் திருவிழா திருப்பலி ஆகியவற்றின் படங்களையும் காணலாம்.

**தகவல் மற்றும் படங்கள் : மைக்கல் பர்னாந்து**

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
19 ஆவணி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# மரண தண்டனை என்பது கத்தோலிக்க திருச்சபையினால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

தனது சந்தோஷம் தேவைகள் விருப்பங்கள் அனைத்தையும் சுருக்கிக்கொண்டு பிறர் நலனில் அக்கறையும் கவனமும் கொள்பவர்கள் இறைவனின் இதயத்தில் இடம்பிடித்துக் கொண்டவர்கள். இவர்கள்தான் இறைவனின் அன்புக்குரியவர்கள். "என்னை நோக்கி ஆண்டவரே ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை. மாறாக விண்ணுலகிலுள்ள என் தந்தையின் திருவுளத்தின்படி செயல்படுவோரே செல்வர் (மத்.7:21) கடவுளின் விருப்பப்படி நடப்போர் தான் அவரின் தாயும் சகோதரரும் ஆவார்" என்றார் நமதாண்டவர் இயேசு. கடவுளின் வார்த்தையை கேட்பது மட்டுமல்ல அதைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள் உண்மையிலேயே கடவுளுக்குள் வாழ்பவர்கள் ஆவார்கள். உயிரும் ஆற்றலும் வல்லமையும் கொண்ட இறைவார்த்தையில் நம்பிக்கைகொண்டு நிலைத்து நின்று வாழ்ந்தால் அவ்வாழ்வு சீரும் சிறப்பும் கொண்டதாக அமையும் என புனித பவுல் அடிகளார் கூறுகிறார். அவ்வாறு வாழ்ந்தவர் தான் அன்னை மரியா. அவரது விண்ணேற்பு விழாவை நாம் கொண்டாடுவதில் பெருமையடைகின்றோம்.

நாம் தினமும் இறைவனின் வார்த்தையை ஏதோ ஒருவிதத்தில் வாசிக்கின்றோம் அல்லது பிறர் கூற கேட்டிருக்கின்றோம். ஆனால் அவ்வார்த்தையை வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ முயற்சித்திருக்கின்றோமோ? அவரது சகோதரன் சகோதரியாக வாழ உற்சாகம் எடுத்திருக்கின்றோமா? என்பது சிந்தனைக்குரியது.

இதுமட்டுமல்ல நாம் அன்பால் உலகத்தையே வெல்லலாம் என்ற வாழ்வியல் சிந்தனையை திருவிவிலியத்திலிருந்து காணக்கூடியதாக இருக்கின்றது. மனிதன் பிறரோடு அன்பு செய்து வாழ அழைக்கப்பட்டுள்ளான். அத்தகையதோர் வாழ்க்கையை வாழும்போதோ அல்லது முயற்சிக்கும்போதோ ஆயிரம் தடைகள் வாழ்க்கையில் வந்துபோகும். இன்று இந்த அன்பு என்ற சொத்தை சொந்தமாக்கிக் கொள்ளாமல் பல குடும்பங்கள் உறவுப்போர்களில் சிக்கிக்கொண்டுள்ளன.

சமுதாயத்தில் எத்தனை எத்தனை கலவரங்கள் கத்தியெடுப்புகள் சாதிச்சண்டைகள். நாம் நம் அயலவரை அன்பு செய்யத் தயங்கினால் தாமதித்தால் இறைவனும் நம்மை அன்பு செய்ய தாமதிப்பார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. மற்றவர் எம்மை அன்பு செய்யவில்லை மதிக்கவில்லை என்று நாம் அடிக்கடி புலம்புகின்றோம் ஏன்? நாம் மற்றவரை அன்பு செய்தும் மதித்தும் இருந்திருந்தால் எமக்கும் அன்பும் மதிப்பும் கிடைத்திருக்கும்.

நம் நாட்டின் சூழமைவை நோக்கும் போது கொலை கொள்ளை அதிகரித்தமையினால் மரண தண்டனை நடைமுறைப்படுத்த ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை காண்கூடு. மரண தண்டனை என்பது கத்தோலிக்க திருச்சபையினால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். எனவே நாம் அவற்றுக்காக இறைவனிடம் மன்றாட அழைக்கப்பட்டுள்ளோம். மனித உயிர் மதிப்புமிக்கது. அது போனால் திரும்பி வராது என்பதை மனதில் இருத்தி செயற்பட வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களும், பேசும் ஒவ்வொரு வார்த்தைகளும் அன்பை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் அன்பே சிலுவை தான். சிலுவை அன்பின் அகலத்தையும் ஆழத்தையும் காட்டும் புனித சின்னம். இயேசுவின் அன்பை வாழ்வில் பிரதிப்பலித்திடும்போது நமக்கும் துன்பங்கள் வேதனைகள் ஏற்படலாம். எதையும் இறைவனின் துணைகொண்டு வென்றிடலாம். எனவே அன்பு செய்து வாழ்வோம். பிறந்ததன் பயனைப் பெற்றிடுவோம்.

இறையாசீருடன் ஆசிரியர்



# உன் நம்பிக்கை உன்னை குணமாக்கிற்கு

ஒருவன் வாழ்வில் எதை இழந்தாலும் நம்பிக்கையை மட்டும் இழந்துவிடக்கூடாது. ஒருவன் வாழ்வில் எதை விடாவிட்டாலும் அவநம்பிக்கையை மட்டும் கண்டிப்பாக விடவேண்டும். காரணம் நம்பிக்கைதான் வாழ்வைக் கொடுக்கும். அவநம்பிக்கை வாழ்வைக் கெடுக்கும்.

நோய்வாய்ப்பட்டவன் மருத்துவரிடம் நம்பிக்கையோடு செல்லும்போதே பாதி நோய் அவனைவிட்டு நீங்கிவிடுகிறது. படிப்பில் மந்தமாய் உள்ளவன் நல்ல ஆசிரியரிடம் நம்பிக்கையோடு செல்லும்போதே அறியாமை நீங்கிவிடுகிறது.

அதுபோல் துன்பம், வருத்தம், கவலை, சோகம், சோதனை, வேதனை, நோய் வரும் காலத்தில் இறைவனை நம்பிக்கையோடு நாடும்போதே அவையெல்லாம் பாதியாக அல்ல, முழுமையாகக் குறைந்துவிடுகின்றன. காரணம் அவர்தான் மருத்துவர்க்கெல்லாம் சிறந்த மருத்துவர் ஆயிற்றே. அவரே கூறியிருக்கிறார். "மருத்துவர் நோயுற்றவர்க்கன்று நோயுற்றவர்க்கே தேவை. நீதிமான்களை அன்று பாவிகளையே அழைக்க வந்தேன்"

இம்மாதம் 26ம் திகதி தேவத்தை பெசிலிக்காவில் நோயாளர் தினம் சிறப்பிக்கப்படும் வேளையில் பல்வேறு இடங்களில் இருந்து உடல் உள நோயாளர்கள் முழு நம்பிக்கையோடு தேவத்தை பெசிலிக்காவில் கூடி இருப்பதை நாம் காணலாம். காரணம், இறைவன் என்னை குணப்படுத்துவார், நான் குணம் பெறுவேன் என் வேதனைகள், வருத்தங்கள், கவலைகள், சோதனைகள் நீங்கி விடும் என்று நற்கருணை நாதரிடம் தங்களை ஒப்படைத்து செபிக்கின்றார்கள். காரணம் அவர்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கை தான் விசுவாசிகளை அவ்விடம் வர வைத்திருக்கிறது. விவிலியத்தில் இயேசு குணப்படுத்திய நபர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை சற்று பார்ப்போம்.

### 1. இரத்தப்போக்குள்ள பெண்ணின் குணம்

இங்கு இப்பெண்ணின் ஆழ்ந்த இறை நம்பிக்கையை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது. பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் அவதிப்பட்ட பெண் அவள். மருத்துவர்கள் எல்லாம் கைவிட்டனர். அப்படிப்பட்ட சூழலில்தான் இயேசுவைப் பார்க்கின்றாள். பார்த்தவுடனேயே அவளுக்குள் நம்பிக்கை ஒளி பிறக்கின்றது. அதை தான் மனதுக்குள்ளே சொல்லி செயலில் வெளிப்படுத்துகின்றாள்.

"அவர் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு மக்கள் கூட்டத்துக்கிடையில் அவருக்குப் பின்னால் வந்து அவரது மேலுடையைத் தொட்டாள். ஏனெனில், நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே நலம் பெறுவேன் என்று அப்பெண் எண்ணிக்கொண்டாள்" இவளுடைய இந்த அசைக்க முடியாத, ஆழமான நம்பிக்கைதான் அவளுக்கு சுகம் அளித்தது. அதை இயேசுவே கூறுகின்றார்.

"மகளே, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கியது, அமைதியுடன் நீ போ. நீ நோய் நீக்கி நலமாயிரு" என்றார்.

### 2. இறந்த யாயீர் மகளின் குணம்.

யாயீர் என்பவன் தொழுகைக்கூடத் தலைவர்களுள் ஒருவன். கண்டிப்பாக அவன் யூதன். அவன் இயேசுவையும் இயேசு செய்த புதுமைகளையும், கேள்விப்பட்டு அறிந்திருப்பான். அப்படிப்பட்டவன் தன் மகள் சாகுந் தருவாயில் இருப்பதை இயேசுவுக்கு உணர்த்தி அவளை குணமாக்கும்படி வேண்டுகின்றான். இங்கு இவனுக்கும் இறை நம்பிக்கை ஆழமாக உள்ளது. அதை தன் சொல்லில் வெளிப்படுத்துகின்றான்.


"நீர் வந்து அவள்மீது உம் கைகளை வையும். அப்போது அவள் நலம் பெற்றுப் பிழைத்துக் கொள்வாள்" என்று வேண்டித் தன் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றான். அவனின் நம்பிக்கையின் பொருட்டுதான் இயேசுவும் அவளை குணப்படுத்த செல்லுகின்றார். ஆனால் இயேசு வர காலம் தாழ்த்தவே அச்சிறுமி இறந்துவிடுகிறாள். இவைகள்தான் ஒருவரின் நம்பிக்கை வாழ்விலே வருகின்ற சோதனைகள். நாம் கவனமாக இல்லாவிட்டால் நமது நம்பிக்கை வீணாகிவிடும். அர்த்தமற்றுப்போகும். மகள் இறந்துவிட்ட செய்தியை வீட்டிலிருந்து வந்த ஆட்கள் தெரிவிக்கின்றனர். "உம்முடைய மகள் இறந்துவிட்டாள்....



தொடர்ச்சி 15ம் பக்கம்..

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# அரசியான அன்னை மரியா



அன்னை மரியாவின் ஆண்டாகக் கொண்டாடப்பட்ட 1954ஆம் ஆண்டில் திருத்தந்தை 12ஆம் பியுஸ் இவ்விழாவை ஏற்படுத்தினார். அன்றுமுதல் இத்திருநாள் மே 31ஆம் நாள் கொண்டாடப்பட்டு வந்தது. மாதாவின் வணக்க மாதம் என்று அனுசரிக்கப்படும் மே மாதத்தின் கொடுமுடியான இறுதிநாள் கன்னிமரியாவை அரசியாக ஏற்றுக்கொண்டாட தகுதியானது என்று கருதி திருத்தந்தை இந்நாளைத் தேர்ந்தெடுத்தார்.

ஆனால் திருத்தியமைக்கப்பட்ட புனிதர்களின் விழாப் பட்டியலில் இது ஆவணி 22ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. மே மாதம் 31ஆம் திகதிக்கு கன்னி மரியா எலிசபெத்தைச் சந்தித்த நிகழ்வு விழா மாற்றப்பட்டது. அதோடு அரசியான தாய மரியாவின் விழா ஆவணி 22ஆம் திகதிக்கு மாற்றப்பட்டதற்கு வேறொரு முக்கியக் காரணம் உண்டு.

அதாவது, எட்டு நாள்களுக்கு முன்புதான் அன்னை மரியா உடலோடும், ஆன்மாவோடும் விண்ணேற்படைந்த விழாவைக் கொண்டாடினோம். விண்ணேற்பின் பயனாகத்தான் மரியா அரசியானார். 'அரசு', 'ஆட்சி' என்பது அதிகாரத்திலும் அடக்குமுறையிலும் அடங்குவதில்லை. அனைத்து எதிர்மறைக் காரியங்களை மேற்கொள்வதில் அரசும், ஆட்சியும் அடங்கியுள்ளது. விண்ணேற்படைந்த மரியா சாவின் மீதும், அழிவின் மீதும் வெற்றி கொண்டார். எனவே அங்கு அவர் ஓர் அரசி. ஆகவே விண்ணேற்பு விழாவுக்குப்பின் மரியா அரசியான விழாவைக் கொண்டாடுவது சிறந்ததாகும். இவ்வாறு மரியாவின் விண்ணேற்புக்கும், அவரது அரசுரிமைக்கும் உள்ள தொடர்பு இப்பொழுது மிகத் தெளிவாகிறது.

## திருச்சபையின் போதனையில் மரியா

கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் எபேசு பொதுச்சங்கம் மரியாவை இறைவனின் அன்னை என்று அழைப்பது பொருத்தம் என முடிவெடுத்தபோதே அரசியென்று மரியாவுக்கு புகழாரம் சூட்டப்பட்டது. இதனால் மரியா படைப்புகளுக்கெல்லாம் மேலானவர் என்றும், அனைவரின் வாழ்வில் தோழமையும், அக்கறையும் கொண்டவர் என்றும் கிறிஸ்தவ மக்கள் கண்டுணர்ந்தார்கள்.

"பெண்களுக்குள் ஆசி பெற்றவராகிய உம்மிடம் நான் வருவதுபோக நீரோ என்னைத் தேடிவந்தீர். நீர் ஆண்டவரின் தாயல்லவா? நீர் ஆண்டவள் அல்லவா?" என்று எலிசபெத் கூறியதாக மறைத்தந்தை ஆரிஜன் விளக்கம் கொடுத்துள்ளார்.

"படைத்தவரின் தாயாக ஆனபோது உண்மையில் படைப்புகளின் அரசியாகவும் உயர்வு பெற்றார். இறைமகன் என்ற காரணத்திற்காக அரசருக்குரிய மகிமையை இயேசு பெறுகிறார் என்பது மட்டுமன்று, மனுக்குல மீட்பர் என்ற காரணத்தினாலும் அரச மகிமைப் பெறுகிறார்" என்று புனித ஜோன் தமாசின் கூறியுள்ளார்.

"அது போலவே, மரியா இறைவனின் தாய் என்ற காரணத்திற்காக அரசி என்ற பெருமையைப் பெறுகிறார். மேலும், புதிய ஆதாமின் மீட்புப் பணியில் அவர் கல்வாரி மட்டும் புதிய ஏவாளாக பங்கேற்க, இறைமகனே அழைப்புக் கொடுத்தார். இவ்வாறு மீட்புப் பணியில் தமது ஒத்துழைப்பை நல்கினார் மரியா".

திருச்சபையின் இடைக்காலத்தில் வாழ்ந்தவர்கள் மரியன்னையை அரசியாக அழைப்பதின் வழியாக அவருடைய பரிந்துபேசும் ஆற்றலில் கொண்டிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தினர். அழிவுற்றுக் கொண்டிருந்த தம் இனத்தவரை எஸ்தர் அரசி மன்னனிடம் பரிந்து மன்றாடி காப்பாற்றினதுபோல் மரியன்னை அரசியும், அரசரான தம் திருமகனிடம் பரிந்து பேசுவார். எனவே மரியா நிகரற்ற ஓர் இணைப்பாளராகத் திகழ்கிறார். மரியா ஒரே சமயத்தில் அழகும், ஆற்றலும் உடையவர். விண்ணேற்படைந்த எட்டாம் நாள் அவர் மீட்பின் பலனைப் பெற்று சிறப்புடையவராகவும், சிலுவை மரத்தின் சிறந்த கனியாகவும் விளங்குகிறார். விண்மீன்கள் புடைசூழ பயணிக்கும் இறைமக்களுக்கு ஆறுதல் அளிக்கும் நம்பிக்கையாகத் திகழ்கிறார். அவர் இறைமகனின் சமாதான அரசரின் தாய் ஆவார்.

திருத்தந்தை 12ஆம் பியுஸ் தமது திருமடலில் இவ்வாறு கூறுகிறார். "இயேசு கிறிஸ்து நிறைவான, முழுமையான, நேரிடையான பொருளில் அரசர் என்பது ஐயமற்ற நமது விசுவாச உண்மையாகும். ஏனெனில், அவர் உண்மையாகவே கடவுளும், மனிதரும் ஆவார். அன்னை மரியா இந்த அரசத்துவத்தில் பங்குபெற எந்தத் தடையும் கிடையாது. கிறிஸ்து இயல்பாக அரசராக விளங்குகிறார். மரியாவோ சிறப்பு வரத்தால் அவரது அரசுத்துவத்தில் பங்குபெறுகிறார். ஏனெனில் மரியா கிறிஸ்துவின் தாய், கிறிஸ்துவோ கடவுள் ஆவார். இறைமகனின் மீட்புப் பணியில் மரியாவும் பங்குபெறுகிறார். அதோடு அவருடைய எதிரிகளுக்கு விரோதமான போராட்டத்திலும், வெற்றியிலும் மரியாவும் பங்குபெறுகிறார். இத்தகைய கிறிஸ்து அரசருடன் ஒன்றித்திருக்கும் அன்னை மரியா மேலான நிலையைப்பெற்று படைப்புகளுக்கெல்லாம் மேலாக தலைசிறந்து விளங்கினார். இத்தகைய நெருங்கிய ஒன்றிப்பினால் அவருடைய அரச மகிமையில் பங்குபெற்று மக்களுக்கெல்லாம் இறையரசின் கொடைகளை வாரிவழங்கும் வள்ளலாகத் திகழ்கிறார் மரியா. இந்த ஒன்றிப்பின் காரணமாக, தாய்க்குரிய வாஞ்சையோடு தமது திருமகனிடமும் தந்தையிடமும் பரிந்துபேசி கொடைகளை நமக்குப் பெற்றுத்தரும் ஊற்றாகத் திகழ்கிறார்".

"படைப்புகளுக்கொல்லாம் மேலான ஒரு நிலையைப் பெற்றுள்ளார் என்பதற்கு சந்தேகம் கிடையாது. தமது திருமகன் முன் மற்ற அனைத்திற்கும் மேலாக முதலிடம் வகிக்கிறார். அவர் கருவுற்றது முதல் மற்ற அனைத்துப் படைப்புகளைவிட அருளினால் நிறைவுபெற்றிருந்ததிலிருந்து அவர் மேலான நிலையில் உள்ளார் என்பதை உணர முடிகிறது. நமக்கு முன்பிருந்த 9ஆம் பியுஸ் 'விவரிக்க முடியாத இறைவன்" (Ineffabilis Deus) என்ற ஆவணத்தில் சொல்லியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

'எல்லா வானதூதர்களுக்கும், புனிதர்களுக்கும் மேலான விதமாக விவரிக்க முடியாத கடவுள், விண்ணக கொடைகளால் மரியாவை நிரப்பினார். மாசுமருவற்றவராக தம்மைப் பாதுகாத்ததின் விளைவாக மரியா மாசற்ற தூய்மை நிலையின் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளார். இத்தகைய நிலையைக் கடவுளைத்தவிர வேறுயாரும் பெற்றிக்க முடியாது."

மரியா விண்ணக மண்ணக அரசி என்பதின் அடையாளமாக தமது கையில் செங்கோலைத் தாங்கியவராக உள்ளார். இதனால் இவரை மக்கள் 'செங்கோல் மாதா' என்று அழைப்பதுண்டு. அதே சமயம் நம்மால் அன்பினால் பற்றியெரியும் தாயாக விளங்குகிறார்.

திருப்பாடல் 44ல் காணும் கருத்துகளை புனித பொனவெந்தர் அன்னை மரியாவுக்கு ஏற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "அரசி என்ற முறையில், மரியா ஒப்பிடமுடியாத மகிமைக்கு உயர்த்தப்பட்டுள்ளார். கிறிஸ்துவைக் குறித்து இவ்வாறு இப்பாடலில் சொல்லப்பட்டுள்ளது. 'உமது அரியனை என்றென்றும் நிலைத்துள்ளது'. அதன்பின் உடனடியாக மரியாவைக் குறித்து, 'உமது வலப்புறத்தில் அரசி தமது இருக்கையில் அமர்ந்துள்ளார்' என்றுள்ளது. அதாவது, உன்னதமான ஆசிரால் நிரப்பப்பட்டுள்ளார். அரசி என்ற முறையில் மரியா எல்லாக் கொடைகளையும் நமக்கு வழங்குபவராக உள்ளார். ஏனெனில் மனிதகுலத்திற்கு நோய் தீர்க்கும் மருந்தாக இருக்கும் இறைவனின் அருள் வாய்க்கால் வழியாக தண்ணீர் பாய்வதைப் போல மரியா வழியாக நம்மை வந்தடைகிறது. அருள்கொடைகளை மரியா நமக்கு வழங்குவது அவற்றின் ஊற்று என்ற முறையில் அல்ல, மாறாக, அவர் வகிக்கும் தரத்தினால் ஆகும்.

வகிக்கும் தரத்தினால் அன்னை மரியா மக்களைப் பொருத்தமட்டில் மேலான அரசியாவார். இதனால் பாவங்களுக்கு மன்னிப்புப் பெற்றுத் தருகிறார். அருள்கொடைகளை நமக்குப் பெற்று வழங்குகிறார். பயனாக மகிமை நிலைக்கு நம்மை இட்டுச்செல்கிறார்."

திருச்சபை என்னும் கோட்பாட்டு விளக்கத்தில் மரியாவைப்பற்றி இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. "இறுதியாக, மாசற்ற கன்னி ஆதி பாவக்கறை எதுவும் இன்றிப் பாதுகாக்கப்பட்டு, தம் மண்ணுலக வாழ்வு நிறைவுற்றதும், ஆன்மாவோடும் உடலோடும் விண்ணுலக மாட்சிக்கு எடுத்துச் செல்லப்பெற்றார், அனைத்துலக அரசியாக கடவுளால் உயர்த்தப்பெற்றார், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவரானவரும் (காண். தி.வெ 19:16) பாவத்தின்மீதும் சாவின்மீதும் வெற்றிகண்டவருமான தம் மகனுக்கு இன்னும் அதிக நிறைவாக ஒத்தவராகுமாறு இவ்வாறு உயர்த்தப்பெற்றார்" (திருச்சபை 59)

இதன்பொருட்டு, இப்பொழுது விண்ணக மண்ணக அரசியாக வானவர்க்கு எல்லாம் மேலானவராக மரியாவை ஆண்டவர் உயர்த்தினார். அனைத்து நன்மை வரங்களையும் மனுக்குலத்திற்கு மன்றாடிப் பெற்றுத்தர வழிவகுத்துள்ளார். இவ்விளக்கத்தை திருத்தந்தை இரண்டாம் ஜோன்பால், புதன்கிழமைதோறும் தாம் தரும் பேட்டியின்போது 1997ஆம் ஆண்டு 23ஆம் திகதி தெளிவுபடுத்தியிருந்தார்.

## திருவழிபாட்டில் மரியா

அருள்பணியாளர் சொல்லும் திருப்புகழ்மாலையில் இடம்பெறும் இரவு மன்றாட்டின் இறுதிப்பாடலில் மரியா அரசி எனப் பன்முறை அழைக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

1. "வாழ்க அரசியே தயைமிகு அன்னையே
   வாழ்க இனிமையே, தஞ்சமே வாழ்க.
2. மண்ணக மீட்பின் மாண்புயர் அன்னையே
   விண்ணகம் செல்ல திறந்த வாயிலே
   தண்கடல் மீதொளிர் விண்மீன் நீயே
   வீழ்ச்சி நின்றெழ முயன்றிடும் மக்களை
   ஆட்சி செய்து அவருக்கு உதவிடுவாய்
3. வானகம் வாழும் அரசியே வாழ்க!
   வானவர் அனைவரின் தலைவியே வாழ்க!
4. வானக அரசியே வாழ்க, அல்லேலூயா!
   ஏனெனில் இயேசுவை ஈன்றாயே!

என்றும் புகழப்பாடுவதைக் காண்கிறோம். அன்னையின் பாதுகாப்பிலிருக்க விரும்பும் நாம், இத்தகைய செப அழைப்புகளை நமது ஆழ்ந்த விசுவாசத்தின் வெளிப்பாடுகளாகப் பார்க்கலாம். நாள்முழுவதும் பல்வேறு அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் நாம் இரவில் துயில்கொள்ள செல்லுமுன் மரியன்னை அரசியின் பாதத்திலும், பாதுகாப்பிலும் நம்மை ஒப்படைக்கிறோம்.

திருச்சபையின் திருப்புகழ்மாலையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "விண்ணகம் சென்று அமைதியில் திளைக்கும் அன்னை மரியா தெய்வீகக் கொடைகள் யாவும் ஏராளமாகப் பெற்றவராகக் காட்சியளிக்கின்றார். மாந்தர் அனைவரிலும் அருளில் மேலோங்கியிருந்தவர். இறைகொடைகளின் மீது வேட்கை கொண்டுள்ள யாவருக்கும் பனிமழையென அருள்கொடைகளைப் பொழிகின்றார். உடலுக்கும் உள்ளத்திற்கும், அருமருந்தைப் பொழிவதால் மக்கள் உடல் மற்றும் ஆன்ம சாவிலிருந்து விடுதலை பெறுகிறார்கள். நோயுற்றவரோ, சோர்வுற்றவரோ, ஞானஒளி தேவைப்பட்டவரோ, யார்தான் மகிழ்ச்சியை நிரம்பியவராக வீடு திரும்பவில்லை? ஆண்டவரின் தாயாகிய மரியாவிடம் கேட்டு அடையாமல் போனவர் யார்?

## நம் வாழ்வில் அன்னை மரியா

அன்னை மரியாவோ இறைமகன் இயேசுவின் தாய் என்ற முறையிலும், அவருடைய மீட்பு செயலிலும் நமது அன்றாட வாழ்விலும், செயல்களிலும் நமது அரசத்துவத்தை நாம் வெளிப்படுத்த வேண்டும். திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினுடைய அரச, குருத்துவ, இறைவாக்குரைக்கும் பணிகளில் பங்குபெறுகிறோம்.

நமது ஆண்டவர் தமது திருத்தூதர்களைப் பார்த்து இவ்வாறு கூறுகிறார், "நான் சோதிக்கப்படும்போது என்னோடு இருந்தவர்கள் நீங்களே. என் தந்தை எனக்கு ஆட்சியுரிமைக் கொடுத்திருப்பதுபோல நானும் உங்களுக்குக் கொடுக்கிறேன்" (லூக். 22:28-29). தம் திருத்தூதர்களைப் பார்த்து அன்று இயேசு கூறியது இன்று ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பொருந்தும். ஏனெனில் தங்கள் திருமுழுக்கில் அவர்கள் சாத்தானை நிராகரித்து இயேசுவோடு இறந்து உயிர்த்தார்கள். "நான் வெற்றிபெற்று என் தந்தையின் அரியனையில் அவரோடு வீற்றிருப்பதுபோல் வெற்றிபெறும் எவருக்குமே எனது அரியனையில் என்னோடு வீற்றிருக்கும் உரிமையளிப்பேன்" (திவெ 3:21). எனவே நமது பாவச் சோதனைகளையும், பாவ நாட்டங்களையும் வெல்லும் போது நாமும் அரசுரிமையைப் பெறுகிறோம்...

15



**பசி என்னும் மையப் புள்ளியில் இருந்துதான் இன்றைய உலகின் பல்வேறு பிரச்சினைகள் உதயமாகின்றன.**

# பகிர்தல்



உலகப் போரின்போது ரஷ்யப் படை ஒன்று ஜெர்மனியின் எல்லைக்குள் நுழைகிறது. அந்தப் போர்களத்தில் ரஷ்யப் போர்வீரன் ஒருவரின் கால் உடைந்துவிடுகிறது. படைப்பிரிவு அவனை தனியே விட்டு விட்டுப் போய்விடுகிறது. வீரனால் நடந்து போக முடியவில்லை. பசி உயிரைப் பறிக்கிறது. கையில் துப்பாக்கி மட்டுமே இருக்கிறது. ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா என்று கைகளால் ஊன்றி ஊன்றி அலைந்து நான்கு நாள்கள் தேடுகிறான். எதுவுமே கிடைக்கவில்லை.

ஓர் இரவு அவன் கையூன்றி நடந்தபோது தொலைவில் ஒரு வீடு கண்ணில் தென்படுகிறது. பதுங்கிப் பதுங்கி அந்த வீட்டை நெருங்கிச் சென்று, துப்பாக்கி முனையில் அங்குள்ள வயதான ஜெர்மனியப் பெண்ணை மிரட்டுகிறான். அவள் அவனிடம் “உணவு எதுவும் இல்லை” என்று சொல்கிறாள். ஆனால் அவனோ “சாப்பிட ஏதாவது தா, இல்லையென்றால் உன்னைக் கொன்றுவிடுவேன்” என்று மிரட்டுகிறான்.

அந்தப் பெண் தன்னிடம் இருந்த தானியத்தில் சூடாகக் கஞ்சி தயாரித்து அவனுக்குத் தருகிறாள். அந்தக் கஞ்சியை கண்டதும் படைவீரன் வாய்விட்டுக் கதறி அழுகின்றான். அழுகையை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. கேவிக் கேவி அழுகின்றான். அந்தப் பெண் ஒரு குழந்தையைத் தூக்கி வைத்து உணவூட்டுவது போல் அந்த ரஷ்ய வீரனுக்கு உணவூட்டுகிறாள். சாப்பிட்ட பிறகு அவன் தன்னுடைய துப்பாக்கியைத் தூக்கி எறிந்துவிட்டு அவள் கால்களைப் பற்றிக்கொண்டு “பசியோடு அலைந்தபோது கடவுளே இல்லை என்று ஆத்திரத்தோடு கத்தினேன். இப்போது கடவுள் இருப்பதை உணர்கின்றேன். நீதான் எனது கடவுள்” என்று புலம்புகிறான். “பசி வந்தால் பத்தும் பறந்து போகும்” என்று சொல்வார்கள். பசியின் முன்னால் நண்பர்கள், எதிரிகள் இல்லை. நம் வயதும், படிப்பும்கூட காணாமல் போய்விடுகின்றன. பசி என்னும் மையப் புள்ளியில் இருந்துதான் இன்றைய உலகின் பல்வேறு பிரச்சினைகள் உதயமாகின்றன.

இன்றைய சமுதாயத்தில் அன்றாடம் அரங்கேறும் வன்முறைகளுக்கும், சமூக அநீதிகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது இந்தப் பசிதான். பசி என்னும் கொடிய வறுமைக்குள் தள்ளப்படுகின்ற மனிதன் தன் பசியைப் போக்க எதையும் செய்யத் துணிந்துவிடுகிறான். இன்றைய உலகில் பெருகிவரும் தீவிரவாதத்திற்கு வறுமையால் உருவாகும் பசி பல்வேறு காரணங்களில் முக்கியமானதாக இருக்கின்றது. பசியால் நம் சகோதர சகோதரிகள் அழிந்து போகாமல் காக்கப்படவும், இத்தகைய பசி என்னும் வலைக்குள் மாட்டிக்கொண்ட அப்பாவி இளையோர் சமூக விரோதிகளாய் மாறாமல் தடுக்கப்படவும் வேண்டும். எனவே, பசியைப் போக்கி, அதனால் ஏற்படும் ஆபத்தான விளைவுகளைத் தடுக்க நாம் செய்ய வேண்டியது பகிர்தலே.

இன்றைய உலகின் மிக அவசியத் தேவைகளில் ஒன்று பகிர்தல். இருக்கிறவர்கள் தம்மிடம் இருப்பனவற்றை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ வேண்டும். இருக்கின்றவர்கள் “இன்னும் இன்னும்” என்று பகிர்தலை மறந்து, பொருள்களைச் சேர்த்துக்கொண்டே போகின்ற ஒரு நிலையால் செல்வம் படைத்தவன் மேலும் செல்வந்தன் ஆகிறான். ஏழை இன்னும் மோசமான ஏழ்மைக்குத் தள்ளப்படுகின்றான். இன்றைய பொருளாதாரக் கொள்கைகளும், கோட்பாடுகளும் பணக்காரனை இன்னும் பணக்காரனாக்குகின்றனவே, ஒழிய, ஏழைகளை முன்னேற்ற முயற்சிப்பதில்லை. பகிர்தல் என்னும் பண்பு இல்லாததால் பணக்காரனுக்கும் ஏழைக்குமிடையேயுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வு அதிகமாகிக் கொண்டே செல்கிறது.

இன்றைக்குப் பகிர்தலைப் பற்றிப் பேசும்போது பெரும்பாலான பணக்காரர்கள், “கடினப்பட்டு உழைத்து நான் சேர்க்கும் செல்வத்தை ஏழைகள் என்னும் போர்வையில் திரியும் சேம்பேறிகளோடு பகிர்ந்து கொள்வதா?” என்று நியாயமான ஆதங்கத்தை முன்வைக்கிறார்கள். வெளிப்புறத்தில் அவர்களின் இந்த ஆதங்கம் நியாயமானதாகத்தான் தோன்றும். ஆனால் உள்ளார்ந்த நிலையில் நாம் சிந்திக்கும்போது பணக்காரர்கள் ஏழைகளுக்கான வாய்ப்பைப் பறித்துக் கொள்கிறார்கள் என்பதே உண்மை. பரிணாமக் கொள்கையின் தந்தை சார்லஸ் டார்வின் விலங்குகளின் பரிணாம வளர்ச்சியைப் பற்றிப் பேசும்போது “வலிமையானதே பிழைக்கும்” என்ற சிந்தாந்தத்தைப் பிரதானப்படுத்துவார். அதாவது வலிமையான விலங்கு தன்னைவிட வலிமை குறைந்த விலங்கைக் கொன்று உணவாக்கி வாழும் என்பதுதான் அக்கொள்கை. இந்தக் கொள்கை பரிணாம வளர்ச்சி நின்ற பிறகும் மனிதனிடம் காணப்படுகின்றது.

இறைவன் இயற்கையில் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் சமமாகவே அனைத்தையும் படைத்திருக்கிறான். ஆனால் வசதி படைத்தவர்கள், அதிகாரம் கொண்டவர்கள் எல்லா வளங்களையும் தனதாக்கிக் கொண்டு அடுத்தவர்க்கு உரியதையும் பறித்துக் கொள்கின்றார்கள். உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் தேவையான உணவை, வளங்களை இயற்கை அன்னை வழங்குகிறாள். ஆனால் அதிகாரம் கொண்டவர்கள் சுயநலத்தோடு சுரண்டுவதால்தான் வறுமையும், அதன் விளைவாக பசியும், பஞ்சமும் விளைகிறது. இப்படி சுயநலப் போக்கோடு சுரண்டுவதை “உழைப்பு” என்று சொல்ல முடியாது. அதைத் திருட்டு என்றே சொல்லலாம். இதே கருத்தை புனித பெசில் “பகிர்ந்து கொள்ளாதது தவறு. பகிர்ந்து கொள்ளாதவன் திருடன். பிற மனிதர்களுடன் தன் சொத்துக்களைப் பகிர்ந்து கொள்ள, உடன்படாதவன் கொள்ளையடிப்பவன், திருடன்” என்று குறிப்பிடுகின்றார்.

எனவே, நாம் எந்த வகையிலாவது ஏழையின் தேவைகளைப் பூர்த்திச் செய்கிறபோது நாம் நமக்குரியதைத் தருவதில்லை. அவர்களுக்குரியதையே நாம் திருப்பிக் கொடுக்கின்றோம்.

இறைவன் நமக்குக் கொடுப்பதற்கு காரணம், அதை நாம் இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழ வேண்டும் என்பதற்குத்தான். எனவே பகிர்தல் என்னும் பண்பு நம்மில் மேலோங்கட்டும். அப்போது பசி மறைந்து போகும். அதனால் விளையும் பாவமும் அகன்று போகும்.



# வன்முறைப் பசியை வளர்க்கும் தலைவர்கள்



**”மிருகங்களுக்குப் பசியில்லாதபோது, வன்முறையும் இல்லை. மனிதர்கள் மட்டும் ஏன் காரணம் ஏதுமின்றி வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்?”**

சில ஆண்டுகளுக்கு முன், ஓர் அழகான குறும்படம் வெளியானது. இரு சிறுத்தைகளும் ஒரு மானும் இப்படத்தின் நாயகர்கள். இருசிறுத்தைகள், ஒரு மான் என்றதும், நம்மில் பலர், இந்தக் கதையின் முடிவை, ஏற்கனவே எழுதி முடித்திருப்போம். பாவம், அந்த மான். இரு சிறுத்தைகளும் அந்த மானை அடித்துக்கொன்று சாப்பிட்டிருக்கும் என்ற முடிவுக்கு வந்திருப்போம்.

ஆனால், அக்காட்சியில் நாம் காண்பது, நம்மை ஆனந்த அதிர்ச்சியில் ஆழ்த்துகிறது. அவ்விரு சிறுத்தைகளும், மானும், அழகாக விளையாடுவதாக, அங்கு காட்டப்பட்டுள்ளது. அந்த அற்புத காட்சியின் இறுதியில், திரையில் தோன்றும் வரிகள் இவை: ”மிருகங்களுக்குப் பசியில்லாதபோது, வன்முறையும் இல்லை. மனிதர்கள் மட்டும் ஏன் காரணம் ஏதுமின்றி வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்?” என்ற கேள்வியுடன் அந்தக் குறும்படம் முடிவுறுகிறது.

பசி என்பது ஓர் அடிப்படைத் தேவை. அந்தத் தேவை நிறைவேறியபின், நாம் நிம்மதி அடைய வேண்டும். ஆனால், மனிதர்கள் நிறைவும், நிம்மதியும் அடைவதென்பது மிக, மிக, மிக அரிதாகிவிட்டது. நிம்மதி அடைவதற்குப் பதில், வேண்டும், இன்னும் வேண்டும் என்ற வெறியை நாம் வளர்த்து வருவதாலேயே, நாம், இத்தனைப் பிரச்சனைகளைச் சந்திக்கிறோம். குறிப்பாக, தீராத வன்முறைப் பசியை இளையோரில் வளர்க்கும் சுயநலத் தலைவர்களை, அவர்கள் விரைவில் அடையாளம் கண்டுகொள்வது வருங்காலத்திற்கு நல்லது.

✸✸✸

**– வத்திக்கான் –**

# கணவன் மனைவி உறவு



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

159



இன்று எல்லா நாடுகளிலும் திருமண உறவில் அதிகமாக விரிசல் ஏற்படுவதால் விவாக இரத்துக்கள் அதிகரிக்கின்றன. தவறான துணைவரை வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்து கொள்வதற்கான காரணங்கள் எவை?

1. அனுபவமும் பக்குவமும் இல்லாத இளமைக் காலத்திலேயே முடிவெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம்.
2. தெரிவு செய்யும் போது உணர்வுகளையும், அறிவையும் கலந்தாலோசிக்காத குறை.
3. மற்றவர் உண்மையில் எத்தகையவர் என்பதை அறிந்து கொள்வதில் கவனமும் எச்சரிக்கை உணர்வும் இல்லாமை.
4. மற்றவரைப் பற்றிய சந்தேகங்கள் இருந்தாலும் சில தவறான எண்ணங்களால் திருமணத்திற்குச் சம்மதித்தல். உதாரணமாக இளைஞர் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி இருந்தால் திருமணத்துக்குப் பின் மாறுவார் என்று எண்ணி ஏமாந்த பெண்கள் பலர் உள்ளனர்.
5. தனிமை தரும் தவிப்பினால் துணை வேண்டும் என்கிற அவசரம். அதாவது இப்போது இருக்கும் குடும்பச் சூழலில் இருந்து வெளியேற வேண்டும். யாரையாவது திருமணம் முடித்தால் சரி என்ற எண்ணத்தால் திருமணம் முடிப்பது.
6. அர்த்தமில்லாத வீம்பு. அதாவது சில பெற்றோர் தமது மகனிடம், அல்லது மகளிடம் சந்தேகப்பட்டு காதல் தொடர்பை வைத்து ஒரே ஏசிக்கொண்டிருப்பர். இதனால் சில பிள்ளைகள் எப்படியாவது இவரைத் திருமணம் செய்து காட்டுகிறேன் பார் என்ற வீம்புத்தனத்தால் முடிப்பர். அல்லது நண்பர்களின் சவாலால் நான் எப்படியாவது முடித்துக் காட்டுகிறேன் என்று முடிப்பது.

இப்படிப்பட்ட காரணங்களால் திருமண வாழ்வு சிறிது காலத்திலேயே தோல்வியில் முடிகின்ற நிலை ஏற்படுகின்றது.

### துணைவரைத் தெரிவு செய்யும் போது மனதில் கொள்ள வேண்டியவைகள்.

1. ஏறக்குறைய ஒரே மாதிரியான விழுமியங்கள் குறிக்கோள் இருப்பது சிறப்பானது.
2. மன, ஆன்மீக முதிர்ச்சி இருப்பது நன்று அதாவது அன்பைக் கொடுக்கவும் பெறவும் உள்ள ஆற்றல் இருக்க வேண்டும். மனதில் உள்ளதை வெளிப்படுத்தவும் மற்றவர் சொல்வதைப் புரிந்து கொள்ளவும் உள்ள ஆற்றல். அதே போன்று நம்பகத் தன்மை இருக்க வேண்டும்.
3. பாலியல் பகிர்வுக்கான மன உடல் தகுதி இருக்க வேண்டும்.
4. நீண்டகால ஆயத்தம் நன்றாக இருக்க வேண்டும். அதாவது அப்பா அம்மா நல்ல அன்புறவுள்ள குடும்பத்தில் வளர்ந்தால் நன்று. ஏற்றுக் கொள்ளப்பட்ட அன்பு செய்யப்பட்ட, மதிக்கப்பட்ட பாராட்டப்பட்ட அனுபவம் சிறுவயதில் இருந்தால் அன்பு செய்வர் மதிப்பர் பாராட்டுவர். புண்படுத்தப்பட்ட பிள்ளை வளர்ந்ததும் புண்படுத்தும்.
5. ஆணை விட பெண் வயதில் குறைவாக இருப்பது நன்று.
6. இருவரும் ஒரே மத நம்பிக்கையில் வாழ்ந்தால் பிள்ளைகளுக்குப் பிரச்சினை ஏற்படாது.
7. இருவரும் இரத்தப் பரிசோதனை செய்வது நன்று. தலசீமியா, எச்.ஐ.வீ போன்ற நோய்கள் இருக்கின்றனவா என்பதைச் சோதித்து அறிவது நன்று.

இவற்றைக் கடைப்பிடிப்பது திருமண. வாழ்வைச் சக்தியாக்க உதவியாக இருக்கும்.

தொடரும்

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.

# இறைவன் எம்மோடு பேசுகிறார்

இரக்கமான இறைவன்
எம்மோடு பேசுகிறார்.
காலையில் கதிரவனின்
கதிர் ஒளியில்
பேசுகிறார்.
மாலையில் மதி
ஒளியில் -
குளிரும் ஒளியில்
பேசுகிறார்.
மலையில் தவழ்ந்து
வரும் அருவியில்
பேசுகிறார்.
அருட்பொழிவாய்
மழை பொழியும்
மேகத்தில் பேசுகிறார்.
மழலை மொழி பேசும்
குழந்தையின்
கள்ளம் இல்லா
மனத்தில் பேசுகிறார்.
தென்றல் தாலாட்டும்
மலர்களில் -
மரக்கிளைகளில்
பேசுகிறார்.
வயல் வெளி
நெற்கதிர்களின்
சலசலப்பில் பேசுகிறார்.
கீச்சிடும் குருவிகளின்
குரலோசையில்
பேசுகிறார்.

ஆனால், மனிதர் நாம்
என்ன பேசுகிறோம்......?
எம்மைப்பற்றிப்
பெருமையாய்ப்
பேசுகிறோம்.
உயர்வாய்ப்
பேசுகிறோம்.
அயலவர் பற்றி
அவதூறாய்ப்
பேசுகிறோம்.
இழிவாய்ப்
பேசுகிறோம்.
இல்லாத
பொல்லாத
கதையும்
பேசுகிறோம்.
ஊர்ப் புதினம்
பேசுகிறோம்.
உண்மை இல்லாமலும்
பேசுகிறோம்.
வீண் பேச்சுப்
பேசுகிறோம்.
வீராப்பாய்ப்
பேசுகிறோம்.
விரோதமாய்ப்
பேசுகிறோம்.
குரோதமாய்ப்
பேசுகிறோம்.
ஆணவமாய்ப்
பேசுகிறோம்.
அருவருப்பாயும்
பேசுகிறோம்.
இப்படியே பேசினால்,
நாம்
இறைவனோடு பேசுவது
எப்போது.......?
இனிமையாய்ப்பேசுவது
எப்போது.......?

ஆக்கம்:
பென்ஜமின் சோமநாதர்,
தெஹிவளை.



# புத்தகத்தால் புத்தகம் பெறுவோம்



> புத்தகங்களை முதலில் நம் நண்பர்களாக்குவோம், புத்தகங்களோடு பேசுவோம். அவைகள் கூறும் கருத்துக்களை மீண்டும் மீண்டும் அசைபோடுவோம்.

வாசிக்கத் தெரிந்தோரெல்லாம் யோசித்துப் பார்ப்பதில்லை. வாசிப்பும் யோசிப்பும் சுவாசிக்காவிட்டால் நாம் மனிதர்கள் அல்ல, மாமனிதர்கள் ஆனோம். மாமனிதர்கள் உயர்ந்தவர்கள். எல்லோருமே நிறைய புத்தகங்கள் வாசித்தவர்கள் தாம்.

உன் நண்பன் யாரென்று சொல். நீ யாரென்று நான் சொல்கிறேன் என்பதற்கேற்ப நீ படிக்கும் புத்தகத்தை சொல் நீ யாரென்று நான் கூறுகின்றேன் என்பது இக்காலச் சிந்தனை. புத்தகங்களைப் படிப்பதால், நாம் நம்மையே செதுக்கிக் கொண்டிருக்கிறோம். பிறரின் அறிவு, அனுபவம், நம்முடையதாகிறது. நமது சிந்தனை, வலுப்படுகிறது. ஆழப்படுத்தப்படுகிறது. ஆங்கிலத்தில் வாசிப்புத் திறன் பற்றி ஓர் அறிஞர் 'Today a reader tomorrow a leader' என்கிறார். அளுமைத் திறன், பொறுப்பு, திறமைகள் ஆகியவற்றைச் செம்மையாகச் செய்ய வாசிப்புப் பயிற்சி மிகவும் அவசியமாகிறது.

நம் வாழ்க்கை என்னும் குறுகிய வட்டத்திலே எல்லாவற்றையும், அனுபவித்து அறிவது என்பது இயலாத ஒன்று. பிறரின் அனுபவம் புத்தக வடிவிலே கொடுக்கப்படுகின்றது. எனவே வாசிக்கும் போது பிறரின் அனுபவத்தையும் நமதாக்கிக் கொள்கிறோம்.


whatsapp, facebook என நேரத்தை வீணாக்கும் மனிதர்கள் மத்தியில் புத்தகங்களை வாசித்துப் புரட்சியை உருவாக்குவோம். பொழுது போக்கிற்காகதான் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துகின்றோம். ஆனால் நம் வாழ்க்கையை நம் வழியில் அமைப்பதற்காக, நண்பர்களைச் சந்திக்கும்போது நாம் படித்த புத்தகங்கள் பற்றி பகிர்ந்து கொள்வோம். அப்போதுதான் அறிவு விசுவாசமாக்கப்படும்.

தெருவிளக்கு, சிம்னி விளக்கு வெளிச்சத்தில் படித்து உயர்ந்தவர்களை கேள்விப்பட்டிருக்கின்றோம். இரவை பகலாக்கி படித்தவர்களைப் பார்த்திருக்கின்றோம். நாம் ஏன் அவர்களை முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளக்கூடாது? அனைத்து வசதிகளும், பத்திரிகைகளும், நாளேடுகளும் நம் கைவசம் இருந்தும் நாம் வாசிக்க மறுப்பதேன்.

புத்தகங்களை முதலில் நம் நண்பர்களாக்குவோம், புத்தகங்களோடு பேசுவோம். அவைகள் கூறும் கருத்துக்களை மீண்டும் மீண்டும் அசைபோடுவோம். நல்ல கருத்துக்களால் நம் வாழ்வை மாற்றுவோம். வேண்டாதவைகளைக் களைந்தெரியும். நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்ளுவோம். நல்ல புத்தகங்களை தேடி கண்டு பிடிப்போம். சில புத்தகங்களை எப்போதும் நம் வாழ்வோடு பயணிக்கும்படி வைத்துக் கொள்வோம்.

முதலில் வாசிப்பு பாகற்காயாகத் தான் இருக்கும் போக போகத்தான் அது கற்கண்டாக மாறும். நமது பழக்கம் வழக்கமாக மாறி வழக்கம் வாழ்வாக மாற தினமும் வாசிப்போம். அதையே சுவாசிப்போம். வாசிப்பு நம் உயிர் மூச்சாகட்டும்.

******



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பொதுக்காலத்தின் 20வது ஞாயிறு (19.08.2018)**

**பேதுரு**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 20வது ஞாயிறு தினத்தில் வாஞ்சையோடு இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்த ஒன்றுகூடி வந்திருக்கும் திருஅவையின் இறைமக்களே! இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் உணவாக உலகிற்கு அளித்தார். இதன் மூலம் இயேசு கடவுள் மீது கொண்ட அன்பை நாம் அறியலாம். கடவுளின் திட்டத்திற்கு தன்னை முழுமையாக கையளித்தார். இயேசுவின் தாழ்ச்சியான உள்ளமும், கீழ்ப்படியும் குணமும் நமக்கெல்லாம் ஒரு முன்மாதிரி ஆகும். இயேசு கடவுளின் விருப்பத்திற்கேற்ப தன்னை இழந்தார். கடவுள் அவரை உயிர்ப்பித்து உயர்த்திவிட்டார். இறைவன் நம்மையும் ஒரு நோக்கத்திற்காக, திட்டத்திற்காக, அழைக்கின்றார் என்பதை நாம் உணர்ந்தவர்களாக நம் மத்தியில் வாழும் தன்னை முழுமையாக கொடுத்த இயேசுவை பின் செல்லும் நாம் நம்மை சிறிதளவாவது பிறருக்கு கொடுக்க வேண்டாமா? இயேசுவின் திருவுடலும் திரு இரத்தமும் திரு அவைக்கு ஊட்டம் அளிப்பதுபோல் எமது சொல்லாலும் செயலாலும் அறிவாலும் அனுபவத்தாலும் அடுத்தவர்க்கு வாழ்வளிப்போமாக.

**முதல் வாசகம் : நீதிமொழி 9:1-6**
நான் தரும் உணவை உண்ணுங்கள், திராட்சை இரசத்தைப் பருகுங்கள்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்.

**இரண்டாம் வாசகம் : எபேசி 5:15-20**
ஆண்டவருடைய திருவுளம் யாது எனப் புரிந்துகொள்ளுங்கள்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா! எனது சதையை உண்டு எனது இரத்தத்தை குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர் நானும் அவர்களோடு இணைந்திருப்பேன் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 6:51-58**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நமது வாழ்வு நமக்கானது மட்டமல்ல அது பிறருக்காக பகிரப்படவேண்டியது என்பதை இயேசுவை முன் உதாரணம் காட்டிப் போதிக்கும் திருஅவைக்கும், அதன் தலைவரான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், திருஅவையின் இறைமக்கள் அனைவருக்கும் வேண்டிய தியாக உள்ளத்தை வழங்கி வழிநடத்த வேண்டுமென்று...

கொடுப்பதன் இன்பம் பெறுவதில் இல்லை என்ற உண்மையை உணர்ந்தவர்களாக நம் அனைவருக்காகவும் தம் உயிரையும் ஈந்த இயேசுவைப் போல் சிந்தித்து நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் நாமும் நம் நாட்டின் தலைவர்களும் தியாகங்கள் செய்யவும் இயேசுவின் அன்பை பொழியும் நிலவுகளாக நாம் மாறவும் வேண்டிய நல்மனதை வழங்கி வழிநடத்த வேண்டுமென்று...

அறிவும் அனுபவமும் இரண்டறக் கலந்த ஞானம் உள்ளவர்களாக தெய்வ பயத்துடன் வாழ்ந்து விண்ணக வாழ்வை நோக்கிப் பயணம் செய்யவும், விவேகத்துடன் வாழ்ந்து நல்லது எது தீயது எது என உய்த்துணரவும், நிலைவாழ்வு தரும் வானக உணவை பெற்றுக்கொள்ளவும் வேண்டிய வரத்தை தந்து வழிநடத்த வேண்டுமென்று...

எப்பொழுதும் இறைநம்பிக்கையில் இறைமக்களை வழிநடத்தும் திரு அவையையும் அதன் தலைமைப் பணியாளர் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் ஆகிய அனைவரும் மக்களின் நம்பிக்கைச் சின்னங்களாக வாழ்ந்து இயேசுவின் நம்பிக்கைக்குரிய ஊழியர்களாகத் திகழ்ந்திட திருவருள் புரிய வேண்டுமென்று...

**பொதுக்காலத்தின் 21வது ஞாயிறு (26.08.2018)**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 21வது ஞாயிறு தினத்தில் அன்பின் திருஅவையின் திருக்கூட்டமாக வந்திருக்கும் இறைமக்களே! திருமுழுக்கின் மூலம் நாம் இறைவனோடு மேற்கொண்ட உடன்படிக்கையை மறுபரிசீலனை செய்ய அழைக்கப்படுகின்றோம். "கடவுள் தன் அன்பைக் கொடுத்தார். அவருடைய உதவி, பாதுகாப்பு எல்லாவற்றிக்கும் மேலாகத் தன்னுடைய உயிரையே கொடுத்தார். எனவே எத்துணை இடர்வரினும் நாம் இறைவனோடு இணைந்தே இருக்க வேண்டும் என்ற படிப்பினை இன்றுநமக்கு கொடுக்கப்படுகின்றது. இன்றைய வாசகங்கள் ஆண்டவருடன் நிலைத்திருப்பதால் கிடைக்கின்ற ஆசீர்வாதங்களை குறித்துப் பேசுகின்றன. ஆண்டவரை விலகிச் செல்ல நினைத்த சீடர்கள் கூட தம் மனநிலையை மாற்றி "வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன" என்று இயேசுவை பின்சென்றது போல நாமும் இறை நம்பிக்கை நிறைந்த மக்களாக வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : யோசுவா 24:1-2, 15-18**
நாங்களும் அவருக்கு ஊழியம் புரிவோம். ஏனெனில் அவரே எங்கள் கடவுள்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்.

**இரண்டாம் வாசகம் : எபே 5:21-32**
திருமணத்தில் அடங்கியுள்ள மறைபொருள் பெரிது இது திருச்சபைக்கும் கிறிஸ்துவுக்கும் பொருந்தும்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவரே உமது வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன. நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவா 6:60-69**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

தங்கள் சுயநலன்களுக்காக கொள்கைகளையும் நல்ல திட்டங்களையும் செயல்படுத்தாமல் மக்கள் கொண்ட நம்பிக்கைக்கு துரோகம் விளைவிக்காமல் தலைவர்கள் செயல்படவும், உண்மைக்கும், நீதிக்கும், மதிப்பளித்து சமூக முன்னேற்றத்திற்காகவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் உழைத்திடவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று...

ஆண்டவரே வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன என்று திருத்தூதர்கள் இயேசுவை சரணடைந்தது போல நாமும் இறை நம்பிக்கையில் சிறந்து விளங்கவும் எக்காலமும் இறைவனில் நிலைத்திருந்து நிலைவாழ்வு தரும் இறை வார்த்தையை ஏற்று அதன்படி வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# விடியலுக்கான விதைகள்!

### தேன் :
முடிந்தவரை எப்பொழுதும் சாந்தமாய் இரு. நூறு கொப்பறை அளவு புளிப்புக் காடியைவிட ஒரு சிறிய கரண்டி அளவு தேன் அதிக ஈக்களைக் கவர்ந்து இழுக்கிறது. தீ தண்ணீரை அணைப்பதுபோல, அமைதியான ஒரு வார்த்தை கோபத்தின் சூட்டினைத் தணிக்கும்.

### கடவுளைப் பற்றிக்கொள் :
நமக்குள் இருப்பவையும், நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் தலைகீழாக மாறினாலும், எதிர்மறையாகத் தோன்றினாலும் உறுதியான மனநிலையோடு நமது பார்வையைக் கடவுளின்மீது பதித்து, அவரையே தேடி, அவரையே நோக்கி நாம் பயணிக்க வேண்டும்.

### இருப்பதில் நிறைவாக இரு :
கடவுளின் உயர்ந்த படைப்பாகிய நீ அவருக்குப் பெருமை சேர்க்கும் அளவிற்கு நீ நீயாக இரு. அதில் நிறைவாக இரு.

### கடவுளின் விருப்பம் :
கடவுளின் விருப்பத்தின்படி செயல்பட விரும்பினால் மட்டும் போதாது பக்தியுடன் வளர்ந்திட கடவுளின் திட்டத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுச் செயல்பட வேண்டும்.

### மனவுறுதி :
எல்லாவற்றையும் ஆண்டவரிடம் நாம் ஒப்படைத்திடும்போது நமது துன்பங்கள் அனைத்தையும் அவரே பாரத்துக்கொள்வார்.

### கடவுள் உன்னோடு :
கடவுள் இதுவரை உன்னை மறந்ததில்லை. எப்போதும் இல்லாத அளவிற்கு இப்பொழுது நீ கடவுளைச் சார்ந்திருக்கும்போது அவர் ஏன் உன்னைக் கைவிட வேண்டும்?

### தொடர் முயற்சி :
ஒவ்வொரு வீழ்ச்சிக்குப் பிறகும் மனவுறுதியுடனும், தைரியத்துடனும் எழுந்து நமது முயற்சியை மீண்டும் தொடர வேண்டும்.

### எழுந்திடு :
நமது பலவீனத்தையும், பரிதாப நிலையையும் தெரிந்திருப்பதில் தவறில்லை. ஆனால், அதிலேயே விழுந்து கிடக்காமல், அதையே நினைத்து விரக்தி அடையாமல் கடவுள்மீதுள்ள புனிதமான மனவுறுதியோடு நாம் எழுந்திட வேண்டும். ஏனெனில் நமது பாவம் நிறைந்த பரிதாப நிலையே கடவுளுயை இரக்கத்தின் உச்சமாகும்.

### சாந்தம் :
தேனீ கசப்பான உணவை உண்டு, இனிப்பானத் தேனை உருவாக்குகிறது. அதைப்போல், நாமும் கசப்பான அனுபவங்களைச் சந்திக்காமல் மேன்மையான தேனாகிய சாந்தம், பொறுமை ஆகிய குணங்களின் செயல்களில் இடுபட இயலாது.

### அருள் வழங்குவார் :
உனது துன்பங்கள் சோதனைகள், பலவீனங்களைக் கண்டு பயப்படாதே. கடவுள் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொள். ஏனெனில் இதுவரை எல்லாத் தீமையிலிருந்தும் உன்னைக் காத்த இறைவன் இனிமேலும் காப்பார். இல்லையென்றால் அத்தீமைகளைச் சந்திப்பதற்கான மனத்திடனையும் தேவையான அருளையும் உனக்கு நிறைவாகத் தருவார்.

## சிந்தனைக்கு!

**ஆறு கொடுத்தது**


**ஆறு நீர் கொடுத்தது!**
**ஆறு சோறு கொடுத்தது!**
**ஆறு மீன் கொடுத்தது!**
**ஆறு ஆரோக்கியம் கொடுத்தது**

**இன்று**

**ஆறில் மணல் எடுத்தோம்**
**ஆறில் பணம் எடுத்தோம்**
**ஆறாத துயரையும் எடுக்கின்றோம்**
**மனம் ஆறாமல்**

### இயன்றதைச் செய் :
மனம் தளராதே, பொறுமையாய் இரு, பரிவுடன் வளர உன்னால் இயன்றதைச் செய். கடவுள் தம் கரங்களால் உன்னைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்.

# மரணதண்டனை குறித் மாற்றங்களும் ஆயர்களி



மரண தண்டனை குறித்து கத்தோலிக்க மறைக்கல்வி, 2267 என்ற பிரிவில் இதுவரை கூறப்பட்டு வந்த கருத்துக்களில் மாற்றங்களை உருவாக்கி, திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயம், மாற்றப்பட்ட புதிய கருத்துக்களை, ஆவணி 2 வெளியிட்டுள்ளது.

திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயத்தின் தலைவர், கர்தினால் Luis Francisco Ladaria அவர்கள், இவ்வாண்டு வைகாசி மாதம் 11ம் திகதி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்த வேளையில், இந்த மாற்றங்கள் அடங்கிய வரைவை அவருக்கு அளித்து, அவரது ஒப்புதலைப் பெற்றுள்ளதாக ஆயர்களுக்கு எழுதிய மடலில் குறிப்பிட்டுள்ளார்.

### மரணதண்டனை குறித்த பழைய மறைக்கல்வி கருத்து

நீதியான முறையில் அமைக்கப்பட்ட அதிகாரிகள், நேர்மையான வழக்கை நடத்தி, அதன் இறுதியில் வழங்கிய மரண தண்டனை, ஒருவர் செய்த மிகக் கொடிய குற்றத்திற்கு தகுதியான தண்டனை என்று மறைக்கல்வி 2267 எண் இதுவரை கூறி வந்தது.

### மரணதண்டனை குறித்த புதிய மறைக்கல்வி கருத்து

தீவிரமான குற்றங்களை ஒருவர் செய்திருந்தாலும், அவரது மனித மாண்பு, அக்குற்றங்களால் எவ்வகையிலும் குறைவதில்லை என்றும், தீவிரக் குற்றங்கள் புரிவோரை மக்களிடமிருந்து பிரித்து, காவலில் வைப்பதில், தகுந்த வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும், காவலில் வைக்கப்பட்டிருப்போர், மனம் திருந்தும் வாய்ப்புக்கள் உண்டு என்றும், மறைக்கல்வி 2267 என்ற பிரிவில், புதிதான எண்ணங்கள் கூறப்பட்டுள்ளன.

### மரணதண்டனையை அறவே ஒழிப்பதில் திருஅவை

இந்த எண்ணங்களின் அடிப்படையில், மனித மாண்பு எந்தச் சூழலிலும் சிதைக்கப்படக் கூடாது என்பதில் திருஅவை உறுதியாக உள்ளது என்றும், மரண தண்டனை இந்த மாண்பைக் குலைப்பதால், அதனை உலகெங்கும் ஒழிப்பதற்கு திருஅவை முயற்சிகள் மேற்கொள்ளும் என்றும், இந்த புதிய திருத்தங்களில் கூறப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்கள் அடங்கிய மறைக்கல்வி 2267ம் எண்ணை, 2.8.2018 அன்று திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயம் வெளியிட்டுள்ளது

### கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி ஏட்டில் மரண தண்டனை குறித்த மாற்றத்திற்கு ஆயர்கள் வரவேற்பு

கிறிஸ்தவ வாழ்வு என்பது, எல்லாவற்றுக்கும் மேலாக, பெருந்தன்மை நிறைந்த இறைத்தந்தைக்கு நன்றியுணர்வுடன் பதிலுரைப்பதாகும் என்பது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டரில், இடம்பெற்றுள்ளது.

மரண தண்டனை குறித்து, கத்தோலிக்க மறைக்கல்வி ஏட்டில் மாற்றம் செய்வதற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எடுத்துள்ள தீர்மானம், மகிழ்வையும், திருப்தியையும் அளிக்கின்றது என்று, சான் எஜிதியோ கத்தோலிக்க பிறரன்பு அமைப்பு கூறியுள்ளது.

மரண தண்டனை நிறைவேற்றுதல், மனிதரின் மீறமுடியாத மாண்பின் மீது தாக்குதல் நடத்துவதாகும் என்பதால், இத்தண்டனை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்று, மரணதண்டனை குறித்த மறைக்கல்வி எண் 2267ல், மாற்றம் செய்திருப்பதற்கு, திருத்தந்தை

# மருதமடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா சிறப்பு திருப்பலியில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் மறையுரையில் இருந்து

**இறையேசுவின் எனது அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!**

இன்று மருதமடு அன்னையின் ஆவணி மாத வருடாந்த திருவிழாவைக் கொண்டாடுகின்றோம். அகில உலக திருச்சபை இன்றைய நாளிலே தூய கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழாவை கொண்டாடுகின்றது. உங்கள் அனைவருக்கும் இந்நாளிலே எனது அன்பு கூர்ந்த திருவிழா நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் இந்த பாசமான அன்னையைத் தேடி பல மைல்களுக்கு அப்பால் இருந்து இந்த திருத்தலத்திற்கு வந்துள்ளீர்கள். அன்னை மரியா உங்களை கைவிடமாட்டார். உங்கள் துன்பங்களையும், துக்கங்களையும், நீங்கள் படுகின்ற வேதனைகளை எல்லாம் அவரிடம் கையளியுங்கள். அம்மா உங்களை பாசத்துடன் அரவணைத்து அவருடைய பரிந்துரையினால் உங்களுக்கு பல்வேறு நன்மைகளைப் பெற்றுத் தருவார். உங்களது கருத்துக்களுக்காக நாங்கள் இந்த திருப்பலியில் விசேடமாக மன்றாடுகின்றோம்.

அன்னையர்க்கெல்லாம் அன்னை அவள். அன்னையர்களுக்கெல்லாம் மாதிரி அவள். அன்னையாம் திருச்சபையானது அவள் உடலுடனும் ஆன்மாவுடனும் விண்ணேற்றம் அடைந்த நாளை கடன் திருநாளாக இன்று கொண்டாடுகின்றது. அன்னையவள் அருமையான வாழ்க்கையை வாழ்ந்தவள். இறைவன் தூய ஆவியின் அருளாள் அவளுள் குடியிருக்க தன்னை மாசில்லாமல் காத்த கோயில் அவள். மனித பாவத்தால் உடல் மண்ணுக்கு சொந்தம் என்பது இவ்வுலகில் பிறந்த அனைத்து மனிதரின் விதி. ஆனால் அன்னையவள் மாசில்லாமல் மண்ணில் பிறந்ததால் உடலோடும் ஆன்மாவோடும் இறைபதம் அடைந்த ஒரு புனிதை அன்னை மரியாள். புனிதர் புனிதைகளுக்கெல்லாம் புனிதையாம் எம் அம்மா. நாம் வணங்கும் உத்தமி. எல்லாக் காலங்களிலும் உள்ள மனிதருக்கும், கிறிஸ்தவர்களுக்கும் ஒரு மாதிரியாக நல்லன்புடன் நல்லுறவைப் பேணி வளர்த்தாள்.

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, இன்றைய நற்செய்தி வாசகம் மரியன்னையின் புகழ்ச்சிப் பாடலை எம்முன் வைக்கின்றது. அப்பாடலில் காணக்கிடக்கும் அக, புற நல்விழுமியங்களை நாங்களும் வாழ்வாக்க அழைக்கப்படுகின்றோம். கடவுளுக்கு அஞ்சி நடத்தல், தாழ்வுற்ற மக்களை தூக்கி விடுதல், பசித்தவர்க்கு உணவு கொடுத்தல், ஒடுக்கப்பட்டோருக்கு உண்மையும் நீதியும் கிடைக்கச் செய்தல் ஆகிய செயல்களின் வழியாக உண்மையான விடுதலையும் சமத்துவமும் மகிழ்ச்சியும் உலகில் நிலவ உழைப்போம்.

பின்வரும் வரிகள் என்னை சிந்திக்க வைக்கின்றன. மனிதன் எத்தனை சடங்குகள் இருந்தாலும் புண்ணிய நெறிகளில் பூத்தாலும், தன்னிலை மாற்றம் பெறாமல் அக, புற நிறைவு கிடையாது. மடுதிருப்பலியில் இதுவரை நாம் நடாத்திய நவநாட்களும்,



திருப்பலிகளும் எமது அக வாழ்வைப் பற்றி தியானித்தோம். எமது ஆழ் மனது இறைவனோடு கொள்ளும் உறவைப் பற்றி சிந்திக்கவேண்டும். நாங்கள் கடவுளுக்கு அஞ்சி வாழவேண்டும். அவர் எங்களுக்காக பத்துக் கட்டளைகளையும், திருச்சபையின் சட்டங்களையும் வழங்கியுள்ளார். ஞாயிற்றுக்கிழமைகளில் இறைவனை வழிபடு, பெற்றோரை மதித்து நட, களவு செய்யாதே, கொலை செய்யாதே, பொய் சொல்லாதே என்று பத்துக் கட்டளைகள் வலியுறுத்துகின்றது. இவையனைத்திலும் நாம் வெற்றி பெற்றவர்களாக வேண்டும். எமது அன்றாட வாழ்க்கை மரியன்னையின் வாழ்க்கையைப் போல குற்றமற்ற வாழ்க்கையாக இருக்கவேண்டும். மற்றவர்களை பகைத்து, பொறாமைப்பட்டு, தன்னலம் கருதி நாங்கள் வாழும்போது அன்னை மரியிடமிருந்து நாங்கள் தூர விலகுகின்றோம். இவ்வுலகில் நாங்கள் தாழ்ச்சியுள்ளவர்களாக, மற்றவர்களை மதித்து, மன்னித்து, மற்றவர்ளோடு நல்ல உறவுகளோடு வாழுகின்றோமோ அங்கேதான் இறைவன் இருப்பார். சமாதானமும், நீதியும் அங்கே இருக்கும். என்று தனது மறையுரையில் கூறினார்.

# ந்த மறைக்கல்வியில் ...ரின் வரவேற்புக்களும்



பிரான்சிஸ் அவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளது, சான் எஜிதியோ அமைப்பு.

இந்த மாற்றம் குறித்த அறிக்கையை, திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயத்தின் தலைவர், கர்தினால் Luis Francisco Ladaria அவர்கள், இவ்வியாழனன்று வெளியிட்டார்.

உரோம் நகரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் சான் எஜிதியோ கத்தோலிக்க பிறரன்பு அமைப்பு, உலகெங்கும் மரண தண்டனை இரத்து செய்யப்படுவதற்கு அழைப்பு விடுத்து வருகிறது.

மேலும், இலத்தீன் அமெரிக்க ஆயர்களும், திருத்தந்தையின் இத்தீர்மானத்தை வரவேற்று, அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

## பேராயர் பிசிகெல்லா – மரண தண்டனை மனித மாண்புக்கு எதிரானது

மரண தண்டனை நிறைவேற்றுதல், மனிதரின் மீறமுடியாத மாண்பின் மீது தாக்குதல் நடத்துவதாகும் என்பதால், இத்தண்டனை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மரண தண்டனை குறித்து, கத்தோலிக்க மறைக்கல்வி ஏட்டில் செய்துள்ள மாற்றம், விசுவாசத்தின் சாரத்தைத் தெளிவுபடுத்துவதற்கும், மனித மாண்பைப் பாதுகாப்பதற்கும் எடுக்கப்பட்டுள்ள முயற்சியாக உள்ளது என, பேராயர் ரீனோ பிசிகெல்லா (Rino Fisichella) அவர்கள் கூறியுள்ளார்.

கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி ஏடு, எண் 2267ல் மரண தண்டனை குறித்து செய்யப்பட்டுள்ள மாற்றம், இதற்கு முந்தைய திருஅவையின் போதனைகளின் தொடர்ச்சியாக உள்ளது என்று, புதிய வழிகளில் நற்செய்தி அறிவித்தலை ஊக்குவிக்கும் திருப்பீட அவையின் தலைவர், பேராயர் பிசிகெல்லா அவர்கள் கூறியுள்ளார்.

லொசர்வாத்தோரே ரொமானோ எனப்படும் வத்திக்கானின் நாளிதழில், இவ்வாறு தன் கருத்துக்களை எழுதியுள்ள பேராயர் பிசிகெல்லா அவர்கள், இந்த மாற்றத்திற்கென கொடுக்கப்பட்டுள்ள மூன்று காரணங்கள் பற்றியும் விளக்கியுள்ளார்.

கடுமையான குற்றங்கள் புரிந்திருந்தாலும்கூட, ஒருபோதும் இழக்க இயலாத ஒவ்வொரு மனிதரின் மாண்பை அங்கீகரித்தல், இக்காரணங்களில் முக்கியமானது என்றும், கிறிஸ்தவர்களின் விழிப்புணர்வில் நேர்மறையான மாற்றத்தை இது கொணரும் என்றும், கூறியுள்ளார், பேராயர் பிசிகெல்லா.

நாடுகள், தற்போது, தடுப்புக்காவலில் மிகவும் கடுமையான அமைப்புமுறைகளைக் கொண்டிருக்கும் வேளையில், குற்றவாளிகள் மனமாற்றம் அடையவும், மீட்படைய இந்த மாற்றம் உதவும் எனவும், கருத்து தெரிவித்துள்ளார், பேராயர் பிசிகெல்லா.

இந்த மாற்றம் குறித்த அறிக்கையை, திருப்பீட விசுவாசக் கோட்பாட்டு பேராயத்தின் தலைவர், கர்தினால் Luis Francisco Ladaria அவர்கள், இவ்வியாழனன்று வெளியிட்டார்

# மருதமடு திருத்தலத்தில் ஆவணி மாத திருவிழா நிகழ்வுகள்.






## வர்ணம் தீட்டுக.



## 4. தனிச் செபப் பழக்கம்

**1. மகிழ்வின் மறைநிகழ்வுகள்**

**வானதூதர் மரியாவுக்கு மனித அவதாரத்தை அறிவிக்கிறார்.**

வானகத் தந்தையே அப்பா!

மங்கள வார்த்தை நிகழ்வின்போது அன்னை மரியா உம் திருவுளத்தைத் தாழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். அவரின் பரிந்துரையால் தாழ்ச்சியோடு வாழும் மனநிலையை எனக்குத் தாரும்.

**பரலோகத்தில் இருக்கிற...**

மரியா இறைப்பிரசன்னத்தில் இருக்கிறார். **அருள் நிறை**
வானவர் மரியாவிடம் வருகிறார். **அருள் நிறை**
வானதூதர் மரியாவை வாழ்த்துகிறார். **அருள் நிறை**
மரியாவோ கதிகலங்கிப் போகிறார். **அருள் நிறை**
வானதூதர் அஞ்சாதீர் என்கிறார். **அருள் நிறை**
நீர் திருமகனைப் பெறுவீர் என்கிறார். **அருள் நிறை**
தான் கன்னியாயிற்றே என்கிறார். **அருள் நிறை**
ஆவியார் உம்மேல் வருவார் என்கிறார். **அருள் நிறை**
அப்போது குழந்தையும் உருவாகும் என்கிறார். **அருள்நிறை**
மரியாவோ ஆம் என்று பதிலளிக்கிறார். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

**மரியா எலிசபேத்துக்கு உதவிசெய்ய விரைகிறார்.**

வானகத் தந்தையே, அப்பா!

எலிசபேத்து கருவுற்றிருந்தபோது மரியா அவருக்கு உதவிசெய்தார். அவரின் பரிந்துரையால் பிறருக்கு உதவும் மனநிலையை எனக்குத் தாரும்.

**பரலோகத்தில் இருக்கிற...**

மரியா எலிசபேத்திடம் செல்கிறார். **அருள் நிறை**
அவர் எலிசபேத்தை வாழ்த்துகிறார். **அருள் நிறை**
வாழ்த்தைத் திருமுழுக்கு யோவான் கேட்கிறார். **அருள் நிறை**
தாய் வயிற்றினுள் அவர் துள்ளுகிறார். **அருள் நிறை**
எலிசபேத்தும் மரியாளை வாழ்த்துகிறார். **அருள் நிறை**
மரியாவின் குழந்தையும் பேறுபெற்றது என்கிறார். **அருள் நிறை**
மரியாவை ஆண்டவரின் தாய் என்கிறார். **அருள் நிறை**
உம்மைக் காணப் பேறுபெற்றேன் என்கிறார். **அருள் நிறை**
ஆண்டவர் சொல்வது நிறைவேறும் என்கிறார். **அருள் நிறை**
மரியா எலிசபேத்துக்கு உதவி செய்கிறார். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

**மாட்டுத் தொழுவத்தில் இயேசு பிறந்தார்**

வானகத் தந்தையே அப்பா!

அன்னை மரியா உம் மகனை ஏழ்மையில் பெற்றெடுத்தார். அவரின் பரிந்துரையால் ஏழையாக வாழும் நல்மனதை எனக்குத் தாரும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

மக்களை கணக்கெடுக்க மன்னர் ஆணையிடுகிறார். **அருள் நிறை**
எல்லோரும் பெயர்பதியச் செல்கிறார்கள். **அருள் நிறை**
யோசேப்பு மரியாவோடு பெத்தலேகம் செல்கிறார். **அருள் நிறை**
மரியாவுக்குப் பேறுகாலம் வருகிறது. **அருள் நிறை**
சத்திரத்தில் இடமில்லாமல் போகின்றது. **அருள் நிறை**
அவர்கள் மாட்டுத் தொழுவத்தில் தங்குகிறார்கள். **அருள் நிறை**
அங்கே இயேசு பிறக்கிறார். **அருள் நிறை**
வானோரின் இன்னிசை கேட்கிறது. **அருள் நிறை**
இடையர்கள் குடிலுக்கு வருகிறார்கள். **அருள் நிறை**
அரசர்களும் பரிசோடு வருகிறார்கள். **அருள் நிறை**

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**



# கிளியும் மௌன மொழியும்!

ஒரு கடையில் பேசுகின்ற கிளி ஒன்றை ஒரு பெண்மணி விலை கொடுத்து வாங்கிச் சென்றார். அந்தக் கிளியைத் தனது செல்லப் பிராணியாக வைத்துக்கொள்ள ஆசை. வீடு சென்ற கிளி ஒரு நாள் முழுவதும் பேசவில்லை. கிளியை வாங்கிச் சென்ற பெண்மணி புதிய இடமாறுதலால் அமைதி காக்கிறது என்று அடுத்த நாளுக்காகவும் காத்திருந்தார். மறுநாளும் கிளி பேசாததால் வெறுப்படைந்த பெண்மணி கிளி வாங்கிய கடைக்கு வந்து கிளி பேசாததைச் சொன்னார்.

கடைக்காரர், "கிளி கூண்டில் கண்ணாடி இருக்கிறதா? கிளிக்கு கண்ணாடி இருந்தால் மிகவும் பிடிக்கும். காரணம் அது தன் உருவத்தை கண்ணாடியில் பார்த்துக்கொண்டு பேச ஆரம்பிக்கும்" என்று கூறினார். கிளி வாங்கிய பெண்மணி கிளி கூண்டில் கண்ணாடியை பொருத்தச் செய்தார். ஆனாலும், கிளி பேசவில்லை. மீண்டும் கிளி வாங்கிய கடைக்கு வந்து பிரச்சனையைச் சொன்னார்.

கடைக்காரர், "கிளியுள்ள கூண்டில் ஒரு ஏணியாவது உள்ளதா?" என்று கேட்டார். அந்தப் பெண்மணி "இல்லை" என்றார். "கிளிக்கு ஏணியில் ஏறி அமர்ந்துகொண்டு பேசுவது மிகவும் பிடிக்கும். எனவே, உடனடியாகப் போய் ஒரு ஏணியைப் பொருத்துங்கள்" என்று அறிவுரை கூறினார். பெண்மணியும் வீடு சென்று கடைக்காரர் சொன்னபடியே செய்தார். மறுநாளும் கிளி பேசவில்லை.

கடைக்கு வந்த பெண்மணியிடம், "கிளி உட்கார்ந்து விளையாட ஊஞ்சல் உள்ளதா?" என்று கேட்டார். வேண்டா வெறுப்பாக அதையும் வாங்கிச் சென்றார். கடைக்காரர் சொன்னபடி கண்ணாடி, ஏணி, ஊஞ்சல் எல்லாம் பொருத்தியும் கிளி பேசவில்லை.

இரவு தூங்கி எழுந்த மறுநாள் கிளி இறந்துவிட்டது. வருத்தத்தோடு கடைக்கு வந்தார் பெண்மணி. கடைக்காரர் நடந்ததைக் கேட்டுவிட்டு, "கிளி சாவதற்கு முன் ஏதாவது சொன்னதா? என்று கேட்டார். "ஆமாம், கடைசியாக கிளி எதாவது சாப்பிடக் கிடைக்குமா என்று கேட்டது. அதைக் கொண்டு செல்வதற்குள் இறந்துவிட்டது" என்றார். எல்லா வசதிகளையும் செய்து கொடுத்த பெண்மணி கிளிக்குப் பசிக்கும் என்ற அடிப்படை விசயத்தைக் கவனிக்கவில்லை.

**பசித்தவருக்கு உணவு கொடு**

**அதுவே இறைவனுக்கு விருப்பமான செயல்**

## எம் தெய்வமே!

*எம் தெய்வமே!*
*நாங்கள் அணியும்*
*உடைகளைப் பார்த்து அல்லாமல்*
*நாங்கள் செய்யும் செயல்களைப் பார்த்தே*
*நீர் எம்மைத் தீர்ப்பிடுகிறீர்.*
*உண்மையே*
*எல்லாவற்றிற்கும் மேல்...*
*உண்மையுள்ளவராய் வாழ்வது*
*அதைவிடச் சிறந்தது.*
*உண்மையுள்ளவராய்*
*வாழ வரம் தாரும்.*

*நான் பிறரை அன்புசெய்யவும்*
*அதனால் உம்மைக் காணவும்*
*மனம் தாரும்*

*இதனால் நான் பெறும் வெற்றியை*
*யாராலும் வெல்ல முடியாத வெற்றியாக்கி*
*அது என்னிடம் தங்கும்படி*
*அருள்புரிவீராக!*

# கேடு நினைப்பவர் கெடுவார்

ஒரு சலவைத் தொழிலாளி ஓர் ஆடும், ஒரு கழுதையும் வளர்த்து வந்தான். ஆடு, செல்லப் பிராணியாக உண்டு கொழுத்து வந்தது. கழுதை பொதி சுமந்து அவனுக்கு உதவி வந்தது.

ஒருநாள் ஆடு கழுதையிடம், "நீ ஏன் தினமும் ஏமாந்து பொதி சுமக்கிறாய்? சுகமில்லாதது போல் நடி... சோர்ந்து படுத்துக்கொள். என்னைப்போல் சும்மா இருந்து சுகம் காணலாம்" என்றது.

கழுதைக்கும் ஆசை வந்தது. அப்படியே நடித்தது. சலவைத் தொழிலாளிக்கு வேலை கெட்டுப்போனது. சில நாட்கள் பொறுத்துப் பார்த்துவிட்டு ஒரு வைத்தியரை அழைத்து வந்தார். வைத்தியர் கழுதையை நன்றாகச் சோதித்தார். நோய் ஒன்றும் இல்லை என்று புரிந்து கொண்டார்.

இருந்தாலும் வைத்தியம் செய்தால்தானே வசூல் கிடைக்கும். யோசித்தார். பக்கத்தில் கிடந்த கொழுத்த ஆட்டுக்குட்டி கண்ணில் பட்டது. அவர் சொன்னார். "இந்த ஆட்டுக்கறியில் ஒரு லேகியம் செய்து கழுதைக்குக் கொடுத்தால் நோய் பறக்கும். நீ ஆட்டை எனக்குக் கொடுத்துவிடு. மற்றது என் பொறுப்பு" என்றார்.



சலவைத் தொழிலாளிக்கு கழுதைதானே முக்கியம்! ஆடு பலியானது. பயந்து போன கழுதை ஒழுங்காய் வேலை செய்தது.

**மற்றவர்களைக் கெடுக்க நினைத்தால், நமக்குக் கேடு தானாகத் தேடி வரும்.**

# நல்லதையே நினைத்திட நல்லதையே பெற்றிட!



ஒளியைப் பற்றிச் சிந்திக்கிறவன் ஒளிமயமாகிறான்!
அன்பைப் பற்றிச் சிந்திக்கிறவன் அன்புமயமாகிறான்!
காமத்தைப் பற்றி சிந்திக்கிறவன் காமுகனாகிறான்!
தர்மத்தைப் பற்றிச் சிந்திக்கிறவன் தர்மத்தின் தலைவனாகிறான்.

**இப்படி நாம் எதைப் பற்றிச் சிந்திக்கிறோமோ அதுவாகவே மாறுகிறோம்.**

ஒருமுறை வியாபாரி வேறு ஊருக்குப் போகும் வழியில் அடர்ந்த காடு வந்தது. மிகவும் களைப்பாக இருந்ததால் சற்று ஓய்வு எடுத்து தனது பயணத்தைத் தொடர ஒரு நிழலைத் தேடினான். அது கற்பக மரம். நினைத்ததைக் கொடுக்கும் என்பது அவனுக்குத் தெரியாது. ஐயோ, நான் கட்டுச்சோறு கொண்டுவர மறந்துவிட்டேனே, இருந்திருந்தால் வயிறார சாப்பிடுவேனே என்று நினைக்க, உடனே கற்பக மரம் கட்டுச்சோறைக் கொடுத்தது. கட்டுச்சோற்றைக் கண்டதும் உடனே பயந்து சுற்றுமுற்றும் பார்த்து தன் பசியைப் போக்கிக் கொண்டான். குடிக்கத் தண்ணீரைத் தேடி கண்ணுக்கு எட்டிய தூரம்வரை தண்ணீர் கிடைக்காததால் ஒரு குளம் உருவாக வேண்டும் என்று நினைத்தான். உடனே குளம் தோன்றியவுடன் தனது தாகத்தைத் தீர்த்துக்கொண்டான். உடனே நினைத்ததும் கிடைத்தவுடன் ஆச்சரியமும், சந்தோஷமும் அடைந்தான். நிறைய மரங்கள் உருவாக வேண்டும் என்று நினைக்க அவ்வாறே நடந்தது. மரங்கள் அசைந்து காற்று வீச உறக்கத்தில் கனவு வந்தது. இந்த அடர்ந்த காட்டில் தான் மட்டும் தனியாக இருக்க, புலி வந்து அடித்துக் கொன்றால் என்ன ஆகும் என்று நினைக்க புலியும் வந்து அடித்துக் கொன்றது.

நாம் நல்லதையே நினைப்போம். நல்வழியில் நடப்போம். மனம்போல் வாழ்வு மலரும். நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய். உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆகிறாய். இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும், இரவிலும் உன்முன் நிறுத்து, அதிலிருந்து நல்ல செயல்கள் விளையும்.

இளைஞன் ஒருவன் ஜென் குருவிடம் போய், குருவே, நல்லதையே நினைக்க வேண்டும், நல்லதையே செய்ய வேண்டும் என நான் விரும்புகிறேன். நல்லெண்ணம் என்னுள் நுழையும்போது அதன் தன்மை மாறிவிடுகிறது. தாங்கள் இதற்கு ஓர் தீர்வு சொல்லுங்கள் என்று பணிவோடு கேட்டான். சமையலறையில் ஒரு பெரிய கோப்பையில் தேநீர் இருந்தது. ஒரு கோப்பையில் கலங்கலான பழைய தேநீரும், மற்றொன்று காலியாகவும் இருந்தன. ஜென் அந்த இளைஞனை அழைத்து பெரிய கோப்பையின் தேநீரை கழுவப்படாத பழைய கோப்பையில் ஊற்று என்று நீட்டினார். இளைஞன் ஊற்ற கோப்பை நிரம்பி வழிந்தது. பின் காலியாக இருந்த கோப்பையில் ஊற்றச் சொன்னார். புதிய கோப்பையில் புதிய தேநீர் எந்தக் கலப்படமும் இல்லாமல் பொலிவுடன் இருந்தது. மனதுக்குள் குப்பையும், தூசுவும் நிரம்பியிருந்தால் புதிய எண்ணங்களும் கெட்டுப்போகும். மனதை பளிச்சென்று வைத்துக் கொண்டால் உள்ளே விழும் எண்ணங்களும் மெருகு மாறாமல் பளிச்சென்று இருக்கும். ஓர் இயந்திரம் சரியாக இயங்குவதற்கு எண்ணெய் எப்படி அவசியமோ அதுபோலத்தான் ஒருவருடைய வாழ்வும் சரியாக இயங்குவதற்கு நல்ல சிந்தனைகள் அவசியம் என்றார்.

**'நல்லாரைக் காண்பதும் நன்றே, நலம்மிக்க நல்லார் சொல் கேட்பதும் நன்றே – நல்லார் குணங்கள் உரைப்பதும் நன்றே, அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே'**




என்று நல்லவர்களின் குணங்களை வாயாரப் பேசிக் கொண்டிருப்பதும் நன்மை தரும் என்றார் ஔவையார் மூதுரையில்.

அறநெறியில் நடக்காத சில பெரிய பணக்காரர்களைப் பார்த்து, அவர்களைப்போல மனம்போனபடி வாழ, பணம் சேர்க்கத் துடிக்கிறோம். கூடா நட்பு கேடாய் முடியும் என்று ஆன்றோர் வாக்கைப் பாடசாலைப் புத்தகம் பாடமாய் புகட்டுகிறது. படிப்பு அதன்படி நடப்பதற்கே. நடந்திருந்தால் வகுப்பறையில் ஓர் ஆசிரியை கொலையாகியிருக்க மாட்டார். பொறியியல் கல்லூரி வளாகத்திலே கல்லூரி முதல்வர் துடிக்கத் துடிக்க இரத்த வெள்ளத்தில் மூழ்கியிருக்க மாட்டார். மாணவர்களைத் திருத்த நினைத்தவர் தெய்வத்திற்கு நிகரானவர். நாம் பொய் சொல்லித் தப்பித்துக் கொள்ளாமல் உண்மைமையச் சொல்லி குற்றத்தை ஏற்றுக்கொள்வோம்.

எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தோம் என்பது பெரிதல்ல. வாழும் காலங்களில் நாம் எதைச் சாதித்தோம், எத்தனை பேர்களை நாம் அழ வைத்தோம், எத்தனை பேர்களை நாம் சிரிக்க வைத்தோம் என்பதுதான் முக்கியம். யார் ஒருவர் எப்போதும் தீமையைப் பற்றியே பேசுகிறாரோ, அவரைத் தேடி தீமையே வரும். நல்லதை நினைப்பவர்களுக்கு நல்லதே நடக்கும். இதுதான் இயற்கையின் நியதி.

வாழ்க்கையை மகிழ்ச்சியோடு வாழ்வோம். எதற்கும் பொறாமை, கோபம், வெறுப்பு எதற்கு? நமக்கு நல்லது நடக்கும் சமயங்களில் நாமும் பிறருக்கு அதைச் செய்ய முயல வேண்டும். இயேசு கூறியதுபோல் உன்னைப்போல் உன் அயலானையும் நேசி என்று. தினை விதைத்தவன் தினையையும், வினை விதைத்தவன் வினையையும் அறுவடை செய்வான். நமக்கு நல்லது நடக்க வேண்டும் என்று எப்படி விரும்புகிறோமோ அது பிறருக்கும் நடக்க வேண்டும் என்று விரும்ப வேண்டும். நாமும், நம்மைச் சார்ந்தவர்கள் மட்டுமே நன்றாக இருக்க வேண்டும் என்று நினைப்பது போலவே மற்றவர்களும் நினைக்க வாய்ப்புள்ளது என்பதை நம்மில் பலரும் மறந்து போகின்றோம்.

இந்த உலகம் துன்பம் மிக்கதுதான். நாம்தான் இனியவற்றறைக் காணவேண்டும். பாலையும், நீரையும் கலந்து வைத்தால் பாலை மட்டும் பருகும் அன்னப் பறவை, மண்ணும், சர்க்கரையும் கலந்துவிட்ட போதிலும் எறும்பு மண்ணை நிராகரித்துவிட்டு சர்க்கரையை மட்டும் எடுத்துச் செல்லும். இந்த உலகம் நல்லவையும், கெட்டவையும் கலந்தது. பாலை மட்டும் பருகும் அன்னப் பறவையாக, சர்க்கரையை மட்டும் எடுத்துச் செல்லும் எறும்பாக நல்லவற்றை மட்டும் எடுத்துக் கொள்வோம். சிந்தனைதான் நம் உடல்மீது ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும். நாம் ஆரோக்கியமாக வாழ நல்லவற்றையே சிந்திப்போம். நல்லதே நினைப்போம். நல்லதே பெறுவோம். நமது வாழ்வின் வளம் கூடும்.

## சிந்தனைக்கு

* இதமானது எது?
**தர்மம்**

* நஞ்சு எது?
**பெரியவர்களின் அறிவுரையை அவமதிப்பது.**

* மதுவைப்போல் மயக்கத்தை உண்டுபண்ணுவது எது?
**பற்றுதல்**

* கள்வர்கள் யார்?
**புலன்களை இழுத்துக் கொண்டு போகும் விஷயங்கள்**

* எதிரி யார்?
**சோம்பல்**

* எல்லோரும் பயப்படுவது எதற்கு?
**இறப்புக்கு**

* குருடனை விட குருடன் யார்
**ஆசைகள் அதிகம் உள்ளவன்**

* சூரன் யார்?
**கெட்ட வழியில் மனம் செல்லாமல் அதை அடக்குபவன்**

* மதிப்புக்கு மூலம் எது?
**எதையும், யாரிடமும், கேட்காமல் இருப்பது.**

* எது துக்கம்?
**மனநிறைவு இல்லாமல் இருப்பது.**


* உயர்ந்த வாழ்வென்று எதை சொல்லலாம்?
**குற்றங்கள் புரியாமல் வாழ்வதை**

* எது சுகமானது?
**அனைத்தையும் தியாகம் செய்துவிட்டு பற்றின்றி வாழ்வது.**

* எது இன்பம் தருவது?
**நல்ல மனமுடையோரின் சிநேகிதம்**



# நவீன காலத்தின் உன்னத திருத்தந்தை



ஐப்பசி 14ம் தேதி புனிதராக அறிவிக்கப்படவிருக்கும் திருத்தந்தை 6ம் பவுல், நவீன காலத்தின் உன்னதத் திருத்தந்தை.

அருளாளர், திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் இறந்ததன் 40வது நினைவு நாள் 6.8.2018 அன்று திருஅவையில் நினைவுகூரப்படுவதைக் குறித்தும் தன் மூவேளைச் செபவுரையின் இறுதியில் குறிப்பிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களை நாம், வணக்கத்துடனும் நன்றியுடனும் இந்நேரத்தில் நினைவுகூர்கிறோம், வானுலகிலிருந்து அவர் நமக்காகவும் இவ்வுலகின் அமைதிக்காகவும் பரிந்துரைத்துக் கொண்டிருக்கிறார் என கூறினார் திருத்தந்தை.

விரைவில் புனிதராக அறிவிக்கப்படவுள்ள அருளாளர் திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்கள், நவீன காலத்தின் மிக உன்னதத் திருத்தந்தை எனவும் குறிப்பிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ். இவ்வாண்டு ஐப்பசி மாதம் 14ம் தேதி, வத்திக்கானில் இடம்பெற உள்ள சிறப்புத் திருப்பலியில், அருளாளர் ஆறாம் பவுல் அவர்களை புனிதராக அறிவிக்க உள்ளது திருஅவை.

1897ம் ஆண்டு இத்தாலியின் Concesio எனுமிடத்தில் பிறந்த திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள், இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நடந்துகொண்டிருந்தபோது, 1963ம் ஆண்டு திருத்தந்தையாக பொறுப்பேற்று, 1978ம் ஆண்டு ஆவணி மாதம் 6ம் திகதி காலமானார்.




# நினிவே சமவெளியில் நான்காம் ஆண்டு நினைவு ஊர்வலம்

ஈராக்கில், புதிய கல்வியாண்டில், கிறிஸ்தவ, இஸ்லாமிய குழந்தைகள் இணைந்து படிப்பதற்கும், அவர்களிடையே நட்புணர்வை வளர்ப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

ஈராக் நாட்டின் நினிவே சமவெளியில் அமைந்துள்ள கரம்லெஸ் (Karamles) நகரில், ஆவணி 6ம் திகதி திங்களன்று, கிறிஸ்தவர்கள் செப ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டனர் - பீதேஸ் செய்தி கூறுகிறது.


நான்கு ஆண்டுகளுக்கு முன், 2014ம் ஆண்டு ஆவணி 6,7 ஆகிய இரு நாள்கள், இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள், நினிவே சமவெளி நகரங்களை ஆக்ரமித்தைத் தொடர்ந்து, அப்பகுதியில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் வெளியேறிச் சென்ற நிகழ்வின் நினைவாக, இந்த செப ஊர்வலம் நடத்தப்பட்டது.

நினிவே சமவெளியில் அமைந்துள்ள Qaraqosh, Karamles, Talkief, மற்றும் Bartalla ஆகிய நகரங்களிலிருந்து வெளியேறிய கிறிஸ்தவர்களில் 300 குடும்பத்தினர், கடந்த ஆண்டு மார்கழி மாதம் கரம்லெஸ் நகருக்குத் திரும்பிவந்து, கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடினர் என்பதை, பீதேஸ் செய்தி குறிப்பிட்டுள்ளது.

கரம்லெஸ் நகரில் நடைபெற்ற ஊர்வலம் ஒரு வெற்றி ஊர்வலம் அல்ல, மாறாக, வருங்காலத்தைக் குறித்த நம்பிக்கையையும், மகிழ்வையும் குறிக்கும் செப ஊர்வலம் என்று, இந்நகரில் குடியேறியுள்ள கிறிஸ்தவர்களுக்கு பணியாற்றும், அருள்பணி Paul Thabit Mekko அவர்கள் ஆசிய செய்திக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.



கரம்லெஸ் நகரில் விரைவில் தொடங்கவிருக்கும் புதிய கல்வியாண்டில், கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய குழந்தைகள் ஒன்றிணைந்து படிப்பதற்கும், வருங்காலத் தலைமுறையினரிடையே ஆரம்பத்திலிருந்தே நட்புணர்வை வளர்ப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அருள்பணி மெக்கோ அவர்கள் கூறினார். (Fides)



# அருள்பணியாளர்களுக்கு அன்பாதரவு காட்டுங்கள்

அருள்பணியாளர்களின் பாதுகாவலர் புனித மரிய வியான்னி அவர்களை, 1925ம் ஆண்டில், புனிதராகவும், 1929ம் ஆண்டில் பங்குத்தந்தையரின் பாதுகாவலராகவும் திருத்தந்தை 11ம் பயஸ் அவர்கள் அறிவித்தார்.

உங்கள் அருள்பணியாளர்களுக்கு, நட்பு மற்றும் பாசத்துடன், ஆதரவு அளியுங்கள் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூறியுள்ளார்.

புனித மரிய வியான்னி அருளப்பர் அவர்களின் விழாவாகிய ஆவணி 04, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், அருள்பணியாளர்களுக்கு, நட்புடன் ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். பிரான்ஸ் நாட்டில் 1786ம் ஆண்டில் பிறந்த புனித மரிய வியான்னி அவர்கள், 1815ம் ஆண்டில் அருள்பணியாளராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். ஆர்ஸ் என்ற சிறிய ஊரின் பங்குத்தந்தையாக, மறைப்பணியை ஆரம்பித்த இவர், ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய 16 மணி நேரங்கள் ஒப்புரவு அருளடையாளத்தை நிறைவேற்றினார். இந்த அருளடையாளத்தைப் பெறுவதற்கு விசுவாசிகள் எந்த நேரத்தில் வந்தாலும், அயராது அதை நிறைவேற்றினார். இப்புனிதர் இறந்த நூறாம் ஆண்டு நினைவாக, 1959ம் ஆண்டில், புனித திருத்தந்தை 23ம் ஜோன் அவர்கள், புனித மரிய வியான்னி அவர்களின் புனித வாழ்வை மையப்படுத்தி, Sacerdotii nostri primordia எனப்படும் திருமடலை வெளியிட்டு, இப்புனிதர், அருள்பணியாளர்களின் புனித வாழ்வுக்கு எடுத்துக்காட்டு என அறிவித்தார்

# இளையோரின் தாராள மனதை வெளிப்படுத்தும் திருப்பயணம்

70,000த்திற்கும் மேற்பட்ட இளையோர் அடங்கிய அமைதிப்படை ஒன்று உரோம் நகர் நோக்கி வருகிறது - இத்தாலிய ஆயர் பேரவையின் தலைவர்

திருஅவைக்குத் துணையாக இருக்கும் அமைதிப்படை ஒன்று உரோம் நகர் நோக்கி நடைபயணமாக வந்துகொண்டிருக்கிறது என்று, இத்தாலிய ஆயர் பேரவையின் தலைவர், கர்தினால் குவால்தியேரோ பஸ்ஸெத்தி (Gualtiero Bassetti) அவர்கள், ஆவணி 7, செய்தியாளர்களிடம் கூறினார்.


16 வயது முதல், 30 வயது வரை உள்ள 70,000த்திற்கும் அதிகமான இளையோர், இத்தாலியின் அனைத்து மறைமாவட்டங்களிலிருந்தும் உரோம் நகர் நோக்கி நடைப்பயணம் மேற்கொண்டுள்ளனர் என்றும், 120 ஆயர்கள், இளையோருடன், இத்திருப்பயணத்தில் இணைந்துள்ளனர் என்றும், கர்தினால் பஸ்ஸெத்தி அவர்கள் கூறினார்.

“இளையோர், விசுவாசம் மற்றும் அழைத்தலை தெளிந்து தேர்தல்” என்ற கருத்தை மையப்படுத்தி, இவ்வாண்டு ஐப்பசி மாதம் வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றத்திற்கு ஒரு தயாரிப்பாக, இளையோர், திருத்தந்தையைச் சந்தித்து, தங்கள் எண்ணங்களையும், கேள்விகளையும் அவருடன் பகிர்ந்துகொள்ள வருகின்றனர் என்று, கர்தினால் பஸ்ஸெத்தி அவர்கள், செய்தியாளர்களிடம் கூறினார்.

கோடைக்காலத்தின் வெப்பத்தையும் பொருட்படுத்தாமல், 70,000த்திற்கும் மேற்பட்ட இளையோர் மேற்கொண்டுள்ள இத்திருப்பயணம், அவர்களது தாராள மனதையும், திருஅவை மீது கொண்டுள்ள பற்றையும் வெளிப்படுத்துகிறது என்று, கர்தினால் பஸ்ஸெத்தி அவர்கள் மகிழ்வுடன் குறிப்பிட்டார்.



# கல்லறைகளை விவசாய நிலங்களாக மாற்றும் சைனா



விவசாய நிலங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இறந்த உடல்களை எரிக்க கட்டாயப்படுத்தும் சைன மாநில அரசு.

மக்களின் கல்லறைக்கென நிலங்கள் ஒதுக்கப்பட்டு, விவசாய நிலங்களின் எண்ணிக்கைக் குறைவதால், இறந்த உடல்கள் புதைக்கப்படக் கூடாது, மாறாக, எரியூட்டப்பட வேண்டும் என்ற சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது, சைனாவின் Jianxi மாநிலம்.

அடக்கச் சடங்குகள் எதுவும் நிறைவேற்றப்படக் கூடாது என அறிவித்துள்ள அப்பகுதி காவல்துறை, மக்களின் வீடுகளில் புகுந்து, நூற்றுக்கணக்கான சவப்பெட்டிகளை கைப்பற்றி, சேதப்படுத்தியுள்ளது.

ஏற்கனவே, ஏப்ரல் மாதத்தில், எரியூட்டல் சட்டத்தை மதிக்காமல் புதைக்கப்பட்டதாகக் கூறி, கல்லறை ஒன்று தோண்டப்பட்ட நிகழ்வு நடந்துள்ள நிலையில், தற்போது பல நூற்றுக்கணக்கான சவப்பெட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டு, சேதப்படுத்தப்பட்டுள்ளது மக்களிடையே எதிர்ப்பை வலுப்படுத்தியுள்ளது.

தங்கள் கைகளாலேயே சவப்பெட்டிகளைச் செய்து வைத்து காத்திருப்பது, தங்களின் ஆயுளை நீட்டிக்கும் என சைனாவின் Jianxi பகுதி மக்கள் நம்புவதால், ஒவ்வொரு வீட்டிலும் சில சவப்பெட்டிகள் இருக்கும் என்பதை அறிந்துள்ள அதிகாரிகள், தற்போது அவற்றைக் கைப்பற்றி சேதப்படுத்தியுள்ளனர்.

இறந்த உடல்களை எரிக்கும்பட்சத்தில், கல்லறை நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றலாம் என்ற எண்ணத்தில், கல்லறைகளுக்கு தீவிர தடை விதித்து செயல்படுத்தி வருகிறது சைனாவின் Jianxi மாநிலம்.

# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்

பகுதி – 2

(மத் 6:9)



## இறைபுகழ்ச்சி

செபத்தின் அடிப்படை கூறுகள் ஐந்து ஆராதனை, (வழிபாடு, தொழுகை), இறைபுகழ்ச்சி (நன்றி), மன்றாட்டு, மன்னிப்பு, அர்ப்பணம் (கையளித்தல்). இந்த ஐவகைக் கூறுகளும் நிறைவாக இணைவதே முழுமையான செபம் என்று கண்டோம்.

இயேசு கற்றுத் தந்த பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே என்னும் செபம் இந்த ஐந்து கூறுகளையும் தன்னகத்தே கொண்டு நிறைவான செபமாகத் திகழ்கிறது. நாள்தோறும் நாம் பங்குபெறும் திருப்பலியும் ஐங்கூறுகளையும் கொண்ட நிறைவான செபவழிபாடு.

இந்த ஐவகைக் கூறுகளில் மிக எளிதானதும், இனிமையானதும், ஆர்வம் நிறைந்ததும் எது எனக் கேட்டால், அது இறைப்புகழ்ச்சிதான். எனவே நமது தனி, குழு, பொது செபங்களில் இறைப்புகழ்ச்சிக்கு நாம் அதிக நேரமும் அழுத்தமும் தரவேண்டும்.

இறைப்புகழ்ச்சியின் சிறப்புகள் பல "இறைவனை நாம் ஏன் புகழவேண்டும்?" இந்தக் கேள்விக்குத் திருச்சபையின் திருவழிபாடு தெளிவான, அருமையான பதிலைத் தருகிறது. நாள்தோறும் திருப்பலியில் நாம் செபிக்கின்ற நற்கருணை மன்றாட்டின் தொடக்கவுரையில் இறைப்புகழ்ச்சியின் இறையியலையே திருச்சபை வழங்குகின்றது.

"ஆண்டவரே, தூயவரான தந்தையே, என்றும் வாழும் எல்லாம் வல்ல இறைவா, எந்நாளும் எவ்விடத்திலும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துவது மெய்யாகவே தகுதியும், நீதியும் ஆகும். எங்கள் கடமையும் மீட்புக்குரிய செயலுமாகும்" என்று நாள்தோறும் நாம் செபிக்கின்றோம். ஆம், இறைவனைப் புகழ, அவருக்கு நன்றி செலுத்த நான்கு இறையியல் காரணங்களை இம்மன்றாட்டு வழங்குகிறது.

### 1. இறைவன் புகழ்ச்சி பெறத் தகுதியுள்ளவர்.

நிறைவாக புகழ்ச்சியும் நன்றியும் பெறுவதற்கு இறைவன் ஒருவர் மட்டுமே தகுதிபெற்றவர். பொதுவாக, அறிஞர்கள், சான்றோர்கள், மேடைகளில் பாராட்டப்படும்போது, இப்புகழ்ச்சியைப் பெற எனக்குத் தகுதியில்லை என அவையடக்கமாகக் கூறுவார்கள். உண்மையில் மனிதர்கள், யாருமே புகழ்ச்சிக்கு, பாராட்டுக்கு முழுத் தகுதியுடையவர்கள் அல்லர். காரணம் அவர்களது சாதனையில் இறைவனுக்கும் (சில வேளைகளில் பிற மனிதர்களுக்கும் கூட) பங்கிருக்கிறது. மேலும் அவர்களிடம் நிறைகளோடு, குறைகளும் இணைந்தே காணக் கிடக்கின்றன. ஆனால், இறைவன் ஒருவர் மட்டும் எல்லாப் புகழ்ச்சிக்கும் தகுதியுள்ளவர். காரணம் அவர் தூயவர், நல்லவர், நன்மைகளின் ஊற்று, அனைத்து ஞானமும், நன்மையும் அவரிடமிருந்தே வருகின்றன. அவரிடம் குறைகளென்று எதுவுமே இல்லை.

### 2. இறைவனைப் புகழ்வது நீதியானது

ஒருவருக்கு உரிய ஊதியத்தையோ, பொருளையோ (அல்லது தண்டனையைக்கூட) தவறாது வழங்குவதே நீதி. அவ்வகையில், இறைவன் புகழ்ச்சி பெறத் தகுதியுள்ளவராதலால், அவரைப் புகழ்வது நீதியான ஒரு செயல். சீசருக்கு வரி செலுத்துவது முறையா எனக் கேட்கப்பட்டபோது, இயேசு கொடுத்த ஞானம் நிறைந்த பதில் "சீசருக்கு உரியவற்றை சீசருக்கும், கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்" (மத் 22:21) எனவே, கடவுளுக்குரிய புகழ்ச்சியை, நன்றியைத் தவறாது நாம் கொடுக்க வேண்டும். அதுவே நீதி, அதைச் செய்ய மறுப்பது அநீதி.

### 3. இறைவனைப் புகழ்வது நமது கடமை

இறைவனைப் புகழ்வது நமது கடமையும்கூட. அவரிடமிருந்து எண்ணிலடங்கா நன்மைகளை நாம் பெற்றுக்கொள்கின்றோம், இயங்குகின்றோம், இருக்கின்றோம் (தி.பா 17:28). எனவே, நாம் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இத்தகைய உணர்வோடு தான் பவுலடியார். உங்கள் பொருட்டுக் கடவுளுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் (2 தெச 1:3) என்று எழுதினார்.

இறைப் பற்றில்லா மனிதர்களைப் பற்றிப் பேசும்போது பவுலடியார், அவர்கள் கடவுளை அறிந்திருந்தும் கடவுளுக்குரிய மாட்சியை அவருக்கு அளிக்கவில்லை, நன்றி செலுத்தவுமில்லை (உரோ 1:21) என்கிறார். எனவே, இறைப்பற்றுள்ளோர் அனைவரும் இறைவனுக்குரிய மாட்சியையும், புகழ்ச்சியையும், நன்றியையும் செலுத்த வேண்டும்.

### 4. இறைப்புகழ்ச்சி மீட்புக்குரிய செயல்

இறைப்புகழ்ச்சியினால் நாம்தான் பலனடைகின்றோம். மீட்புப் பெறுகின்றோம் என்பதனைத் திருப்பலியில் வார நாட்களில் பயன்படுத்தப்படும் பொதுத் தொடக்கவுரை - 4 அருமையாக விளங்குகிறது. ஆண்டவரே, எங்கள் புகழுரை உமக்குத் தேவையில்லை. நாங்கள் உம்மைப் புகழ்ந்துரைப்பதால் உமது மாட்சிமை ஏற்றம் பெறாது, எனினும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக நாங்கள் மீட்படையப் பயன்படுகின்றது. ஆம், இது ஒரு வியப்பான உண்மை, நாம் புகழ்ந்துதான் கடவுள் பெருமையடைய வேண்டு-மென்பதில்லை. அவர் தம்மிலே மாண்பு மிகுந்தவர், பெருமை நிறைந்தவர். நாம் அவரைப் புகழ்ந்து நன்றி செலுத்தும் போதெல்லாம் நாம்தாம் அவரது அருளையும் மீட்பையும் பெறுகிறோம். எனவே, கூடுதல் ஆர்வத்தோடு நாம் இறைப்புகழ்ச்சியில் ஈடுபடவேண்டும்.

### இறைப்புகழ்ச்சியின் நன்மைகள்

**1. மனமகிழ்வு :** இறைப்புகழ்ச்சியினால் மனதில் பெருமகிழ்வு உண்டாகிறது. ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. "என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது" (லூக் 1:47) என அன்னை மரியா மகிழ்ச்சியுடன் பாடினார். "உன் புகழைப் பாடுவது என் வாழ்வின் இன்பமையா, உன்னருளைப் போற்றுவது என் வாழ்வின் செல்வமையா" என்ற பாடலை எத்தனை முறை நாம் மனமுருகிப் பாடியுள்ளோம்.

**2. மனநிறைவு :** இறைவன் நம் வாழ்வில் செய்த நன்மைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து நன்றி சொல்கின்றபோது, நமது மனம் நிறைவடைகின்றது. போதும் என்று நினைக்கிறது. என் உயிரே ஆண்டவரைப் போற்றிடு, அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே (திபா 103: 1-13) என இறைவனின் நன்மைகளைப் பட்டியலிடும் திருப்பாடல் ஆசிரியரின் உள்ளம் அடையும் நிறைவை அத்திருப்பாடலைச் செபிக்கும் அனைவரும் அடையலாம்.

**3. அனைத்தும் நன்மைக்கே என்னும் மனநிலை:** இறைப்புகழ்ச்சி செலுத்தும் உள்ளம், அனைத்துக்கும் நன்றி சொல்லும் இதயம், என்ன நேர்ந்தாலும் அது நன்மைக்கே என எடுத்துக்கொள்ளும். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருங்கள். இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள். எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள் (1தெச 5:16-18) என்ற பவுலடியாரின் சொல் இதனை வெளிப்படுத்துகிறது. எனக்குத் துன்பம் விளைந்தது என் நன்மைக்காகவே, அதனால், உம் விதிமுறைகளை நான் கற்றுக்கொண்டேன் (திபா 119:71) எனத் திருப்பாடலாசிரியர் சொல்ல முடிந்ததும் இந்த மனிநிலையால்தான். இப்படி சிறப்பு மிக்க இறைப்புகழ்ச்சியை, நன்றியுணர்வை நமது அன்றாடச் செபத்தில் அதிகமாக இணைத்துக் கொள்வோமாக!

தொடரும்

## உதவி யாரிடம் இருந்து வரும் [தி.பா 121:1]



நமது வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள், வேதனைகள் வந்தாலும், உதவி வரும். அது ஆண்டவரிடமிருந்தே வரும். அந்த உதவியை யார் மூலமாவது நிச்சயம் நிறைவேற்றுவார்... நாம் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருந்தால்.

**"மலைகளை நோக்கி என் கண்களை உயர்த்துகின்றேன். எங்கிருந்து உதவி வரும்? விண்ணையும், மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவரிமிருந்தே உதவி வரும்" (தி.பா 121:1)**

பிரதிபலன் எதிர்பார்க்காத நல்ல நண்பர்களிடமிருந்தே உதவி வரும். உன் நண்பன் யார் என்று சொல், உன்னைப் பற்றி சொல்லுகிறேன் என்றார் அறிஞர் ஒருவர். உதவியை எதிர்பார்க்கும் நாம் உதவி செய்யவும் வேண்டும். குறைந்தது அந்த நல்ல மனமாவது வேண்டும்.

பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், பாசத்திற்கும், ஒழுக்கத்திற்கும் மனித நேயத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து, நமது வழி இறைவன் வழி என்பதை உணர்ந்து வாழ்ந்தால். எமக்கு உதவி ஆண்டவரிடம் இருந்து கட்டாயம் கிடைக்கும்.

# துன்பத் தீயில் கருகாத ரோஜா

## லீமா ரோஸ்



**"உங்கள் கண் உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதைப் பிடுங்கி எறிந்து விடுங்கள், இரு கண்ணுடையவராய் எரிநகரில் தள்ளப்படுவதை விட ஒற்றைக் கண்ணராய் நிலைவாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது" [மத். 18:9]**

ஆவணி 23

தென் அமெரிக்காவில் பெருநாட்டிலுள்ள லீமா நகரில் 1586ஆம் ஆண்டில் பிறந்தார். இவரது பெற்றோர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்கள். நடுத்தர வசதி படைத்தவர்கள். இவருக்குத் திருமுழுக்கின் போது இடப்பட்ட பெயர் இசபெல்லா. இவரது முகம் ரோஜா மலரை ஒத்திருந்ததால் பின்னர் இவருக்கு ரோஸ் எனப் பெயர் வழங்கலாயிற்று. இவள் குழந்தையாய் தொட்டிலில் கிடக்கும் பொழுது ஓர் அழகிய ரோஜா மலர் தொட்டிலில் விழுவதை தாய் கண்டபடியால் இந்தப் பெயர் கொடுக்கப்பட்டது என்று சொல்லுவர். தனது 11 வது வயதில் பேராயர் துரிபியோ உறுதிப்பூசுதல் கொடுத்தபோது ரோஸ் மரியா என்று பெயரை மாற்றினார்.

பாவிகள் மனந்திரும்பும்படியாக இவள் அடிக்கடி இறைவேண்டல் செய்வாள். கடினமாக உழைப்பார், கண்ணீர் சிந்தி இறைவனின் இரக்கத்திற்காக மன்றாடுவாள். தன் தந்தையின் தோட்டத்தில் ஒரு சிறு குடிசை அமைத்து அவரும் அவரது சகோதரரும் சேர்ந்து இறைவேண்டல் செய்வர். பிறர் பார்க்காத வேளையில் தலையில் முள்முடி, தவ உடை இவற்றைப் பயன்படுத்தினார்.

ஆண்டவர் பட்டபாடுகளைப் பற்றி அடிக்கடி தியானிப்பாள். உள்ளத்தின் வேதனைகளையும் உடலின் வலிகளையும் சகிப்பது இவருக்கு எளிதாயிற்று. "இனிய இயேசுவே உமது திருச்சித்தத்தின்படியே எனது வேதனைகளையும் அதே நேரத்தில் உம்மீது எனக்குள்ள அன்பையும் அதிகரியும்" என்பார். வேதனையைப் பொறுமையோடு சகிப்பார். தானே தவமுயற்சியை மேற்கொண்டு செய்து வருவாள். தனது இளம் வயதிலேயே தன் கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்தாள். புனித சியன்னா கத்தரீனாளை முன் மாதிரியாகக் கொண்டு தவவாழ்வு நடத்தினார்.

நல்ல அழகி, மற்றவர்களுக்கு இதனால் இடறல் ஏற்படக்கூடாது என்று நினைத்து மிளகுத்தூள் கொண்டு தனது முகத்தைத் தேய்த்து அழகற்றவராக்கிக் கொண்டார். ஒரு பெண் இவருடைய விரல்களும் தோல் நிறமும் மிக அழகாக இருக்கின்றன என்று சொன்னதுதான் தாமதம், விரல்களையும், உடலையும் சுண்ணாம்பினால் தேய்த்துக் கொண்டார். அதன் விளைவாக ஒருமாத காலமாக ஆறாத காயங்களால் உடை உடுத்திக் கொள்ளவும் இயலாமற் போயிற்று.

இச்சூழலில் பெற்றோர் துணிகரமாக கரங்களினால் ஆரம்பித்த வியாபாரம் பெரும் நஷ்டப்-பட்டதால் வறுமைப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டனர். ரோஸ் பகல் முழுவதும் தோட்ட வேலையும், இரவில் தையல் வேலையும் மாற்றி மாற்றி பார்த்து ஓரளவு குடும்பத்தைக் காப்பாற்றினார்.

10 ஆண்டுகள் திருமணத்திற்கு இசையாமல் போராட வேண்டியதாயிற்று. அவர்களது திட்டத்தை முறியடிக்க கற்ற வார்த்தைப்பாடு எடுத்துக்கொண்டு தனது இருபதாவது வயதில் புனித தொமினிக் மூன்றாம் சபையில் சேர்ந்து கொண்டார்.

பகல் வேளையில் ஏழைகளுக்கு உதவுவதிலும் நற்கருணை ஆராதனை செய்வதிலும் நேரம் செலவிடுவது உண்டு. அவரது ஆன்மகுரு தினமும் திருவிருந்தில் பங்குபெற அனுமதி வழங்கியிருந்தார்.

நம் ஆண்டவர் பலமுறை இவருக்குக் காட்சி தந்து பரவச நிலையில் பலமணி நேரம் அமைதியிலும் மகிழ்ச்சியிலும் திளைக்கச் செய்வதுண்டு. அதனால் தனது தூய்மையைக் காத்துக் கொள்வதிலும் நம்பிக்கைக் குறைவிலும் ஏற்பட்ட போராட்டங்களை வெல்ல முடிந்தது. தான்பட்ட அவமானங்களையும் தவ ஒறுத்தல்களையும் பாவிகளுக்கும் உத்தரிக்கும் ஸ்தல ஆன்மாக்களுக்கும் இறைவனுக்கு உண்டாகும் நிந்தைகளுக்கும் பரிகாரமாக ஒப்புக் கொடுப்பதுண்டு.

பல அருட்கொடைகள் இவர்மீது இறைவன் இந்நாட்களில் பொழிந்தாலும் 15 ஆண்டுகளாகத் தம் தோழிகளிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் ஏளனத்திற்கு இலக்கானார்.

இவர்தம் வாழ்வில் அழுத்திக் கூறியசிந்தனை:

**"நமதாண்டவர், கரங்களில் தராசு ஒன்றினைக் கண்டேன். மிகக் கவனமாக நமதாண்டவர், மனிதர்களுக்கு அன்பும் வேதனைகள், சோதனைகளின் அதே அளவுக்குத் தக்கபடி அருளாசீரையும் பொழிகிறார். எனவே வான் வீட்டில் நம் சிலுவைகளுக்குத் தக்கபடி அருள் பொழிவு காத்திருக்கிறது. இதைப் புரிந்துகொண்டால் போதும் இவ்வுலகச் சிலுவைகளை மகிழ்ச்சியுடன் ஏற்போம்".**

தனது இல்லத்தில் தனியாகத் தனக்கென ஒரு குடிசை தயாரித்து வீடிழந்த சிறுவர் சிறுமியர்களையும், நோயாளிகளையும் கைவிடப்பட்ட முதியவர்களையும் பேணி வந்தார். பெரு மாநிலத்தில் இத்தகைய தொண்டு தான் பிற்காலத்தில் பெரிய அளவில் எழுந்த தொண்டுகளுக்கு அடிக்கல்லாக அமைந்தது.

கடைசி மூன்று ஆண்டுகள் வேறோர் வீட்டில் தங்கியிருக்கும்போது கடுமையாக நோய்வாய்ப்பட்டார். இறுதிவரை இறைவா எனது துன்பங்களைப் பெருக்கும். அதே வேளையில் எனது ஆன்மாவில் உமது அன்பு பற்றி எரியச் செய்யும் என்றே செபித்தார். தனது 31ஆவது வயதில் இவர் இறந்தபோது நகரின் அதிகாரிகளும் பிரபுக்களும் மாற்றி மாற்றி இவர் உடலை கல்லறைக்குத் தூக்கிச் சென்றனர். இவர்தான் அமெரிக்காவில் பிறந்து வாழ்ந்த முதல் புனிதர்.

1617ஆம் ஆண்டு ஆவணி 24ம் திகதி இவர் இறந்த பிறகு பல புதுமைகள் தொடர்ந்து நடந்தன. இவர் திருத்தந்தை 10ஆம் கிளமெண்ட் என்பவரால் 1671ஆம் ஆண்டு புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். இவர் இலத்தின் அமெரிக்காவிற்கும் பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கும் பாதுகாவலி என்று அறிவிக்கப்பட்டுள்ளார்.

**சிந்தனைக்கு:**

1 **காணுகின்ற அனைத்திற்கும் மனிதன் தன்னை அடிமைப்படுத்தி வாழும் இக்காலத்தில் இத்தகைய தியாகமும் ஒறுத்தலும் சுதந்திர உணர்விற்கு இட்டுச் செல்லும். இதேப் போன்ற சூழ்நிலையை நம்மால் நினைத்துப் பார்த்து ஏற்றுக்கொள்ள இயலுமா?**

2. **இவ்வாறு உலகிற்கு உரியவற்றை மறுப்பது நம்மை சிலுவையின் அடிக்கு இட்டுச் செல்லும். சிலுவை விண்ணக வாயிலுக்கு வழிநடத்தும் (தூய ஜான் வியான்னி)**

## 01 மரண தண்டனை...

பிரஜைகளுக்கு தகுந்த பாதுகாப்பை வழங்குவதற்கான தேவைப்பாடும் அதிகரித்துள்ளதோடு குற்றவாளிகளுக்கு தம் குற்றத்தை உணர்ந்து, மனந்திரும்பி வாழ்வை மாற்றிக் கொண்டு விடுதலை பெற்று நல்வழிக்கு சென்று வாழ்வதற்கான முக்கியத்துவமும், வாய்ப்பும் அத்தியவசியமான விடயம் என்பதையும் குறிப்பிடுவது அவசியமானதாகும்."

"இதற்கிணங்க கத்தோலிக்கத் திருச்சபையின் நிகழ்கால நிலையும் மற்றும் படிப்பினையாகவும் அமைவது நற்செய்தியில் நிலைத்திருந்து, மரண தண்டனையை எக்காரணத்திற்காகவோ ஏற்றுக்கொள்ள முடியாது என்பதாகும். இது மனித மாண்புக்கு எதிராக அமைவதோடு, திருச்சபையானது (மரண தண்டனையை) இதனை உலகம் பூராகவும் இல்லாதொழிப்பதற்கு விழிப்புணர்வுடன் செயற்படுகின்றது."

எமது திருத்தந்தை போதைப்பொருள் எனும் விடயத்தை எடுத்து நோக்குவது மனித அடிமைத்தனத்தின் முற்கால நிலையாகவும், புதிய புண்ணாக மற்றும் சமூகத்தை சீரழிக்கும் நஞ்சாகவும்" இருக்கின்றது எனும் கோணத்தினாலாகும். இதனோடு நாம் போராடவேண்டும். இதனை முழுமைாக இல்லாதொழிக்க வேண்டும். இப்போது இது "போதும் எனக் கூறுவதற்காக காலம் வந்துவிட்டது" எனத் தெரிவிக்கின்றார்.

எனவே இந்நிலைக்கு உள்ளாகித் தவிப்பவர்-களை இந்நிலையில் இருந்து மீட்டெடுப்பதற்கும், இல்லாதொழிப்பதற்கும் செயற்பாடுகளை மேற்கொள்வ-தற்கும் கல்வியகங்களுக்கும், நிறுவனங்கள் மற்றும் மதத் தலைவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், பொதுநிலையினருக்கும், அரச சார்பற்ற தேசிய மற்றும் வெளிநாட்டு அமைப்புக்களுக்கும் நிறைவேற்று அதிகாரமிக்க சட்டத்துறையினர்களிடமும் நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

அண்மைக்காலத்தில் தண்டனைத் தீர்ப்புப் பெற்று சிறைக்கைதியாக்கப்பட்ட குற்றவாளிகள் மூலம் தொடர்ச்சியாக சிறைக்கைதியாக, இருந்த கைதிகள் மேற்கொண்ட போதைப்பொருள் நடவடிக்கைகளை முற்றாக இல்லாதொழிக்க சட்டத் துறையினர் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதற்கான பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும் எடுத்தே ஆக வேண்டும்.

✠ **மேதகு கலாநிதி J. வின்ஸ்டன் S. பர்னாந்து** S.S.S
தலைவர்,
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை
ஆயர், பதுளை மறைமாவட்டம்

✠ **மேதகு கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை**
உப தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை
ஆயர். மட்டக்களப்பு மறைமாவட்டம்

✠ **மேதகு கலாநிதி வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை**
செயலர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை
ஆயர், சிலாப மறைமாவட்டம்

✠ **அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை**
கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர்

✠ **மேதகு கலாநிதி வியானி பர்னாந்து ஆண்டகை**
ஆயர், கண்டி மறைமாவட்டம்

✠ **மேதகு கலாநிதி ஹெரல்ட் A. பெரேரா ஆண்டகை**
ஆயர், குருநாகல் மறைமாவட்டம்

✠ **மேதகு கலாநிதி நோபர்ட் M அந்திராடி** (O.M.I) **ஆண்டகை**
ஆயர், அநுராதபுரம் மறைமாவட்டம்

✠ **மேதகு கலாநிதி கிளிட்டஸ் சி. சந்திரசிறி பெரேரா** (O.S.B) **ஆண்டகை**
ஆயர், இரத்தினப்புரி மறைமாவட்டம்

✠ **மேதகு கலாநிதி றேமண்ட் K. விக்கிரமசிங்க ஆண்டகை**
ஆயர், காலி மறைமாவட்டம்

15

✠ **மேதகு கலாநிதி நொயல் C. இம்மானுவேல் ஆண்டகை**
ஆயர், திருகோணமலை மறைமாவட்டம்

## 01 ஒவ்வொரு குழந்தையும்...

கௌரவம் இருந்தாலும் அதில் பிரயோசனம் கிடையாது. காரணம் பிள்ளைகளே அவர்களின் முழு சொத்தும் பலமும். இந்த குழந்தைகளை எத்தனை கோடிகள் கொடுத்தாலும் பெற்றுக்கொள்ள முடியாது. ஒரு பெரிய குடும்பம் அதாவது ஒரு குடும்பத்தில் அநேக பிள்ளைகள் அக்குடும்பத்தினருக்கும், கோயிலுக்கும், ஓர் நாட்டுக்கும் கூட ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். ஆகவே இன்றைய இந்த திருவிழாவில் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வந்திருக்கின்றார்கள்.

எமது நாட்டில் கருக்கலைப்பு என்பது ஒரு பெஷனாக, ஒரு சாதாரண செயலாக மாறிவிட்டது. கருக்கலைப்பு ஒரு பெரிய பாவம், இன்று பிறக்கும் பிள்ளைகள் கூட வளர்ந்து தவறான முறையில் வழிநடத்தப்படுகிறார்கள். இன்று குடும்பங்களில் பிள்ளைகள் பெற்றோருக்கு ஒரு பாரமாக தெரிகிறார்கள். காரணம் குடும்பத்தில் கணவனும் மனைவியும் வேலைக்கு செல்கிறார்கள். இதனால் பிள்ளைகளின் பராமரிப்பில் அக்கறைக்குறை ஏற்படுகிறது. பணம் தேடுவதில் கவனம் செலுத்தினால் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்க முடியாது என்று கூறினார்.

இத்திருவிழாவில் எமது நாட்டில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். அவர் கத்தோலிக்க திருச்சபையின், சமாதானம், சமத்துவத்தை பார்க்கும்போது அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மற்றும் இவ்வாண்டு இத்திரு-விழா திருப்பலி அருட்தந்தை எமிலியானுஸ் பிள்ளை அடிகளார், பரிபாலகர் அவரது இறுதி வருட திருவிழா-வாக இத்திருவிழா அமைகிறது. ஆகவே இவ்வருட திருவிழாவில் புதிய பரிபாலகராக நியமனம் பெற்ற அருட்தந்தை பப்பி சூசை அவர்களை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை இத்திருப்பலியில் வரவேற்றார். இத்திருவிழாவில் அனேக குருக்கள், துறவிகள் கலந்து சிறப்பித்தனர்.

**தகவல் மற்றும் படங்கள்: T. சுனில் பர்னாந்து, ஹோஷான் பிரதீப்**

## 01 நோயுற்றோரை...

நீர்கொழும்பு அரச வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவு சத்திர சிகிச்சை செய்யும் வைத்தியரான துஷாரா அல்மேதா அவர்கள் அருட்பணி அவர்களுக்கும், கர்தினால் ஆண்டகைக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

சீதுவை "சுபுவத் அரண" நடுநிலையத்தின் வழிபாடுகளில் பங்கேற்கும் பக்தர்கள் இவ் கட்டிட புணரமைப்புக்கு பண உதவி வழங்கி பங்களித்ததுடன் இந்நிகழ்விலும் கலந்து கொண்டனர். நீர்கொழும்பு வலைய இயக்குர் அதிவண. அருட்பணி சில்வான் த குரூஸ், நீர்கொழும்பு வைத்தியசாலை கலைமானி அருட்பணி. பிரசன்ன திலுக் அவர்கள் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து**

## 01 2020ல் திருத்தந்தையின்...

திருத்தந்தையின் செபக்கருத்துக்கள் குறித்து, விசுவாசிகளின் ஆலோசனைகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. "செபத்தின் திருத்தூதுப்பணி" என்ற பெயரில் இயங்கி வரும் இயேசு சபையினரின் ஓர் அமைப்பு, ஒவ்வொரு மாதமும் திருத்தந்தை வெளியிடும் செபக்கருத்துக்களை உலகிற்கு அறிவித்து வருகிறது. 2019ம் ஆண்டுக்குரிய கருத்துக்கள் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், 2020ம் ஆண்டில் திருத்தந்தை எந்தெந்த கருத்துக்காக செபிக்க வேண்டும் என்பது குறித்த பரிந்துரைகளை மக்கள் வழங்குமாறு, இவ்வமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாண்டு ஆகஸ்ட் 15ம் தேதிக்குள், விசுவாசிகள் அளிக்கும் கருத்துக்கள் திரட்டப்பட்டு, அவை, தலைமையகத்தில் தெரிவு செய்யப்படும் என்றும், பின்னர், அக்கருத்துக்கள் வத்திக்கானுக்கு அனுப்பப்பட்டு, அங்குள்ளோரின் தெரிவுகளுக்கு பின்னர், இறுதியில் திருத்தந்தையால் முடிவு செய்யப்படும் என்றும் திருத்தந்தையின் செபக்கருத்துக்களை ஒருங்கிணைக்கும் அலுவலகம் கூறியுள்ளது. (ICN)

## 01 மடுத்திருத்தல...

இந்திய மகா கொமிசாரிஸ் டரன்ஜித் சிங் சந்து அவர்கள், சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ வெளிவிவகார அமைச்சின் செயலாளரான எசல வீரகோன் அவர்கள் இதில் கைச்சாத்திட்டனர்.

மடுத்திருத்தல பரிபாலகர் அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை (துணைவர்) இந்திய தூதுவர் மகா கொமிசாரிஸ் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ வெளிவிவகார அமைச்சர் ஜோன்.ஏ.ஈ. அமரதுங்க அவர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினார்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து**

## 02 இரத்தினபுரி...

ஒன்றை நிர்மானித்து அதில் இலங்கை மாதாவின் புதிய சுரூபம் ஒன்றை இருத்தி வைத்தார்கள். புதிய சுரூபத்தையும், புதிய சுரூபத்தை ஆயர் ஆசீர்வதிப்பதையும் படத்தில் காணலாம். ஆலயத்தை எதிர்நோக்கி காலடி எடுத்து வைக்கும் போது அன்னையின் சுரூபம் எமக்கு ஒரு பயத்தையும், பக்தியையும் ஏற்படுத்துகின்றது. புனித இராயப்பர் சின்னப்பர் பேராலயத்துக்கு மேலும் கம்பீரத்தை ஏற்படுத்துகின்றது. ஆலயத்தை அலங்கரிக்கின்றது.

**தகவல் : மேரி இருதயநாதன், (மறையாசிரியர்) பேராலயம், இரத்தினபுரி**

## 03 உன் நம்பிக்கை உன்னை...

போதகரை ஏன் இன்னும் தொந்தரவு செய்கிறீர்?" இது மக்கள் கூட்டத்தின் அவநம்பிக்கையின் வெளிப்பாடு. ஆனால் அவர்களுக்குத் தெரியாது கடவுள் இறந்தோரின் கடவுள் அல்ல, வாழ்வோரின் கடவுள் என்று.

ஆம், நம் இறைவன் இறந்தோரின் கடவுள் அல்ல, அவர் வாழ்வோரின் கடவுள். இதைத்தான் விடுதலைப் பயண நூலில் ஒரேப் மலையில் மோசேயுக்கு காட்சி கொடுத்த யாவே இறைவன் கூறுகின்றார். "இருந்தவர், இருக்கின்றவர், இருக்கப் போகின்றவர் நாமே".

ஆம், இயேசு சாவை தன் சிலுவை மரணத்தால் முற்றிலும் வென்று, நித்தியத்திற்கும் நம்மோடு உயிர்த்த ஆண்டவராகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றார். எனவே, இயேசு யாயீர் வீட்டுக்கு சென்றபோது அம்மக்கள் அவநம்பிக்கையோடு இருப்பதைப் பார்த்து அவர்கள் இறைவனின் அதிசயத்தை, அற்புதத்தைக் காணக்கூடாது என்று அவர்களை வெளியே அனுப்பிவிடுகின்றார்.

ஆம், எங்கு நம்பிக்கையில்லையோ அங்கு அற்புத செயல்களும், அதிசயங்களும் நடைபெறுவதில்லை. ஆனால் இயேசு அந்த யாயீர் என்பவரின் நம்பிக்கையின் பொருட்டுதான் அச்சிறுமிக்கு உயிர் கொடுத்து அதிசயத்தை நிகழ்த்தினார்.

இங்கு இன்னொரு உண்மையும் நமக்குப் புலனாகிறது. அதாவது வல்ல செயல்கள் மூன்று வகையில் நடைபெறுகின்றன.

1. ஒருவரின் தனிப்பட்ட நம்பிக்கையின் பொருட்டு (உதாரணம்) இரத்தப்போக்கினால் அவதியுற்று குணம்பெற்ற பெண்.
2. அடுத்தவரின், சூழ்ந்திருப்போரின் நம்பிக்கையின் பொருட்டு (உதாரணம்) யாயீர் என்ற அந்தத் தலைவரின் நம்பிக்கையின் பொருட்டு
3. இறைவனின் தனிப்பட்ட அக்கறை, கரிசனை இரக்கத்தின் பொருட்டு யாரும் கேட்காமலே நடைபெறுவது. (உதாரணம்) நயீம் பட்டணத்து விதவை தாயின் இறந்த மகனுக்கு உயிர்கொடுத்தது.


ஒரு மாலை நேரம் சிறு பையன் ஒருவன் பட்டம் பறக்கவிட்டு வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருந்தான். பட்டம் கட்டப்பட்ட கயிற்றை அவன் தன் கையால் இறுக்கிப் பிடித்துக்கொண்டு அவன் மேலும் கீழும் அசைத்து அதைப் பறக்கவிட்டு மகிழ்ந்துகொண்டிருந்தான். அப்போது அவ்வழியே சென்ற பெரியவர் ஒருவர், "என்ன தம்பி செய்துகொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அவன், "பட்டம் பறக்கவிட்டுக் கொண்டிருக்கின்றேன்" என்றான். அதற்கு அவர் "நான் எந்தப் பட்டமும் பறப்பதைப் பார்க்கவில்லையே" என்றார். அதற்கு பையன் "மேலே அண்ணார்ந்து பாருங்கள். அது உயரே பறந்துகொண்டிருக்கிறது" என்றான். "உனக்கு எப்படி தெரியும் மேலே பறந்துகொண்டிருப்பதுதான் உன்னுடைய பட்டம் என்று". அதற்கு அவன் "நான் என் கையில் பிடித்துக் கொண்டிருக்கின்ற அப்பட்டத்தில் கட்டப்பட்ட கயிற்றிலிருந்து உணர்கிறேன். நான் கயிற்றை மேலும், கீழும் அசைக்க அது மேலும் கீழும் பறக்கிறது" என்றான்.

### சிந்தனைக்கு

ஆம், நமது நம்பிக்கையும் அந்தக் கயிற்றைப் போலத்தான். கயிற்றைப் பிடித்துக்கொண்டிருப்பவர் இறைவன். பட்டமாகப் பறந்து கொண்டிருப்பது நாம். நமக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு நம்பிக்கை அற்ற அந்த கயிறுதான். கயிறு அறுந்துவிட்டால் பட்டம் அதை வைத்திருப்பவர்களை விட்டு பறந்து விடுவது போல நம்பிக்கை என்னும் கயிறு அறுந்துவிட்டால் நாமும் இறைவனை விட்டுப் பிரிந்துவிடுவோம்.

எனவே, நம்பிக்கைதான் நம் வாழ்வு. நம்பிக்கைதான் நம்மை இறைவனோடு இணைப்பது. நம்பிக்கைதான் நம்மை நோயினின்றும், சாவிலிருந்தும் குணமாக்குவது, உயிர்ப்பிப்பது.

**நம்பிக்கை கொள்வோமா? நலம் பெறுவோமா?**

## மணமகள் தேவை

கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த, கொழும்பில் வசிக்கும், பட்டதாரி, முன்னனி வகிக்கும் ஸ்தாபனத்தில் உயர் தொழில் புரியும், 5' 6", 32வயது, அழகும், நல்ல பண்பும் நிறைந்த மணமகனுக்கு மணமகள் தேவை. (N2531)

**தொடர்பு கொள்ளும் எண் 0712724383, 0773290023**


## 02 இரத்தினபுரி மறைமாவட்டத்தில்...

செடக் நிறுவனத்தின் தேசிய இயக்குனர் அருட்பணி. மகேந்திர குணத்திலக அடிகளாரும் கலந்து கொண்டனர். பிரதம பௌத்த பிக்கு வணக்கத்திற்குரிய சுதர்ம கொட்டபொல தேரோ அவர்களும் இரத்தினபுரி மறைமாவட்ட அருட்தந்தை யாக்கலும் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். இரத்தினபுரி செதமினி நிறுவனத்தின் அங்கத்தவர்களும், அரச உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். சமாதான பாதயாத்திரை புனித லூக்காஸ் கல்லூரியில் இருந்து பதாதைகளுடனும் சுலோகங்கள் ஏந்திய வண்ணம் பிரதான பாதை வழியாக இரத்தினபுரி பிரதான நகரமண்டபத்தை அடைந்தது. கண்காட்சியும், நடனங்களும், வீதி நாடகங்களும் இடம்பெற்றன. குடும்ப தின விழா நகர மண்டபத்தில் நடைபெற்றது. ஆயர் தம் உரையிலே செத்மினி திட்டங்கள் செயல்கள் அனைத்தும் இணையத்தளத்தினூடாக தேசிய மட்டத்தின் அளவு சென்றுள்ளது பற்றி நன்றி தெரிவித்தார்.

இரத்தினபுரி செத்மினி இயக்குனர் அருட்தந்தை அனைவரையும் வரவேற்பதோடு "செத்மினி" நிறுவனத்தின் நோக்கத்தையும் செயல்திட்டங்களையும் எடுத்துக்கூறினார். இரத்தினபுரி கரித்தாஸ் ஆரம்ப இயக்குனரும், 10 வருடகாலமாக தேசிய "செடக்" நிறுவனத்தில் பணிபுரிந்ததன் காரணமாக "பொன்னாடை" போர்த்தி வரவேற்கப்பட்டார். கடந்த காலங்களிலே செத்மினி நிறுவனத்தின் இயக்குனர்களாக பணிபுரிந்த அருட்பணி. டட்லி அத்தனாயக்க, அருட்பணி. சார்ளஸ் டகோல், அருட்பணி. டெக்ஸி திஸ்ஸநாயக்க ஆகியோரையும் பாராட்டி பரிசில்கள் வழங்கப்பட்டது.

**தகவல் : மேரி இருதயநாதன், (மறையாசிரியர்) பேராலயம், இரத்தினபுரி**

## 04 அரசியான அன்னை...

திருமுழுக்கில் கிறிஸ்துவுக்குச் சொந்தமான நாம் அவரது அரசுப்பணியில் பங்குபெற்று அவரது அரசை இவ்வுலகில் பரப்புவதற்கு அழைக்கப்பட்டுள்ளோம். இதை நம் ஆன்மிக வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் போராட்டங்களின் மத்தியில் செயலாக்க முடியும். ஏனெனில் அப்போது பாவத்தின் ஆட்சியை முறியடித்து அன்புக்கும், நீதிக்கும் பணிசெய்ய நம்மை அர்ப்பணிக்கின்றோம் (உரோ 6:12).

கிறிஸ்தவ மக்களின் அரசப்பண்பைப்பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருச்சபை பற்றிய கோட்பாட்டு விளக்கத்தில் கூறுவதாவது: "தம் சீடர்களும் அரச சுதந்திரம் கொண்டவர்களாய், தன்னல மறுப்பாலும், தூய வாழ்வாலும், தம்மில் பாவத்தின் ஆட்சியை வெல்லவும் (உரோ 6:12) தம்மை அடுத்திருப்போரில் கிறிஸ்துவுக்குப் பணிசெய்து, மனத்தாழ்ச்சியுடனும், தாராளப் பண்புடனும் தங்கள் சகோதர சகோதரிகளையும் கிறிஸ்துவிடம் கூட்டிவரவுமே இந்த அதிகாரத்தை (அரசுரிமையை) அவர்களுக்கு வழங்கினார். கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதே ஆள்வதாகும்" (திருச்சபை 36).

இதிலிருந்து இன்று நமது அரசப் பணிகள் தன்னல மறுப்பிலும், ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்தும் தூய வாழ்விலும், பாவத்தின் ஆட்சியை (நாட்டத்தை) வெல்வதிலும், தாராளப் பண்புடனும், தாழ்மையுடனும் பிறருக்குப் பணி செய்வதிலும் அடங்கியிருக்கிறது என உணரமுடிகிறது. "எனவே கிறிஸ்தவர்கள் படைப்பனைத்தின் உள்ளியல்பையும் மதிப்பையும், அவை எவ்வாறு கடவுளின் புகழ்பாட ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிய வேண்டும். உலகம் கிறிஸ்துவின் மனப்பான்மையில் ஊறி, நீதியிலும், அன்பிலும், அமைதியிலும் தன் குறிக்கோளைச் சிறந்த முறையில் அடையும் வண்ணம் இன்னும் தூய்மைமிக்க வாழ்வு வாழ உலக அலுவல்களின் மூலம் ஒருவொருக்கொருவர் உதவ வேண்டும். இந்தப் பணியை எங்கும் நிறைவேற்றுவதிலே பொதுநிலையினர் முதலிடம் பெறுகின்றனர்" (திருச்சபை 36).

அரசியான தூய அன்னை மரியாவின் விழா இவற்றையெல்லாம் வாழ்வியலாக்க நம்மை அழைக்கின்றது. இவற்றை நிறைவேற்ற அன்னை மரியா துணைபுரிவாராக.

---

✠ **மேதகு கலாநிதி யஸ்ரீன் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
ஆயர், யாழ்ப்பாணம் மறைமாவட்டம்

✠ **மேதகு கலாநிதி. F.L. இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை**
ஆயர் மன்னார் மறைமாவட்டம்

✠ **மேதகு கலாநிதி மெக்ஸ்வல G. சில்வா ஆண்டகை**
துணை ஆயர் கொழும்பு உயர் மறைமாவட்டம்

✠ **மேதகு கலாநிதி J.D. அந்தனி ஆண்டகை**
துணை ஆயர் கொழும்பு உயர் மறைமாவட்டம்



# தொழுநோய்!

தொழுநோய் தொன்றுதொட்டு மனிதர்களை அச்சுறுத்தும், அருவெறுக்கும் நோயாகக் கருதப்பட்டு வருகிறது.

தொழுநோயாளர்களை ‘குஷ்டரோகிகள்’ எனும் சுடு சொல்லால் குறிப்பிட்டு அவர்களைத் தீண்டத்-தகாதவர்கள், பெண்ணாசையால் நோய்க்காளானவர்கள் என்றும் அவர்களைச் சபித்தனர்.

பகுத்தறிவு சிந்தனைவாதியாக வாழ்ந்த ஒரு நடிகர் தொழுநோயாளியாக நடித்து மக்களையும் இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்தார். அது விஞ்ஞான வளர்ச்சியில் அதிக முன்னேற்றம் காணாத காலம். அந்தத் திரைப்படம் பெண்ணொழுக்கம் கெட்ட மனிதர்களை தொழுநோய் பீடிக்கும் என்ற கருத்தைச் சொல்லியிருந்தது. மருத்தவ முன்னேற்றங்கள் அந்தக் கதை தவறான கருத்தைச் சொல்வதாக இப்போது விளக்குகிறது. உண்மையும் அதுதான்.

தொழுநோய் பற்றிய அறிவியல் கண்டுபிடிப்புகள் தவறான நம்பிக்கைகளை அகற்றி வருகின்றது. அவற்றை அறிந்து தொழுநோய் பற்றிய தவறான கருத்துக்களை நீக்கி தொழுநோயாளர்களை கடவுளின் பிள்ளைகளாகக் கருதி, அன்பு செலுத்த வேண்டும் என்பதை உணர்த்தியவர் அன்னை தெரசா.

## தொழுநோயின் அறிகுறிகள்

தொழுநோயை உருவாக்கும் கிருமியின் பெயர் மைக்கோ பாக்டீரியம் லெப்பே. 1873 ஆம் ஆண்டு நார்வேயைச் சேர்ந்த டாக்டர் ஹான்சன் இதைக் கண்டுபிடித்தார்.

தோலின் நிறம் சிவப்பு, பழுப்பு, செம்பழுப்பு நிறத்தில் தோன்றும். தொழுநோய் வருவதற்கு இந்தத் தேமல் நோய்தான் முன்னடையாளம். பென்சில் அல்லது பேனா முனையை இந்த தேமல்மீது வைத்து அழுத்தினால் உணர்ச்சியில்லாமல் இருப்பது நோயின் ஆரம்பம் என உணர வேண்டும். அப்பகுதியை இரு விரல்களால் கிள்ளி இழுத்துப் பார்த்தால் அப்பகுதித் தோல் சற்றுத் தடிப்பமாகக் காணப்படும். காதின் ஓரப் பகுதியும், கீழ் பகுதியும் தடித்துக் காணப்படும்.

இந்த வகைத் தொழுநோய் லெப்ரோ மேட்டஸ் லெப்ரஸி (Lepromatois Lepprosy). இது பிறருக்குத் தொற்றும் வகையைச் சேர்ந்தது. மேற்சொன்னவற்றில் ஏதாவது ஓர் அறிகுறி தோன்றினாலும் மருத்துவரிடம் செல்ல வேண்டும். தொடக்கத்திலேயே முறையான சிகிச்சை பெற்றால் நல்லது.

1. நோய்கள் விரைவில் குணமாகும்.
2. நோய் காரணத்தால் விரல்கள் மடங்கிப் போவது, காலில், பாதங்களில் புண் வருவது, பார்வை பறிபோவது, மற்றும் பக்க விளைவுகளும் தடுக்கப்படும்.
3. பிறருக்கும் வராத வகையில் முதலிலேயே கிருமிகள் அழிக்கப்படும்.

இப்போதைய மருத்துவப்படி நோய் தேமல் வடிவில் வரும்போதே குணப்படுத்தி விடலாம். ஐந்து இடங்களில் தேமல் இருந்தால் ஆறு மாதங்கள் தொடர்ந்து மருந்து சாப்பிட வேண்டும். தேமல்கள் அதிகமாக இருந்தால் 12 மாதங்கள் தொடர்ந்து சிகிச்சை பெறவேண்டும்.

## ஊனத்தைத் தடுக்க....

ஊனம் கை, கால்கள், மூக்கு போன்ற பகுதிகள் இருந்தால் மருந்து மூலமும், பயிற்சிகள் மூலமும் குணப்படுத்தலாம். ஆறு மாதத்திற்கு மேற்பட்டிருந்தால் முடநீக்கப் பயிற்சிகளும், மருந்து மாத்திரைகளும் எடுக்க வேண்டும். சில ஊனங்களை அறுவைச் சிகிச்சை வழியாகவும் குணப்படுத்தலாம். தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகள் தென்பட்டால் வெட்கப்படாமல் மருத்துவரை அணுக வேண்டும். பிறர் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவரை மருத்துவர்களிடம் அழைத்துச் செல்ல வேண்டியது நம் கடமை என்பதை உணர வேண்டும்.


தொழுநோயாளரைத் தொட்டுக் குணப்படுத்திய ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம், அவர் வழியில் தொழுநோயாளருக்கு உதவுவோம்.

# குழந்தையின் காது பராமரிப்பு...!



குழந்தையின் காதுகள் மிகவும் மிருது-வானவை. எனவே குழந்தைகளின் காதுகளைப் பாதுகாப்பதில் பெற்றொர் தனிக்கவனம் செலுத்த வேண்டும். அந்தவகையில் குழந்தைகளின் காது பராமரிப்பில் செய்ய வேண்டியவை, செய்யக் கூடாதவைக் குறித்து இப்போது பார்க்கலாம்.

## சுத்தப்படுத்தும்போது...!




காதுகளைச் சுத்தப்-படுத்துகிறோம் என்ற பெயரில் குழந்தையின் காதுகளில் பட்ஸ், ஊக்கு போன்றவற்றை நுழைக்காதீர்கள்.



காதுகளைப் பராமரிக்க இயல்பாகவே சிபம் என்ற மெழுகு போன்ற திரவம் காதுகளில் சுரக்கும். அதனை அழுக்கு என்று தவறாக புரிந்துகொண்டு சுத்தபடுத்தி விடாதீர்கள். காதுகளின் வெளிப்புறத்தைமட்டும் மாதம் ஒருமுறை தண்ணீர் ஊற்றி சுத்தப்படுத்துவது நல்லது.

## பூச்சி நுழைந்துவிட்டால்...?




குழந்தையின் காதுகளில் ஏதேனும் சிறிய பூச்சி சென்றுவிட்டால், சுத்தமான எண்ணெய்யை அவர்களின் காதுகளில் ஊற்றி, முதலில் அந்தப் பூச்சியைச் செயலிழக்கச் செய்யுங்கள். அதன் பின்னர் காது-மூக்கு-தொண்டை சார்ந்த மருத்துவரை அணுகி, பூச்சியை எடுத்துவிடுவது நல்லது. எக்காரணம் கொண்டும் சூடான எண்ணெய், தண்ணீரை காதில் ஊற்றாதீர்கள்.

## தண்ணீர் ஊற்றாதீர்கள்...!



குழந்தைகள் காதில் பட்டாணி, காய்கறிகள் போன்று எளிதில் நீரில் ஊறக்கூடிய பொருளை நுழைத்துவிட்டால், எக்காரணம் கொண்டும் காதுகளில் தண்ணீர் ஊற்றாதீர்கள். அவை தண்ணீரில் ஊறி வெளியே எடுக்க முடியாத நிலைக்குப் போய்விடலாம். எனவே உடனே மருத்துவரை அணுகுவதே நல்லது.



அதேபோல காதில் சீழ் வடிவதை சாதாரணமாக எடுத்துக்கொள்ளாதீர்கள். அதற்கும் டாக்டரை அணுகி சிகிச்சை பெற வேண்டியது அவசியம்.




# நாய்க்கடி!



மனிதன் கடைசிக் காலத்தில் நம்பக்கூடியவை என மூன்றைக் குறிப்பிடுவார்கள். அவை வயதான மனைவி, தான் வளர்த்த நாய், சேமிப்பிலுள்ள பணம்.

மனிதன் கூடி வாழும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டபின்தான் மனைவி என்கிற உறவு பிறந்தது. பண்டமாற்றுப் பழக்கம் குறைந்தபின் பணம் தோன்றியது. ஆனால், மனிதன் நிலையாகத் தங்கி விவசாயம் செய்யுமுன் வேட்டையாடும் நாடோடியாய் இருந்தான். அப்போதே நாய் வளர்க்கும் பழக்கம் தொடங்கியது. நாய் வளர்க்கத் தொடங்கியபோதே நாயினால் ஏற்படும் தீங்குகளை அறிந்திருந்தான்.

செல்லப் பிராணிகளை வளர்ப்பதில் பெரும்பாலோர் ஆர்வம் காட்டுகின்றனர். வீட்டுப் பறவைகள், வீட்டுப் பிராணிகளை மட்டுமே வீடுகளில் வளர்க்க உரிமையுண்டு. நன்றியுள்ள பிராணி என்பதால் பெரும்பாலோர் நாய் வளர்க்கின்றனர். சிலருக்கு நாயைப் பிடிக்காது.

நாய்களுக்கு ரேபிஸ் நோய் வருவதை வெறி பிடித்துள்ளது என்கின்றோம். வெறிநாய் கடித்தால் மனிதனுக்கும் ரேபிஸ் நோய் ஏற்படும். நோய் பிடித்த குட்டி நாய் கடித்தால்கூட அது மனிதனைப் பாதிக்கும். நம் உடலில் உள்ள புண்ணை வெறிநாய் நக்கினாலும் நம்மை நோய் தாக்கும். நாயின் நகக்கீறல் நம்மீது பட்டாலும் ஆபத்துதான்.

மனித உடம்பில் எந்த இடத்தில் நாய் கடித்ததோ அந்த இடத்தை வைத்துத்தான் விசத்தின் வீரியம் நம் உடலில் செயல்படும். இதனால் கடிபட்ட சில மாதங்கள் அல்லது ஒரு வருடம் வரை விஷம் உடலில் இருக்கும். வெறி நோய் வைரஸ் நரம்பு மண்டலத்தைத் தாக்கிவிட்டால் இறப்பை நெருங்கிவிட்டதாக அறியலாம்.

நாட்டு மருத்துவத்தை நம்பும் சிலர் நாய்க்கடி ஏற்பட்டால் ஆறு மாதங்களுக்கு கோழிக்கறி சாப்பிடக்கூடாது. அகத்திக்கீரை சாப்பிடக்கூடாது. கடித்தவுடன் நல்லெண்ணெய், முட்டை சாப்பிட வேண்டும் என்பார்கள். நாய்க்கடி பட்டவுடன் உடனே மருத்துவமனைக்குச் சென்று ஊசி போடுவதே சிறந்தது.

## இயர்போன் கூடவே கூடாது!



குழந்தைகள் பாடல் கேட்க அல்லது போனில் பேச என இயர் போனைப் பயன்படுத்த அனுமதிக்காதீர்கள்.



தவிர்க்க முடியாத சூழலில்கூட இயர் போனுக்கு பதில் ஹெட் போன்களைப் பயன்படுத்தலாம்.



# இந்தோனேசிய நிலநடுக்கம்
## – திருத்தந்தையின் தந்தி

இந்தோனேசியாவின் லொம்போக் தீவில், 5-8-2018, 7.0 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திருத்தந்தை அனுப்பிய அனுதாபத் தந்தி.

இந்தோனேசியாவில் நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடன் திருத்தந்தையின் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் வண்ணம், அந்நாட்டிற்கு, திருப்பீடத்திலிருந்து செய்தியொன்று அனுப்பப்பட்டுள்ளது.

திருத்தந்தையின் பெயரால், திருப்பீடச் செயலர், கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்களால் அனுப்பப்பட்டுள்ள இச்செய்தியில், இந்தோனேசிய நிலநடுக்கம் குறித்து திருத்தந்தை ஆழந்த வருத்தம் கொண்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட அனைவரோடும் தன் ஒருமைப்பாட்டையும், அனுதாபத்தையும் அவர் தெரிவிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இறந்தோரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும், காயமுற்றோர் நலமடையவும், தங்கள் உறவினர்களை இழந்தோர் ஆறுதல் பெறவும், திருத்தந்தை செபித்துவருவதாக இந்த அனுதாபச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் லொம்போக் (Lombok) தீவில், 7.0 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால், ஏறத்தாழ 100 பேர் உயிரிழந்திருக்கலாம் என்றும், இந்த எண்ணிக்கை இனியும் உயரும் என்றும் ஊடகங்கள் கூறிவருகின்றன.



# திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“சாட்சிய வடிவங்களில் மிக சக்தி வாய்ந்தது, பிறரன்பு, ஏனெனில், அதன் வழியே, கடவுளின் அன்பை மக்கள் காண்கின்றனர்”

“வானுலக வாழ்விற்கான நம் முன்பதிவு திருநற்கருணையேயாகும் முடிவற்ற வாழ்விற்கான நம் பயணத்தில் இயேசு நம்மை வழிநடத்திச் செல்கிறார்”

“வாழ்வின் தினசரி தேவைகள் குறித்து நாம் கவலைப்படுவது தவறல்ல, ஆனால், இயேசுவுடன் நம் உறவை பலப்படுத்துவது அதைவிட முக்கியத்துவம் நிறைந்தது.”

“வாழ்வின் அப்பமான இயேசு, நம் உடல் தேவைகளையல்ல, மாறாக, நம் ஆன்மீகத் தேவைகளை நிறைவுச் செய்ய முன்வருகிறார்”

“மரணமே அனைத்திற்கும் இறுதி என்ற எண்ணத்தில் நம்மை நிலைநிறுத்த தீமை முயல்கிறது. ஆனால், உயிர்த்த கிறிஸ்து, நிலைவாழ்வின் புதிய பரிமாணத்தை வெளிப்படுத்துகிறார்”

“திருநற்கருணை எனும் கொடைக்கு நன்றி சொல்வோம், நம் வாழ்வும் உடைக்கப்பட்டு நம் சகோதர சகோதரிகளுக்கு பயனுடையதாக பகிரப்பட வேண்டும்”

# மூளை வளர்ச்சி குன்றிய இளைஞரின் சாதனை



மூளை வளர்ச்சி குன்றிய இளைஞர் கம்ப்யூட்டரில் அனைத்துலக தரத்தில் ஓவியம் வரைந்து கிராபிக்ஸ் செய்து சாதனை படைக்கிறார்.

அவர் பெயர் சாமுவேல், மிசோராம் மாநிலத்தை சேர்ந்தவர். இவரால் நடக்க முடியாது, தன் உடலை அசைக்க முடியாது. தனக்கான எந்த வேலையையும் அவரால் செய்ய முடியாது. இவரது வலது கையை எடுத்து கணனி மவுஸ் மீது வைத்தால் போதும் தனது கையை மெல்ல மெல்ல அசைத்து கணனியில் புதிய உலகை படைக்கிறார். பெங்களூரில் செயல்படும் சிபிஆர் நிறுவனம், இவரை ஊக்கப்படுத்தி உள்ளிருக்கும் திறமையை வெளிக்கொணர உதவியுள்ளது. பெங்களூரில் நடந்த விழாவில் இவருக்கு லோக் ஆயுக்தா முன்னாள் நீதிபதி சந்தோஷ் ஹெக்டே, சிபிஆர் நிறுவன நிர்வாக இயக்குனர் நிக்கோலஸ் ஆகியோர், சாமர்த்தியா என்ற விருதையும், 15 ஆயிரம் ரூபாய் நிதியையும் வழங்கி கௌரவித்தனர். இதேபோல் 15 மாற்று திறனாளிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

உடலில் குறை இருந்தாலும், உள்ளம் உறுதியாக இருந்தால், எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு, சாமுவேல் நல்லதோர் எடுத்துக்காட்டு.

# இளையோர் உலக நாளில் பங்கேற்க 105 நாள் கடல்பயணம்



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 17 இளையோர், பானமா நாட்டில் நிகழும் இளையோர் உலக நாள் நிகழ்வுகளில் கலந்துகொள்ள, 105 நாள் கடல்பயணம் மேற்கொள்கின்றனர்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 17 இளையோர், 2019ம் ஆண்டு சனவரி மாதம், பானமா நாட்டில் நிகழவிருக்கும் இளையோர் உலக நாள் நிகழ்வுகளில் கலந்துகொள்ள, மூன்று படகுகளில், 105 நாள் கடல்பயணம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளனர் என்று, இத்தாலிய இதழ் SIR கூறியுள்ளது.

நான்கு கடல்பயண வல்லுநர்கள், மற்றும் ஓர் ஆன்மீக வழிகாட்டியுடன், பிரான்ஸ் நாட்டின் Brest துறைமுக நகரிலிருந்து, ஆவணி 31ம் திகதி, 17 இளையோர், தங்கள் பயணத்தைக் தொடக்குகின்றனர்.

பிரான்ஸ் நாட்டு ஆயர் பேரவையில், இளையோர் பணிக்கு பொறுப்பான ஆயர் Marc Aillet அவர்களின் ஆசியுடன், தங்கள் கடல்பயணத்தைத் தொடக்கும் இளையோர், ஸ்பெயின் நாட்டின் Santiago de Compostela திருத்தலத்திலும், போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா அன்னை திருத்தலத்திலும் தங்கிச் செல்கின்றனர்.

ஆபத்துக்கள் நிறைந்த இந்தக் கடல் பயணத்தில், ஒவ்வொரு நாளும், செபமாலை, விவிலிய வாசகம், மற்றும் தனிப்பட்ட தியானங்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதென்றும், தங்கள் பயணத்தில், பானமா பேராயர் José Domingo Ulloa Mendieta அவர்கள் வழங்கிய அந்திகுவா அன்னை மரியாவின் திரு உருவம் தங்களுடன் பயணம் செய்யும் என்றும் இவ்விளையோர் கூறியுள்ளனர்



# செபத்தால் ஆதரவளியுங்கள், கர்தினால் கூட்ஸ்

கடந்த ஆனி 29ம் திகதி புதிய கர்தினாலாக உயர்த்தப்பட்ட காரச்சி பேராயர் ஜோசப் கூட்ஸ் அவர்கள், பாகிஸ்தான் ஆயர்கள் அனைவரோடும் இணைந்து, நன்றி திருப்பலி நிறைவேற்றினார்.

நான் மிகவும் திறமையானவன் என்பதற்காக அல்ல, மாறாக, திருத்தந்தைக்கு நெருக்கமாக இருந்து, பணியாற்றுவதற்காக, கடவுள் என்னைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்று தான் கருதுவதாக, பாக்கிஸ்தானின் புதிய கர்தினால் ஜோசப் கூட்ஸ் அவர்கள் கூறியுள்ளார். பாக்கிஸ்தான் ஆயர்கள் அனைவரோடும் இணைந்து, கராச்சி புனித பெட்ரிக் பேராலயத்தில் நன்றி திருப்பலி நிறைவேற்றிய, கராச்சி உயர்மறைமாவட்ட பேராயர், கர்தினால் ஜோசப் கூட்ஸ் அவர்கள், தான் கர்தினாலாக உயர்த்தப்பட்டது, தலத்திருஅவைக்கும், பாகிஸ்தானுக்கும் மதிப்பை வழங்குவதாய் உள்ளது என்று தெரிவித்தார்.

பாக்கிஸ்தானின் அரசு மற்றும் சமயத் தலைவர்களிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும்வேளை, கர்தினாலாக, தான் உரோமையிலிருந்து திரும்பியபோது, கராச்சி விமான நிலையத்திலிருந்து, புனித பாட்ரிக் பேராலயம் வரை, தனக்குக் கொடுக்கப்பட்ட அமோக வரவேற்பை நினைவுகூர்ந்தார், கர்தினால் ஜோசப் கூட்ஸ். கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாமல், ஏனைய மதத்தவரும் தனக்கு அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்த, கர்தினால் ஜோசப் கூட்ஸ் அவர்கள், அனைத்து விசுவாசிகளும் தனக்காகச் செபிக்கவும், செபத்தால் தனக்கு ஆதரவு அளிக்கவும் கேட்டுக்கொண்டார்.



# கடவுள் செய்த நன்மைகளை நினைத்திருக்க....

நம் வாழ்வில் கடவுள் செய்த அழகான செயல்களை மறவாமல் இருக்குமாறு திருத்தந்தை அறிவுறுத்துகின்றார். “நம் வாழ்வில் கடவுள் எத்துணை அழகான செயல்களை செய்திருக்கின்றார்? இதுவே கடவுள் கொடுத்த விடுதலை, கடவுள் பல அழகான செயல்களை செய்து நம்மை விடுவிக்கின்றார். நாம் நம்மையே மீட்டுக்கொள்வதில்லை. சொந்த முயற்சியில் மீட்படைவதில்லை. மாறாக, நம்மிலிருந்து ஒரு கூக்குரல் எழுகிறது. ‘ஆண்டவரே என்னை மீட்டருளும். ஆண்டவரே எனக்கு வழிகாட்டும் ஆண்டவரே. எனக்கு சிறிது மகிழ்ச்சி தாரும்’ என நாம் குரலெழுப்புகின்றோம். இது நம்மை பொருத்தது. தன்னலத்திலிருந்தும், பாவத்திலிருந்தும், அடிமைச் சங்கிலியிலிருந்தும் விடுவிக்குமாறு கேட்பது. இந்த கூக்குரல் இன்றியமையாதது. ஏனெனில் இது ஒரு செபம். நம்மில் இன்னும் விடுதலை அடையாமல் இருக்கும் நம்மை ஒடுக்குவனவற்றை நாம் அறிந்துள்ளோம் என அக்குரல் தெளிவுபடுத்துகின்றது. கடவுள் அந்தக் கூக்குரலுக்காகக் காத்திருக்கின்றார். ஏனெனில அவரால் நம் கட்டுகளை முறிக்கவும் விரும்புகின்றார். கடவுள் நமக்கு உயிரளித்தது, ஒடுக்கப்பட்டிருப்-பதற்காக அல்ல, மாறாக, விடுதலை அடைந்தவர்களாக, நன்றியோடு வாழ இதன் வழி நமக்குக் கணக்கிட முடியாத அளவிற்கு கொடுத்துள்ள கடவுளுக்கு மகிழ்ச்சியில் கீழ்ப்படிந்து வாழவே கடவுள் நம்மை அழைத்துள்ளார். நம் கட்டுகளையெல்லாம் அவிழ்த்து, அதன் விளைவாக நாம் அவருடைய கட்டளையெல்லாம் அவிழ்த்து, அதன் விளைவாக நாம் அவருடைய கட்டளைகளை பிள்ளைகளுக்குரிய சுதந்திரத்துடன் பின்பற்ற விரும்புகின்றார்.



# Knock திருத்தலம் திருத்தந்தைக்காகக் காத்திருக்கின்றது

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இம்மாதம் 26ம் திகதி செல்லவிருக்கும் அயர்லாந்தின் Knock அன்னைமரியா திருத்தலத்தில் “விசுவாசமும் குடும்பமும்” என்ற தலைப்பில் நவநாள் பக்தி முயற்சிகள் தொடங்கியுள்ளன. அயர்லாந்தின் டப்ளின் நகரில், ஆவணி 21ம் திகதி, 9வது உலக குடும்பங்கள் மாநாடு தொடங்கவிருக்கும் வேளை, அந்நாட்டின் Knock தேசிய அன்னைமரியா திருத்தலத்தில், இக்குடும்ப மாநாட்டை மையப்படுத்தி, பாரம்பரிய நவநாள் பக்தி முயற்சிகள் 14.8.2018 தொடங்கியுள்ளன.

“குடும்பத்தின் நற்செய்தி, உலகிற்கு மகிழ்வு” என்ற தலைப்பில் நடைபெறும், இந்த உலக குடும்பங்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக, ஆவணி 25, டப்ளின் செல்லும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 26ம் திகதி ஞாயிறன்று Knock அன்னைமரியா திருத்தலம் செல்வார்.

## Knock அன்னை மரியா காட்சி

அக்காலத்தில் கிராமமாக இருந்த Knockன் பங்கு ஆலயத்திற்கருகில், 1879ம் ஆண்டு ஆகஸ்ட் 19ம் திகதி, ஆறு முதல் 75 வயதுக்குட்பட்ட 15 பேர், கனமழைக்கு ஒதுங்கிக்கொண்டிருந்தனர். அந்நேரத்தில், அன்னை மரியாவை அவர்கள் காட்சியில் கண்டனர். ஏறத்தாழ இரண்டு மணி நேரம், மழையில் அன்னை மரியாவைக் காட்சியில் கண்டு அவர்கள் செபித்துக்கொண்டிருந்தனர். அந்நேரத்தில், புனித யோசேப்பும், நற்செய்தியாளர் புனித யோவானும், அன்னை மரியாவுக்கு அருகில் அமைதியாக இருந்துள்ளனர். காட்சி முடிந்தபோது, கனமழை பெய்தும், அந்த 15 பேரும் சிறிதளவுகூட நனையவில்லை எனச் சொல்லப்படுகின்றது.

அயர்லாந்து நாடு முழுவதையுமே உலுக்கிய இக்காட்சி, Knock நகரின் வரலாற்றைச் சிறப்பாக்கியது. அன்று முதல் ஒவ்வோர் ஆண்டும் 15 இலட்சத்துக்கு அதிகமான திருப்பயணிகள் அத்திருத்தலம் செல்கின்றனர். 1940ம் ஆண்டில் ஐம்பதாயிரம் அயர்லாந்து மக்கள், திருப்பயணமாக அங்குச் சென்று, உலக அமைதிக்காகச் செபித்தனர். 1954ம் ஆண்டில் திருத்தந்தை 12ம் பயஸ் அவர்களால் மரியா ஆண்டு அறிவிக்கப்பட்டதையடுத்து, இலட்சக்கணக்கான திருப்பயணிகள் Knock அன்னை மரியா திருத்தலம் சென்றனர். அவ்வாண்டில், திருத்தந்தை 12ம் பயஸ் அவர்கள் சார்பாக, அன்னை மரியாவுக்கு மணிமகுடம் சூட்டப்பட்டது

# உவந்தளித்தலில் மகிழ்ச்சி

**"மனவருத்தத்தோடோ, கட்டாயத்தினாலோ கொடுக்க வேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்குரியவர்"**
2கொரி.9:7.





விவசாயத்தையே மையமாகக்கொண்ட கிராமம் அது. பிறேம்நாத் எப்பொழுதுமே கிராமத்தில் சிறந்த விவசாயி என பரிசில் பெற்றான். ஒரு முறையல்ல பலமுறை தொடர்ந்து பெற்றுக்கொண்டேயிருந்தான். ஆகவே ஒரு முறை பரிசில் வழங்கும் நிகழ்வில் நடுவர்களில் ஒருவர் நீண்டகாலமாகக் கேட்கத் தேடிய வினாவை எழுப்பினார். "பிறேம் அவர்களே சிறந்த விவசாயத்துக்கான பரிசிலை எப்பொழுதும் கையகப்படுத்துகின்றீரே, இதன் இரகசியம் என்ன?" என்று வினவினார். பதிலும் உடனே வந்தது.

"ஒவ்வொரு முறையும் அறுவடைக்குப் பின் நல்ல கோதுமை மணியை விதைக்காகச் சேகரித்து வைப்பேன். விதைக்கும் காலம் அண்மித்ததும் மிகச்சிறந்த விதையை என் அயல் விவசாயிகளுக்கு கொடுத்துவிடுவேன். பின்னர் நானும் விதைப்பேன். சூழவுள்ள இடங்களில் பயிர் செழிப்பாய் வளரும் காலத்தில் காற்றில் கலந்து செல்லும் மகரந்தம் என் நிலத்தின் பயிரையும் வந்தடைந்து கதிர்களைக் கருவூட்டும். ஆகவே எனது முயற்சியும், தொழில்நுட்பமும், மனிதநேயமும், கடவுளின் ஆசியும் ஒருங்கிணைந்து இறுதியில் சிறந்த அறுவடை எனக்கே கைகூடுகிறது. பிறரை வாழவைக்கும் பொழுதுதான் என்வாழ்வும் மலர்கிறது என்பதன் தாற்பரியத்தைக் கற்றுக்கொண்டேன்" எனப் புன்முறுவலுடன் விடை பகிர்ந்தார் பிறேம்.

இயற்கை தன்னைத் தாராளமாகவே நமக்கு உவந்தளிக்கின்றது. ஒளிர்விடும் சூரியன், வீசும்காற்று, குளங்கள், பாய்ந்தோடும் ஆறுகள், பழம் கொடுக்கும் மரங்கள், நறுமணம் வீசும் பூஞ்செடிகள், பாடும் பறவைகள், அலைமோதும் கடல்கள் அனைத்தும் அளந்து கொடுப்பதில்லை. எவருக்கும் வேற்றுமை பாராட்டுவதுமில்லை. மனிதன் வாழ நிறைவாகவே தம்மை உவந்தளிக்கின்றன. இயற்கையின் ஊற்றும் இருப்பிடமுமான இறைவன் தன் படைப்புக்கள் நலமுடன் வாழ இயற்கை வழியாகத் தன்னை நிறைவாக வாரிவழங்கிக் கொண்டிருக்கின்றார்.

பாவத்தின் வலையில் சிக்கிக்கொண்டிருக்கிறது மனித இயல்பு. பிறர்நல்வாழ்வில், முன்னேற்றத்தில் மகிழ்ந்து அவர்களின் நல் முயற்சிகளுக்கு ஒத்தாசை புரிந்து, உரமூட்டுபவர்களுள் நானும் ஒருவன் என்று சொல்லக்கூடியவர் எத்தனைபேர்?. பெறுவதில் எத்துணை இன்பம். கொடுப்பதில் எவ்வளவு தயக்கம்!. தன் நல்வாழ்வில் எத்துணை ஆர்வம்? பிறர்வாழ்வை கெடுப்பதில் எத்தனை சூழ்ச்சிகள்? தன்னைவிட பிறர் முன்னேறுவதைக் கண்டு பொறாமை பொங்கியெழ, செய்வினை சூனியம் செய்பவர்களுக்கும் குறைவில்லையே! பிறரை வாழவைப்பதில் அல்ல பிறரை அழிப்பதிலேயே, தனி மனிதனும் சரி, நாடுகளும் சரி தங்கள் பணத்தையும் பொருளையும் தாரைவார்க்கின்றனரே? வரலாறு இதற்கு தரும் சான்றுகளுக்கு கணக்கில்லை.

நாலாம் நூற்றாண்டில் செசாரியா-கொன்ஸ்ரான்திநோப்பிளைச் சேர்ந்த தவமுனிவர் பசில்விட்டுச் சென்ற அறிவுரைகள் இன்னும் உயிரோட்டம் உள்ளவையாகவே இருக்கின்றன.

**"இவவுலகில் ஒவ்வொரு மனிதனும் தனக்கு**
**தேவையானதை மட்டும் எடுத்துக்கொண்டு**
**மீதியனைத்தையும் தேவைப்படுவோர்க்குப்**
**பகிர்ந்தளித்தால் ஏழை பணக்காரன் என்ற**
**பேதமே இல்லாதொழிந்துவிடும்."**

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் இதே கருத்தை மேலும் தெழிவுறச் சொல்லுகிறார்.

**"உனக்கு வேண்டியவற்றைப் பயன்படுத்தியபின் நீ**
**பத்திரப்படுத்தி வைக்கும் உணவுப் பொருட்கள்**
**பசியால் வாடுபவனுக்கே சொந்தம்.**
**நீ பாவிக்காது உன் அலுமாரியில் அடுக்கிவைக்கும்**
**உடைகள் ஆடையற்றவனுக்கே சொந்நம்.**
**நீ பயன்படுத்தாது நிலத்தில் புதைத்து வைக்கும்**
**பொன்னும் வெள்ளியும் ஏழையின்**
**மேம்பாட்டிற்க்குரியதே".**

எவ்வளவு ஆணித்தரமான, சவால்விடுக்கும் வார்த்தைகள்.

மூபெரும் அறிஞர் திருவள்ளுவரும் ஈகை எனும் தலைப்பில் இதே கருத்தினை மிகத்தெளிவாகக் காட்டுகிறார்.

**"வறியவர்க்கென்று ஈவது ஈகை மற்றெல்லாம் –**
**குறியெதிர்ப்பை நீர் துடைத்து."**

எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது ஏழை எளியவர்க்கு உவந்தளிப்பதே ஈகையாகும் (குறள்..221).

**"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்தாமுடமை**
**வைத்திருக்கும் வன்கணவர்".**

தாம் சேர்த்து வைத்ததை பிறருக்கு கொடுப்பதில் மகிழ்வுறாது பின் அதை இழந்துவிடுபவர் ஈகைப் பண்பில் இன்புறாதவரே (குறள் 228).

பிறருக்கு நல்லதைக் கொடுப்பது, சிறந்ததைக் கொடுப்பது, அதுவும் தாராளமாய்க் கொடுப்பது ஒரு சாதாரண செயலல்ல. நமது சுயநலனையே முனைப்பாகக் கொண்டு அதன் பிடியில் சிக்குண்டிருக்கும் நமக்கு பிறர் நலம் கருதிச் செயல்படுவது ஒரு சவாலாகவே அமைகின்றது. சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு அடிப்படைக் காரணம் நமக்குள்ளதை பகிராமையே.

**"மனவருத்தத்தோடோ கட்டாயத்தினாலோ கொடுக்க**
**வேண்டாம். முகமலர்ச்சியோடு கொடுப்பவரே**
**கடவுளின் அன்புக்குரியவர்"** 2கொரி.9:7.

யேசுவின் எல்லைகடந்த பகிர்ந்தளிப்பு நமக்கும் அளவுகோலாக அமையுமா?

........................

**அருட்பணி. ஜே.திருச்செல்வம்.அ.ம.தி.**

........................

# நம் வாழ்வில்

## திரும்பப் பெற முடியாதவை



**தவற விட்ட கல்வி**



**கடந்துவிட்ட நேரம்**



**பேசி விட்ட வார்த்தை**



**இழந்து விட்ட இளமை**



**உடலை விட்ட உயிர்**

# சிந்தனைக்கு

**நம்பிக்கை என்ற நார் மட்டும் உன்**
**கையில் இருந்தால்**
**உதிர்ந்த பூக்கள் கூட ஓடிவந்து**
**ஒட்டிக்கொள்ளும்.**

**கோபப்பட்டு வென்றுவிட்டாய்**
**என்றால் உன் கோபம் பெரியது என்று**
**அர்த்தமல்ல...**
**அதை தாங்கிக் கொண்டவர்களின்**
**பொறுமை பெரியது என்று அர்த்தம்**

**கோபம்**
**என்னும்**
**கொடிய**
**அமிலமானது**
**அது**
**எறியப்படும்**
**இடத்தைவிட**
**அதை வைத்துக்-**
**கொண்டிருக்கும்**
**கரத்தையே பெரிதும்**
**நாசப்படுத்தும்.**



# கண்ணீர் அஞ்சலி

**அன்பே உருவாய்**
**தயவாய் பேசி**
**ஒளியாய் விளங்கி**
**அருளைப் பொழிந்த**
**அருட்தந்தை நிலான்**
**இருளைப் போக்கும்**
**தூய வார்த்தை**
**அருளாய் மலர்ந்த**
**இனிய பண்பு**
**இயேசுவில் வாழ்ந்த**

**அருட்தந்தை நிலான்**
**இயேசுவை ஏற்று**
**இனியதாய் மகிழ்ந்து**
**இயேசுவின் பாதையை**
**வாழ்ந்தே காட்டி**
**மலராய் மணம் வீச**
**தேடியே சென்றார்**
**இயேசுவின் பாதம்**

.........

மாக்ரட் ஜயசீலி ஜோன்

..........

# மடு திருத்தலத்தை புனித பூமியாக பிரகடனப்படுத்தும் திட்டங்கள் வெற்றியடைய அன்னையிடம் பிரார்த்திக்கின்றோம்.

## மருதமடுத் தாயின் திருவிழா - ஆவணி 15




**SHALOM ENTERPRISE**

ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் உலர்ந்த கடல் உணவுகள்

ஸ்பெல்மன் பர்னாந்து
spelman@sltnet.lk

முகவரி: 270/7, 4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு - 11, இலங்கை.
தொ.பே: 11 2385888,
தொலை நகல்: 11 2336041

**Aldo Dry Fish Stores**

ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் முகவர்

முகவரி: இல 32, ஐ.எக்ஸ்.பெரேரா வீதி,
கொழும்பு- 11, இலங்கை.
தொ.பே: 011 2344963, 011 2440601
தொலை நகல்:- 2393845
Email:- aldo@sltnet.lk


## மருதமடு அன்னையே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.


**M.D.S**

DRY FISH GENERAL MERCHENTS

முகவரி: 190, பேங்சோல் வீதி, கொழும்பு -11.
தொ.பே இல: 011 2343353, 011 2348184,
வீட்டு தொ.பே இல: 011 2452252

**Reglas Company**

முகவரி: 198G, பேங்சோல் வீதி, கொழும்பு -11.
தொ.பே இல: 011 2424642,
072-8273100,076-9113391

**B.K.B Son's**

முகவரி: 131, பேங்சோல் வீதி,
கொழும்பு -11.

**J. REMITTA STORES**

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி

உரிமையாளர் J.B. ராஜன் கூஞ்ஞ

முகவரி: 218, பேங்சோல் வீதி, கொழும்பு -11.
தொ.பே இல: 011 2344287,
தொலை நகல் : 2345361
Email : jrs.coonghe@gmail.com

**J.J. Enterprises**

கொழும்பு -11.

**BRITTOS**

**HERELD ENTERPRISES**

In God We Trust

**Ransca Greetings**

முகவரி: 142, 144, புனித அந்தோனியார் மாவத்தை, கொழும்பு -13.
தொ.பே இல: 2430125, 2332678
Email : ransca.greetings@gmail.com


“எம் தாயே
உம் பாதம் ஓடி
வந்தோம் துணை
தந்து காப்பாயே
எந்நாளுமே”

(N2548)



# லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம்

✷ கல்விக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ள டிலாசால் துறவற சபைச் சகோதரர்களால் க.பொ.த சா/த, க.பொ.த உ/த முடித்தவர்கள், இளைஞர்கள், பெற்றோர், முதியோருக்காக நடாத்தப்படும் ஆங்கில பயிற்சி நெறி.

✷ கண்கவரும் ஓவியத்தைப் பார்ப்பது போன்று, இந்து சமுத்திரத்தைப் பார்த்தபடி மகிழ்ச்சியாக இலகுவாகக் கற்றுக்கொள்ள வந்து அனுபவித்துப் பாருங்கள்.

**பயிற்சியின் முடிவில் டிப்ளோமாச் சான்றிதழ் வழங்கப்படும்.**

தொழில்புரிவோர், மற்றும் வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஆங்கில வகுப்புக்கள் வைகாசி மாதம் 5ந் திகதி காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்

**பயிற்சி நெறியில் உள்ளடக்கப்படும் விடயங்கள்**

| | | |
|---|---|---|
| 1. செவிமடுத்தல் | 2. கதைத்தல் | 3. வாசித்தல் |
| 4. இலக்கணம் | 5. சொல்லகராதி | 6. வாக்கிய அமைப்பு |
| 7. மரபுத்தொடர் | 8. நேர்த்தியான ஆங்கிலம் | 9. சொல்லிலக்கணம் |
| 10. வார்த்தை விளையாட்டு | 11. கலாச்சார வாழ்க்கை மதிப்பீடு | 12. ஆங்கில பாடல்கள் |
| 13. ஆளுமை வளர்ச்சி | 14. உணவுக் கருவிகளின் பாவனை முறை | |

**பயிற்சிக் காலம் – 3 மாதங்கள்**

புரட்டாதி மாதம் 7ந் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 7ந் திகதி 2018 வரை திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை

(N1504)

**தங்குமிட வசதிகள் இருபாலருக்கும் செய்துகொடுக்கப்படும்**

✷ விண்ணப்பப் படிவங்களைத் தபால் மூலம் பெற்றுக் கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
அருட்சகோ. அகஸ்ரின் ஜெயந்த சில்வா, 071 – 2188551

✷ பதிவு செய்தலும், தரப்படுத்தலுக்குமான பரீட்சையும் 2018, புரட்டாதி மாதம் 7ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு 130, டிலாசால் வீதியில் அமைந்துள்ள டிலாசால் இல்லத்தில் நடைபெறும்.

**அருட்சகோதரர். அகஸ்ரின் ஜெயந்த சில்வா F.S.C, இயக்குனர், லசாலியன் ஆங்கிலப் பயிற்சி நிலையம், 130, டிலாசால் வீதி, முகத்துவாரம், கொழும்பு – 15. தொ.பேசி.இல 071–2188551**

# மாத்தறை மாதா தேசிய திருத்தலம்
# 111வது வருடாந்த திருவிழா – 2018

## புரட்டாதி 07,08 மற்றும் 09

- ஆவணி மாதம் 30ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொடியேற்றமும், திருப்பலியும்
- ஆவணி 31ஆம் திகதி தொடக்கம் புரட்டாதி 06ஆந் திகதி வரை தினமும் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையும், நவநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும்.
- புரட்டாதி 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 4.30 மணிக்கு
  நற்கருணை ஆராதனை மற்றும் நற்கருணை பவனி காலி மறைமாவட்ட குரு முதல்வர் அதி வண. சாள்ஸ் ஹேவாவசம் அடிகளாரின் தலைமையில் நடாத்தப்படும்.
- புரட்டாதி மாதம் 08ஆம் திகதி – சனிக்கிழமை
  காலை 8.30 திருப்பலி, காலை 10.00 திருப்பலி, காலை 11.30 திருப்பலி
- புரட்டாதி 08ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு
  திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயரையும் வரவேற்றல்.



**மாலை ஆராதனை: புரட்டாதி 08ஆம் திகதி சனிக்கிழமை 4.15 மணிக்கு**

திருச்செபமாலை தியானம், மாலை ஆராதனை மற்றும் மாத்தறை அன்னையின் திருச்சுருப பவனி
திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகையின் தலைமையில்

**திருவிழா திருப்பலி : புரட்டாதி 09 ஞாயிறு காலை 8.00 மணி**

**காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை மற்றும், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை ஆகியோரின் தலைமையில்**

* புரட்டாசி 08ஆம் திகதி சனிக்கிழமை சிலாபத்திலிருந்து (பங்கதெனிய) மாத்தரை வரை விசேட புகையிரத சேவை ஒன்று நடைபெறும்.
* புரட்டாசி 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாத்தரையிலிருந்து சிலாபம் (பங்கதெனிய) வரை விசேட புகையிரத சேவை ஒன்று நடைபெறும்.
* புரட்டாசி மாதம் 06ஆம் திகதி வியாழக்கிழமை முதல் பக்தர்களுக்காக பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**உங்கள் அனைவரையும் வரவேற்கின்றோம்**

**ஏனைய திருப்பலிகள்**
**புரட்டாசி 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை**

காலை 4.00 திருப்பலி – சிங்களம்
காலை 5.00 திருப்பலி – தமிழ் மற்றும் சிங்களம்
காலை 6.00 திருப்பலி – ஆங்கிலம் மற்றும் சிங்களம்
நண்பகல் 12.00 திருப்பலி – சிங்களம்
மாலை 5.00 திருப்பலி – சிங்களம்

(Q18N3526)

திருத்தலப் பரிபாலகர் அருட்தந்தை கொலின் நிக்சன் அடிகளார் மற்றும் உதவிப் பங்குதந்தை அருட்தந்தை ரங்கிக ஸ்ரீவந்த அடிகள்
official web : www.ourladyofmathara.lk
E-mail: fradministrator@ourladyofmatara.lk
frcolinm@gmail.com
தொ.பேசி 041-2222056


INTERNATIONAL DENTAL CARE
Professional Dental Centre in Sri Lanka

*International Dental Care Hospitals (Pvt) Ltd.*

# சர்வதேச பல் வைத்தியசாலை தனியார் நிறுவனம்




**கொழும்பு கிளை**
இல. 67, W.A. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு – 06, இலங்கை.
தொ.இல : +(94) 11 250 7070,
: +(94) 11 438 0803
கையடக்க தொ.இல : +(94) 77 013 9372



**யாழ்ப்பாணக் கிளை**
இல. 84, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.
தொ.இல : +(94) 21 222 0833,
: +(94) 21 492 3353
கையடக்க தொ.இல : +(94) 77 003 154



**வவுனியா கிளை**
ராஜ் மருத்துவ கூடம்
இல. 10, பாசார் வீதி, வவுனியா, இலங்கை
தொ.இல : +(94) 24 222 1577,
: +(94) 24 492 5527
கையடக்க தொ.இல : +(94) 77 013 9374



*Whats app & Sms : +94 - 777 - 588729, E-mail : sajeevan27sivaguru@gmail.com,*
*Web : www.internationaldentalsrilanka.com*

(N2525)

✶✶✶ இப்பத்திரிகையின் விளம்பரத்தினை எமது நிறுவனத்திற்கு கொண்டுவருபவர்களுக்கு 10% விலைக்கழிவு கொடுக்கப்படும்.

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்